செப்டெம்பர் 2015
OLIARAZI
மகளிர் மாத சஞ்சிகை

# ஒளிஅரசி

இல்லத்தரசிகளின் தோழி

ஒளி - 02 இதழ் - 10
பக்கங்கள் : 68 + viii

அரசியலோ பாலியலோ
கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பொழுதுபோக்கு


ரூபா 75



மலரட்டும் சமாதானம்



பெற்றோர்களே அவதானம்
லக்சினிக்கு நடந்தது என்ன?



இளைஞர்களே
எனது கனவு



சர்வதேச சாதனை

Top 4 in August



உலகை வசமாக்கும்
இசை

Free
சுய தொழில் கலைகள்
இணைப்பிதழ்

O/L
(கணிதம், விஞ்ஞானம்)
எதிர்பார்க்கை வினாக்கள்



மறைந்தும் எம்முடன் வாழும்
பெண்ணிய குரல்

மாணவர்களுக்கான
போட்டிகள்
விபரம் உள்ளே
பக்கம் 23



முல்லைத்தீவின் முத்து

முகவரி தந்த
முதல்வனின் கிராமத்தில்
ஓர் அலசல்



சிறப்புக் கவிஞர்

# 6 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



செல்வன்

## கிரிதரன் கரீஷ்கன்

03.9.2015 அன்று தனது
பிறந்த தினத்தை தனது இல்லத்தில்
வெகு சிறப்பாக கொண்டாடுகின்றார்.

கரீஷ்கனை அப்பா (கிரிதரன்) அம்மா (நிரூஜினி)
அக்கா (வர்ணிகா) தம்பி (யுவீஷ்கன்)
அப்பம்மா(கனகம்மா) அம்மப்பா, அம்மம்மா,
பெரிய அத்தை (லதா) மாமா (சுமந்திரன்) அத்தை
(பிரேமா) லண்டனில் வசிக்கும் மாமா
(விக்கினேஸ்வரன்) அத்தை (அமுதா) மாமா
(நகுலன்) அத்தை (கீதா) அத்தான் (நேருஜன்)
மச்சான் (சஜான்) மச்சாள்மார்கள் (ஜம்சா, டினுசா,
நிதுசா, யுகி) ஆகியோர்

பண்டாரிக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் அருள் கடாச்சம் பெற்று சீரும்
சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.



இல. 286, கண்டி வீதி, வவுனியா,
இலங்கை.
0094776149500, 0094245671354

திரு, திருமதி. கிரிதரன் நிரூஜினி
(கிரி எலக்ரோனிக் சுப்பர் மார்க்கட்)

# உள்ளடக்கம்








04 மகத்துவமாகும் மாற்றங்கள்

தற்கொலைகளைத் தடுப்போம் 05

06 யாழ்ப்பாணத்தில் ஒரு படைவீடு

இதழ்நீர் சுவையானதா? 18

20 கிழவியின் தொண்டு

தாய்மாருக்கான புலமைப் பரிசில் பரீட்சை 24

25 பெண்மை

சுமைகளும் சுகங்களும் 27

44 ஈழத்தமிழருக்கு பிரித்தானியா பாராட்டு


சம்போ பைக்கற்றினால் வந்தவினை 46

48 உலகக்கல்விக் கருத்தரங்கு 2015

மனைவியின் மந்திரம் 52

60 மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி?







# மகத்துவமாகும் மாற்றங்கள்

மாற்றங்கள் ஒன்றே உலகில் மாறாதவை. எந்த ஒரு படைப்பும் அதன் ஆரம்ப நிலையிலிருந்து மாறி பரிணாம வளர்ச்சியடைகிறது. இதுவே உலக நியதி. தனி மனிதனாக இருந்தாலும் சரி, உலகம் முழுவதும் வாழ்பவர்களாக இருந்தாலும் சரி மாற்றங்களை உருவாக்கிக்கொண்டே இருக்கிறார்கள். உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் வாழ்க்கை என்பது பொதுவானது. ஆனால் அவர்களின் தேவைகளும் விருப்பங்களும்விரிந்து செல்லும் போது மாற்றங்கள் உருவாகிறது. இந்த மாற்றங்களில் சமூகத்துக்கு தேவையான மாற்றங்களும் உருவாகின்றன. சமூகத்திற்கு தேவையற்ற மாற்றங்களும் உருவாகின்றன. இன்றைய விஞ்ஞான வளர்ச்சி ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் பல வரவேற்கத்தக்கதாக இருக்கின்றபோதும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தவேண்டிய அந்த மாற்றம் சில சமூக சீரழிவுகளையும் ஏற்படுத்த காரணமாகவும் அமைந்து விடுகிறது. இவ்வாறான மாற்றங்களினூடாகவே அடிமைப்பட்டு அடுப்பங்கரையில் இருந்த பெண்ணினம் விண்வெளியில் சாதனைகளை புரியும் வகையில் வளர்ச்சி கண்டுள்ளது.


அனைத்து துறைகளிலும் மகளிரின் சாதனைகளை சிகரத்தை தொடவைப்பதற்காக அன்றிலிருந்து இன்றுவரை பல சமூக சேவையாளர்கள், பெண்ணியலாளர்கள் அரும்பாடுபட்டு வருகின்றார்கள். புறப்படு பெண்ணே புவியசைக்க, மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா. என்று பல பொன் வாக்கியங்கள் பெண்களின் மகிமையை எடுத்துக்கூறுகின்றன. ஆனால், எழுத்துக்களினாலும் குரல்களினாலும் பல பெண்ணியலாளர்கள் பெண்கள் வன்முறைக்கெதிராக ஓங்கிக் குரல் கொடுத்தபோதும் பெண்களிற்கான விடுதலையையும் உரிமைகளையும் முழுமையாக பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்றே சொல்லவேண்டும். உலகில் நடைபெறக்கூடிய அனைத்து செயல்களையும் ஆக்குபவளும் பெண்ணே. அழிப்பவளும் பெண்ணே. அதனால்தான் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற கூற்று இன்றுவரை நிலவிவருகிறது. ஆகவே, ஒரு பெண்ணால் எதனையும் வெற்றிகரமாக செய்து சாதனைகளை நிலைநாட்ட முடியும்.

காலம்காலமாக பல பெண்கள் கண்ணீருடன் வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் கண்ணீருடனும் பெண்ணினம் காத்துவரும் கண்ணிய உணர்வால்தான் இந்த மண்ணில் மனிதநேயம் உயிர்த்து இருக்கிறது. அனைத்து பெண்களும் அன்பிற்கு அடையாளமாகவும் தெய்வத்திற்கு நிகராகவும் இருக்கும் மென்மையான இறைசக்தி மிக்க பெண் வடிவத்தையும் ஆணாதிக்கத்தையும் தம்மீதான வன்முறையையும் எதிர்க்கும் துணிச்சலான மனநிலையையும் கொண்டிருக்க வேண்டும். பெண்கள் எப்பொழுதும் தன்னம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பெண்களை பரிதாபமான - பரிகாசமான பார்வையில் நோக்குவதை நமது சமூகம் தவிர்த்து கல்வி, பொருளாதார அரசியல் சமூக ரீதியல் சாதனைகள் புரியமுயலும் பெண்களின் மீது மதிப்பு மரியாதை, அன்புகொள்ள வேண்டும். அவர்களின் முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக நிற்கவேண்டும். பெண்களின் முக்கியத்துவத்தை புறக்கணிக்கும் எந்த சமூகமும் வளர்ச்சியடைந்து விடமுடியாது. ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால் இருப்பது ஒரு பெண்தான். தாய், மனைவி, மகள், சகோதரி என்ற பல வடிவங்களைப் பெற்று ஒரு பெண்தான் ஆண் ஒருவரை வழிநடத்திச்செல்கிறாள். எனவே, பெண்களின் உரிமைகளை பேணி பெண்களை ஊக்கப்படுத்தி உயர்வடையச் செய்ய அனைவரும் முன்வரவேண்டும்.




# தற்கொலைகளைத் தடுப்போம்!




உலக தற்கொலை தடுப்பு தினம் செப்டெம்பர் 10 ஆகும். தற்கொலை தடுப்பிற்கான சர்வதேச அமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியன இணைந்து இந்த தினத்தை 2003 ஆம் ஆண்டில் இருந்து நினைவுகூர்ந்துவருகிறது. உலகம் முழுவதும் 40 செக்கன்களுக்கு ஒருவர் என்ற ரீதியில் சராசரி 3,000 நபர்கள் தினமும் தற்கொலை செய்துகொள்கின்றார்கள். அதிலும் முக்கியமாக 15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப் பட்டவர்களே அதிகம் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என அறியப்பட்டுள்ளது. உலக சனத்தொகையில் யுத்தங்கள் மூலம் இறந்தவர்களை விட சுயமாக தற்கொலை செய்த வர்களே அதிகம் என ஆய்வறிக்கைகள் வெளிப்படுத்தி யுள்ளன. தற்கொலை என்பது இறப்புக்களுக்கான காரணத்தில் 13 ஆவது இடத்தை வகிக்கிறது. எனவே, தற்கொலைகளை தடுப்பதற்கு அனைவரும் சேர்ந்து முயற்சிக்கவேண்டும்.

அதிகார நாட்டம், பேராசை, சுயநலம், பொறாமை, பொறுமை யின்மை, சிந்தித்துச் செயற்படாமை, மூடநம்பிக்கை, உணர்ச்சிவசப்பட்டு செயற்படல், ஓய்வின்மை, தெளிவின்மை, இலக்கின்மை, சரியான வழிகாட்டலும் அறிவுறுத்தலும் இன்மை, தன்னம்பிக்கையின்மை, மன உறுதியின்மை, தோல்வியில் துவளல், சோதனைகளை எதிர்கொள்ளும் திடமின்மை, விடாமுயற்சியின்மை, விமர்சனங்களுக்கு அஞ்சுவது, இழப்பைத் தாங்கும் உறுதியின்மை போன்றவை ஒருவரைத் தற்கொலைக்குத் தூண்டலாம். உயிரை மாய்த்துக் கொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? இவர்கள் நினைக் கின்றார்கள் பிரச்சினைகள் தனக்கு மட்டும்தான் வருகிறது என்று. பிரச்சினைக்குத் தீர்வு தற்கொலைதான் என்றால் இன்று உலகில் எவருமே உயிர்வாழ முடியாது. ஒவ்வொருவர் வாழ்விலும் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்துகொண்டுதான் இருக்கின்றது. தற்கொலை முயற்சி செய்பவர்கள் எல்லோ ரும் மன வளர்ச்சி குறைந்தவர்கள் அல்ல. நல்ல மனநலம் உள்ளவர்களும் கூட, தாங்கள் அனுபவித்துவரும் துக்கத்தி லிருந்து, அல்லது மன அழுத்தத்தில் இருந்து விடுதலை பெற தற்கொலையை எளிமையான வழி என்று நினைக்கிறார்கள்.

ஆகவே, எந்தவொரு நபரும் தங்கள் துக்கத்தையோ ஏமாற்றத் தையோ வெளியிடும்போது விமர்சனம் செய்யாமல் முழுக் கவனத்துடன் காதுகொடுத்துக் கேளுங்கள். அவர்களது உணர்வு களை மதியுங்கள். தனக்கென ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வு தற்கொலை முயற்சியில் இருந்து ஒருவரை மீட்கும். அவர் உங்களிடம் பகிர்ந்துகொள்ளும் ரகசியத்தை காப்பாற்றுங்கள். அவரது ரகசியம் உங்கள் மூலம் மற்றவர்களுக்கு வெளிப் படாது என்றும், எந்தச் சூழ்நிலையிலும் உங்களது நட்பு மாறாது என்றும் நம்பிக்கையும் உத்தரவாதமும் கொடுங்கள். அவரிடம் நீங்கள் எத்தனை அன்பும் அக்கறையும் உடையவர் என்பதை வெளிப்படுத்துங்கள். உங்கள் கனிவும் கருணையும் நிறைந்த சொற்கள் அவரது மனப்புண்ணுக்கு ஆறுதல் அளிக்கட்டும். முடிந்தவை முடிந்தவைகளாகவே இருக்கட்டும் என்று கூறி. புதிய கோணத்தில் வாழ்க்கையைப் பார்க்க அவருக்கு உதவுங்கள். ஒருவரது உயிரைக் காப்பாற்றுவதைக் காட்டி லும் மனித நேயம் வேறு ஏதாவது உண்டா? எனவே தற்கொலைகளைத் தவிர்ப்போம். எம்மோடு தற் கொலை தொடர்பாக பேசியவர் களுக்கு, வாழ்க்கையோடு போராடி வெற்றி பெற்றவர்களின் வாழ்வில் சந்தித்த போராட்டங்களை எடுத்து ரைத்து அவர்களின் மன நிலையை மாற்ற உதவலாம். எம்மோடு இருப் போரில் தற்கொலை எண்ணமுடைய வர்கள் என இனங்காண்போரை சிறந்த உளவியல் மருத்துவரிடம் அல்லது ஆலோசகரிடம் கூட்டிச் செல்லலாம். அதேவேளை அவரிற்கு தொடர்ந்து தற்கொலை ஏற்படாத எண்ணம் உருவாகுவதற்கேற்ற வகையில் அவருடைய பிரச்சினை களுக்கு தீர்வுகண்டு சிறந்தொரு சூழலை ஏற்படுத்துதல். போன்றவற்றி னூடாக தற்கொலை செயற்பாடு களை தடுத்து தற்கொலைகள் அற்ற சிறந்த நாடாக எமது நாட்டையும் மாற்றுவோம். ⊖



நல்லூர் திருவிழா
சிறப்புக்கட்டுரை

# யாழ்ப்பாணத்தில் ஒரு படைவீடு

சைவ மதத்தின் கடவுளாக முருகன் வணங்கப் படுகின்றார். முருகனை புகழ்ந்து பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன. முருகன் சிவன் பார்வதியின் மகன் எனவும் முருகனுக்கு வள்ளி, தெய்வானை என இரண்டு மனைவி இருப்பதாகவும் ஐதிக கதைகள் கூறுகின்றது. இலங்கையில் கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி ஆகிய பிரசித்திபெற்ற முருகன் ஆலயங்கள் காணப்படுகின்றன. முருகன் ஆலயங்கள் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா என தழிழர் வாழும் பிரதேசம் முழுவதும் காணப்படுகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நல்லூர் ஆலயமும் மிகவும் பிரசித்திபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற இந்துக் கோயில்களுள் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. நல்லூர் 12 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இந்தக் கோயில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. ஆனால், இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டே சிங்கள அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் சிறீசங்கபோதி எனும் பட்டத்தைக் கொண்ட புவனேகவாகு அல்லது புவனேகபாகு எனப்பெயர் கொண்ட கோட்டே அரசனான, செண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென வேறு சிலர் கூறுகிறார்கள். மடாலயம்போல் காட்சியளித்துக்கொண்டிருந்த இந்த ஆலயத்தை, ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாத்திர விதிக்கமைந்த கட்டட முறைக்கும் மாற்றியமைத்து, இன்றைய நிலைக்குக் கொண்டுவர வித்திட்டவர் ஆறுமுக நாவலர் ஆவார். அவரைத் தொடர்ந்து, அவரது மாணவர்கள் இவ்வாலய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்கள். அதன் பிறகு இவர்களைத் தொடர்ந்து வந்த பரம்பரையினர் இந்த ஆலயத்தை பரம்ரை பரம்பரையாக நிர்வகித்து வருகின்றனர். இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் சிலாவிக்கிரகத்துக்குப் பதிலாக வேல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி பிள்ளையார் முதலான பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயம் கிழக்கிலும், தெற்கிலும் வாசல்களைக் கொண்டுள்ளது. இவற்றின் மேல் பெருங்

கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் தெற்குப் புறத்தில் உள்ள தீர்த்தக்கேணி நன்கு திட்டமிடப்பட்டு, படிக்கட்டுகளும் மண்டபங்களும் கொண்டதாய் அமைக்கப் பட்டுள்ளது. முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுத பாணிக்கு அங்கு சிறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் நல்லூரை மையமாக வைத்து கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், தெற்கில் கைலாசநாதர் கோயிலையும், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயிலையும், வடக்கில் சட்டநாதர் கோயில் என ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் அரண்களை அமைத்திருந் தார்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை இரகுநாத மாப்பாண முதலியார் வம்சத்தினரே பரம்பரையாக நிர்வகித்து வருகின் றனர். மாப்பாண முதலியார் பரம்பரையினால் இக்கோவிலில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுகின்றன. ஈழத்திலுள்ள கோவில்களுள் நேரம் தவறாத நித்திய, நைமித்திய பூசைகள் மூலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றைய கோவில்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றது.

**பூசைகளும் மகோற்சவமும்**

இங்கு, ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடை பெறுகின்றது.

மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித் தல், அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப்பிச்சை எடுத்தல், மொட்டையடித்தல், பட்டுச் சார்த்தல், தேவாரம் ஓதுதல், வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக நடத்தப்படுகின்றன.

**வருடாந்த மகோற்சவம்**

ஆடி அமாவாசையிலிருந்து 6ஆம் நாள் கொடியேறி 25 நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது. ஒவ்வொரு திருவிழாக் களும் ஒவ்வொரு முருகப் பெருமானின் ஒவ்வொரு தத்து வத்தை உணர்த்தி நிற்கின்றன. இந்தத் திருவிழா யாழ்ப்பாணத்து மக்களுக்கு மட்டுமன்றி வேறு பிரதேச மக்களுக்கும் முக்கியமான திருவிழாவாக கொள்ளப்படுகிறது. அத்துடன், ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி, சூரன்போர், இயமசங்காரம், கார்த்திகைத் திருவிழா, கற்பூரத்திருவிழா, தைப்பூசம், சித்திரை வருடப்பிறப்பு எனப் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அத்துடன், யாழ்ப்பாணத்தில் ஆறுகாலப்பூசைகள் நடைபெறும் ஒரே ஒரு ஆலயம் நல்லூர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.


**ஒளிஅரசி**
இல்லத்தரசிகளின் தோழி

மாதம் ஒரு முறை
செப்டெம்பர் 1 - 30, 2015
நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிட்ட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு :**
எஸ். கஜரூபன்,
எஸ். ஏ. றெனிபேட்

**ஆசிரிய பீடம் :**
தொலைபேசி: 011 4320695, 071 8628369
தொலைநகல்: 011 5517945
E-mail:
editoroliarazi@gmail.com

**விளம்பரப் பிரிவு :**
கொழும்பு : 078 8864730
வட மாகாணம் : 021 5671111

**விநியோகப் பிரிவு :**
கொழும்பு : 011 5737592, 071 8628379
வட மாகாணம்: 021567222, 0776569617, 071 6182182
**சந்தா விபரம் :** உள்நாடு 1200/=, வெளிநாடு யூ.எஸ்.ஏ. 30 டொலர், யூ.கே. 20 ஸ்ரேலிங் பவுண்

**கடித, போட்டித் தொடர்புகளுக்கு :**
ஆசிரியர், 'ஒளிஅரசி'
இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
**வட மாகணத் தொடர்பு :**
ஆசிரியர், 'ஒளிஅரசி'
உதயன் பணிமனை
இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

# நீங்கள் நலமா?



இன்றைய உலகில் நாம் சந்திக்கும் பிரச்சினைகள் ஏராளம். ஆனந்தத்தில் தொடங்கி சோகத்தில் முடியும் சம்பவங்கள் நமது அனுபவங்களாகின்றன. நவீனம் நம்மை வெகுவாக ஏமாற்றி விட்டது. குடும்பம், சமூகம், நட்பு, காதல், இல்லறம், வணிகம் என எல்லாத் தளங்களிலும் உறவுமுறைகள் சிக்கலாகி வருகின்றன. இயல்பு வாழ்க்கை இயந்திரம் ஆகிவிட்டது. நவீன மனிதனின் உடல் வாழ்வு, உளவாழ்வு, சமூக வாழ்வு, சமய வாழ்வு யாவும் நிறைவாக இல்லை. இவற்றில் உளவாழ்வு இரகசியமானது. எந்தளவுக்கு பாதித்தது என்று ஒருவர் சொன்னால் அன்றித் தெரியாது. வெளிப்படையாக நம் உளக்குறைகளைச் சொல்லமாட்டோம்.

உடல் நோய் போல் உள நோயும் இயல்பானதே என்று நாம் நினைப்பதில்லை. உள மருத்துவரிடம் செல்பவர் எல்லாம் பித்துப்பிடித்தவர்கள் அல்லர். எனவே, உளப்பிரச்சினை இயல்பானதே. அதைத் தீர்க்கவேண்டியது நம் பொறுப்பு மனம்விட்டு பேசாத பிரச்சினைகள் குணமாகாது. இது மன அழுத்த யுகம். உங்கள் பிரச்சினைகளை ஒளிஅரசியுடன் தொடர்ந்து பேசுங்கள். உங்கள் உளநலத்தைக் காப்போம்.

**கேள்வி : எனக்கு தற்போது 38 வயதாகிறது. எனது கணவரும் நானும் திருமணமாகி 10 வருடங்களாகியும் எனக்கு குழந்தைகள் பிறக்கவில்லை. தற்போது அலுவலகத்தில் எனது கணவருடன் மிக நெருக்கமாக இன்னொரு பெண் பழகிவருதாக கூறுகிறார்கள். அது உண்மையா பொய்யா என்பதை அறியமுடியவில்லை. எனக்கு குழந்தை இல்லாத காரணம் அவரை இவ்வாறான வழிக்கு கொண்டு சென்றுவிட்டதோ என்று பயமாக உள்ளது. நான் இதற்கு என்ன செய்ய முடியும்?**

பதில் : முதலாவது சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். உங்கள் கணவருடன் மனம்விட்டுப்பேசுங்கள். உங்கள் கணவரும் இது நாள்வரை சிறந்த புரிந்துணர்வுடன் உங்களுடன் பழகியிருப்பின் அவரிடம் நேரடியாகவே கேட்டுவிடுங்கள். முதலில் இந்தவிடயத்தின் உண்மைத்தன்மையை உறுதி செய்துகொள்ளுங்கள். உண்மையாயின் உங்கள் கணவருக்கு அறிவுரை சொல்லி அதிலிருந்து மீட்டெடுக்க முயலுங்கள். குழந்தைகள் இல்லை என்ற குறையை நீக்கிக்கொள்ள இன்னொரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்க முடியும் என அறிவுரை கூறிப் பாருங்கள். அவர் அந்த அறிவுரையை ஏற்காதவிடத்து அனுபவம் வாய்ந்த உங்கள் உறவுகளினூடாக அவருக்கு அறிவுரை கூறிப்பாருங்கள். குழந்தை இல்லை என்ற குறையை நீக்க குழந்தையை தத்தெடுத்து வளர்த்து மிக மகிழ்ச்சிகரமாக வாழமுடியும். மனம் விட்டுப்பேசி தீர்வு காணல் நல்ல சூழலை உருவாக்கும்.

**கேள்வி : எனக்கு தற்போது வயது 21. என்னை எனது அண்ணாவின் நண்பன் ஒருவர் காதலிக்கும்படி கேட்டு வருகிறார். நான் இதற்கு சாதகமான முடிவு எதனையும் இதுவரையும் சொல்லவில்லை. அந்தப் பையன் வேறு சாதியில் இருப்பதால் எனக்கு பயமாக இருக்கிறது. ஆனால், எனக்கும் அந்தப்பையன் மேல் விருப்பம் உள்ளது. நான் அவரை காதலிக்கலாமா?**

பதில் : காதல் என்பது இயல்பாக எதிர்பாராமல் ஏற்படும் ஒன்றுதான். இங்கே தான் மிக அவதானமாக இருக்க வேண்டிய தேவை ஒன்று உருவாகிறது. காதலித்து கைவிடுவது எமது கலாசாரம் அல்ல. காதல் திருமணத்தில் முடிய வேண்டும். ஆனால் காதல் வாழ்வு வேறு. திருமணவாழ்வு வேறு. இந்தத் திருமண வாழ்க்கையில் முக்கியமாக செல்வாக்கு செலுத்துவது எமது குடும்பமும் சூழலும். மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு எமது குடும்ப வாழ்க்கைமுறையும் சூழலுமே காரணமாகின்றது. இந்தக் குடும்ப வாழ்க்கையில் இனம், மதம், மொழி, சாதி என்பன செல்வாக்கு செலுத்துகின்றன. ஒவ்வொருவரும் தமக்கு ஒத்துப்போகக்கூடிய குடும்பப்பின்னணியை உடையவர்களை வாழ்க்கைத் துணையாக்கும்

போது ஒற்றுமையான ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கலாம். எனவே, உங்களுக்கு ஒத்துவராத குடும்பப்பின்னணி உடையவர்களை காதலித்து காலம் முழுவதும் கண்ணீர்வடிப்பதை நிறுத்தி உங்கள் குடும்பத்துக்கு ஒத்துவரக்கூடிய ஒருவரை தேர்ந்தெடுக்கும்போது திருமணவாழ்வு மகிழ்ச்சி யாக அமையும்.

**கேள்வி : எனக்கு வயது 40. சமீபத்தில் என் கணவர் கொழும்புக்கு மாற்றலாகி செல்ல நேர்ந்துவிட்டது. நான் பத்தாவது வகுப்பு வரைதான் படித்துள்ளேன். தற்போது வீட்டிற்குத் தேவையானதை வாங்கவும், என் குழந்தைகளை அழைத்துவரவும் நான்தான் செல்லவேண்டியுள்ளது. (இதற்கு முன் இந்த வேலைகளை என் கணவரே செய்து விடு வார்.) ஆனால், எனக்கு தனியே வெளியே செல்லவே பயமாக இருக்கிறது. போவதற்கு முன் படபடப்பாகவும், இதயத்துடிப்பு அதிக மாகவும் உள்ளது. நான் என்ன செய்வது மருத்து வரை காணவேண்டுமா?**

பதில் : உங்கள் உடம்புக்கோ, இதயத்திற்கோ எந்த பிரச்சினையும் இல்லை, உங்களுடைய பிரச்சினை பதற்றம். பெரிய ஆபத்தில் மாட்டிக் கொள்ளும்போது மனிதர்களுக்கு இயல்பாய் ஏற்படக்கூடிய உடலியல் மாற்றங்கள் உங்களுக்கு தனியாக வெளியே செல்ல வேண்டும் என்று நினைக்கும்போதே ஏற்படுகிறது. இதற்குக் காரணம், உங்களுடைய எல்லா வெளிவேலை களையும் தானே செய்து உங்களை வீட்டிற்குள் வைத்திருந்த உங்கள் கணவர்தான். தனியே வெளியே சென்றால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை முன்கூட்டியே அனுமானிப்பதையும் உங்களால் அதை சமாளிக்க முடியாது என்று நம்புவதையும் தவிருங்கள். நீங்கள் பத்தாவது வரை மட்டுமே படித்திருப்பதால் உங்களுக்கு தகுதி குறைவு என்ற தாழ்வு மனப்பான்மைதான் உங்களுடைய பதற் றத்திற்குக் காரணம் படிப்பிற்கும், சமயோசிதம் மற்றும் புத்திசாலித்தனத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பிரச்சினைகள் ஏற்படுமோ என்று முன் கூட்டியே யோசிக்காமல், வரும்போது பார்த்து கொள்ளலாம் என்று முதலில் நினையுங்கள். எந்த ஒன்றை செய்ய பயமாக இருக்கிறதோ அதையே திரும்ப திரும்ப செய்யும்போது பயம் நீங்கிவிடும் எனவே, சின்ன சின்ன விடயங்களுக்காக - உங்களுக்கு பிடித்த விடயங்களுக்காக அடிக்கடி வெளியே சென்றுவர பழகுங்கள். அதன்பின் பதற்றம் அனைத் தும் நீங்கி புதுத்தெம்புடன் நீங்கள் சென்றுவரலாம்.

**கேள்வி : எனக்கு 23 வயதாகிறது. சிறு வயதில் இருந்தே என்னைப் பற்றிக் கிண்டல், கேலிக்கைகளைக் கேட்டே வளர்ந்துவிட் டேன். நான் பார்ப்பதற்கு நன்றாக இல்லை, ஏன் இப்படி இருக்கிறாய் என்று என்னையே பலர் கேள்வி கேட்டார்கள். என் வீட்டில் உள்ளவர்களும் உறவினர்களும்கூட இப்படி அடிக்கடி சொல்லக் கேட்டு நான் வேதனை அடைந்ததுண்டு. இதனால் எனது சிறுவயதில் என் கூடப்படித்த பெண் பிள்ளைகளிடம் பேசவும் தயக்கம். கல்லூரியிலும் என்னிடம் யாரும் அதிகமாகப் பழகவில்லை. அதனால் நான் பேச நினைத்த பெண்களிடம் கற்பனை யில் பேச ஆரம்பித்தேன். ஆனால், இப் பொழுது தனிமையை நானே உருவாக்கி அதிக நேரம் கற்பனைக்கதையிலே இருக்கி றேன். என் பிரச்சினையைக் கூறாமல் தனி மையில் இருந்ததால் திமிர்பிடித்தவன் என்று நினைக்கிறார்கள். என் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்று பயமாக இருக்கி றது. நான் இதிலிருந்து மீள நினைக்கிறேன். என்னால் முடியவில்லை. தயவுசெய்து ஒரு வழி கூறுங்கள்.**

பதில் : திறந்த மனதுடன் பொதுவெளியில் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குச் செல்வதற் கான ஆயத்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. மற்றவர்கள் சொன்னதைக் கேட்டுத்தான் உங்களைப்பற்றிய சுய விப்பத்தை வைத்திருக்கிறீர்கள் என்பது வெளிப் படையாகத் தெரிகிறது. பார்க்க நீங்கள் நன்றாக இல்லை என்று மற்றவர்கள் சொன்னதை ஏன் நம்பினீர்கள்? ஏன் இன்னும் நம்புகிறீர்கள்? 'நன்றாக இருப்பது' என்பது என்ன என்பதை யார் நிர்ணயிப்பது? நீங்கள் பார்க்க நன்றாக இருக்கி றீர்களா? இல்லையா? என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். பார்ப்பதற்கு எப்படி இருக்கிறீர்கள் என்பதைத் தவிர உங்களிடம் வேறு விடயங்கள் எதுவுமே இல்லையா? அதுபற்றி ஒன்றுமே நீங்கள் சொல்லவில்லையே? உங்களி டம் இருக்கும் நல்ல விடயங்கள் என்னென்ன? அதைப் பட்டியல் இடுங்கள். நிச்சயம் நிறைய விடயங்கள் இருக்கும். நீங்கள் மிகுந்த கற்பனைத் திறன் வாய்ந்தவர், ஆக்கபூர்வமானவர் என்று தெரிகிறது. உங்களைப் பற்றிய எதிர்மறையான சுயவிம்பத்தை உதறிவிட்டுப் புதிய, ஆரோக்கி யமான சுயவிம்பத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பது முற்றிலும் உங்களிடம் மட்டுமேதான் இருக்கிறது. வெளியில் சென்று மற்றவர்களிடம் திறந்த மனதுடன் பழகுங்கள். 'நான் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறேன்' என்னும் உணர்வுடன் பழகுங்கள். அப்போது எப்படி உணர்கிறீர்கள் என்று பாருங்கள். உங்களில் சிறந்த மாற்றம் உருவாகும். புதியதொரு வாழ்க்கையை இன்றிலிருந்து வாழத் தொடங்குங்கள்.

நண்பகல் கடந்த பின்பும் இருவரும் பேசிய படியே சுற்றிக்கொண்டிருந்தனர். பசிகூட வர வில்லை இருவருக்கும். என்ன பேசினார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. சம்யுக்தா போன் செய்தபின்புதான் நேரம் பிற்பகல் மூன்று மணி என்பது புரிந்தது. சம்யுக்தா சொன்ன இடத்திற்கு இருவரும் வந்து சேர்ந்தபோது, ''என்ன போட் டோஸ் எடுத்தாச்சா?'' என்றாள் அஸ்வந்திடம்

''ம்... நிறைய'' என்றான் சிரிப்புடன்,

மதுவிழி வெட்கத்தில் தலைகுனிந்தாள்.

அன்று மாலை நடைபெற இருந்த 'அமுதத்தின் ஆண்டு விழாவிற்கு, எல்லோரும் தயாராகினர். அஸ்வந், சம்யுக்தாவின் தகப்பனார் இருவரும் நேரத்திற்கே சென்றுவிட சம்யுக்தா, மதுவிழி, இன்னும் உறவினர் சிலரும் விழா ஆரம்பிப்பதற் குச் சற்று முன்னதாகவே சென்று சேர்ந்தனர். நிகழ் வுகள் கோலாகலமாக நடந்தன. சனநெருக்கடியோ என்னவோ, திடீரென சத்தியும் தலைவலியுமாய் அவதிப்பட்டவளை பற்றியபடி அழைத்துச்சென்ற சம்யுக்தா, தகப்பனாரிடம் விவரம் சொல்ல, உடனே அங்கிருந்த அறை ஒன்றில் ஓய்வெடுக்க ஏற்பாடு செய்தவர் ''அஸ்வந்திடம், வீட்டிற்குச் சென்று வேர்க்கொம்பு சேர்த்த தேநீர் எடுத்துவரு மாறு'' கூற, அவசரமாக விரைந்தவனின் மனம் ஏனோ துவண்டுபோனது. வழமைக்கு மாறான பகல் உலாவே அவளது தற்போதை உடல் உபா தைக்குக் காரணம் என்பது அவனுக்குப் புரிந்தது.

அவசரமாக தேநீருடன் வந்தவன் மதுவிழி இருந்த அறைக்குச் சென்று தேநீரைக் கொடுத்த தும், கூட இருந்த சம்யுக்தா எழுந்து வெளியே செல்ல. அருகில் அமர்ந்த அஸ்வந், ''என்ன... என்ன செய்யிது?... துவி...'' என்றான் கலக்கமாய். இரண்டு மாத்திரைகளைப் போட்டு அந்த தேநீ ரையும் பருகியவள், மெல்ல எழுந்து அமர்ந்து கொண்டாள். கூடவே அமர்ந்திருந்த அஸ்வந் சிறிதுநேரத்தில் வெளியே செல்வதற்காய் எழுந்தி ருக்க முற்பட்டபோது, அவனது கைகளைப் பற்றிய மதுவிழி, ''வேண்டாம்'' என்பதுபோல தலையை ஆட்டினாள், அவளருகில் அமர்ந்திருந்த வன் சுவாரஸ்யமாய் பேசத் தொடங்கினான். இரு வரும் ஏதோ பேசினர். எங்கேங்கோ திசைமாறிய பேச்சுகள் இருவரையும் இணையவைத்தது. ஆம், அன்று முழுவதும் அஸ்வந்தோடு கூடவே இருந் ததோ, அன்றி அவனது அருகாமை தந்த சுகமோ மதுவிழியை அஸ்வந்திடம் இழக்க வைத்தது.

திடீரென ஒலித்த அஸ்வந்தின் செல்போன் ஒலி இருவரையும் சயநிலைக்கு கொண்டுவந்தது. அப்போதுதான் நிலைமையின் தீவிரத்தை இருவ ரும் உணர்ந்தனர். கலக்கமாய் பார்த்தனர் இருவரும். மெல்ல அஸ்வந்தின் கைகளைப் பற்றிய மதுவிழி, ''அஸ்வந், நான் எதிர்பார்த்ததுக்கு முன்னதாவே உங்க வீட்டுக்கு வரப்போறன், அப்பிடித்தானே'' என்றாள்.

''ம்....ம்...'' என்றவன் வார்த்தையேதும் வராது வெளியே சென்றான். ஒழுக்கத்தவறு செய்ததாக

# உறவுகள் சுகமானது

நெடுந்தொடர் 11



எண்ணி வருந்துகிறான் என எண்ணினாள் மதுவிழி.

அஸ்வந்திற்கு ஒன்று மட்டும் புரிந்தது. மது விழி தன்மீது அதிக அன்பும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறாள் என்பது.

தான் செய்த தவறு மதுவிழிக்குப் புரிந்த போதும், அஸ்வந் மீதான அன்பும் நம்பிக்கையும் அவளைச் சரிப்படுத்திவிட்டது.

மறுநாளே, மதுவிழி, சம்யுக்தா குடும்பத்துடன் ஊர் திரும்பிவிட அஸ்வந்தும் அவ் ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

நாட்காட்டி வேகமாகக் கிழிக்கப்பட்டபோதும் மதுவிழிக்கு நாட்கள் நகரமறுப்பதுபோல இருந்தது. கிராமப் பயணத்தின் பின் அஸ்வந்தைக் காணவே இல்லை. அவனிடம் இருந்து கோல் வருமென்று எதிர்பார்த்து ஏமாந்துபோனாள். நெஞ்சுக்குள் சின்னதாய் பீதி பொறிதட்டியது. இந்த ஒரு மாதத்தில் தீபக் மூன்று தடவைகள் போனில் கதைத்துவிட்டான்.

ஆனால், அஸ்வந்தைப் பற்றி ஏதும் சொல்ல வில்லை, தானே கேட்பதற்கு மதுவிழியின் தன் மானம் இடம்தரவில்லை. அதனால் அவளும் ஏதும் கேட்கவில்லை. இன்னும் சில நாட்கள் பொறுத்துப் பார்க்கலாம் என எண்ணியவள், ஏதாவது முக்கிய வேலையாய் அஸ்வந் எங்காவது சென்றிருக்கலாம் என நினைத்து தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

மேலும் இரண்டு வாரங்கள் ஓடி மறைந்தது. மதுவிழியின் நெஞ்சுக்குள் பந்தாய் அடைக்கத் தொடங்கியது. இனிமேலும் அத்தையிடம் மறைப்பது தவறு என எண்ணினாள். அந்த ஒருநாள் உறவின் பயனாக அஸ்வந்தின் உயிரொன்று அவளுள் வளரத் தொடங்கியிருந்தது. அதுவே அவளது கலக்கத்தையும் கவலையையும் பல மடங்கு அதிகரிக்கச் செய்தது. இவ்விடயத்தை அஸ்வந்திடம் சொல்ல வேண்டும் எனும் ஆவல், அவளையறியாமல் அவளுக்குள் வியாபித்தது. இச்செய்தி அவனிடம் உண்டாக்கப்போகும் எதிரொலியை பலமுறை கற்பனையில் கண்டுகளித்தாள். குழந்தைகள் என்றால் அவனுக்கு கொள்ளைப் பிரியம் என்பது அவளுக்குத் தெரியும். அதுவே தன் குழந்தை எனும் போது எப்படி ஆனந்தப்படுவான், இச்செய்தியே தன்னையும் அஸ்வந்தையும் மிக விரைவில் சேர்த்துவிடும் என உறுதியாக நம்பினாள்.

'துவி' என்று எப்போதும் அழைத்து அவளுக்கு பேரின்பம் தந்தவன், தனது ஒவ்வொரு வார்த்தைகளையும்கூட பொக்கிஷமாய் எண்ணி இரசித்தவன். 'காதல், காதல் என்று மதுவிழியை உறங்க வைத்தவன். சொல்லாலும் செயலாலும் அன்பை மட்டுமே காட்டியவன். இத்தனைநாள் ஏன் மௌனமாய் இருக்கிறான்?' அஸ்வந் ஏமாற்றி விட்டான் எனும் எண்ணமே மதுவிழிக்கு வர வில்லை. அப்படி நினைக்கவும் அவளால் முடிய வில்லை. அவன் கண்களில் தெரிந்த காதல், அவன் வார்த்தைகளில் ஒளிந்திருந்த நேசம் இவையெல்லாம் பொய்யே இல்லை. மனம் உறுதியாகச் சொன்னது, 'அஸ்வந்தின் காதல் உண்மையானது'.

சோபாவில் சாய்ந்து அமர்ந்துகொண்டார் ஸ்வேதா. அஸ்வந்துடனான ஒப்பந்தம் முடிவடைந்து விட்டது. அவன் சொன்னபடியே பல இலட்சங்கள் இலாபமாக வந்திருந்தது. அரைவாசியை தான் கொடுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி விட்டு மீதியை மதுவிழியின் பெயரில் வங்கியில் வைப்பு செய்தார். மதுவிழியின் திருமணநாளில் பல இல்லங்களில் வசிப்பவர்கள் அனைவருக்கும் உணவு, உடை கொடுத்து உபசரிக்கவேண்டும் என நினைத்தார்.

தன் எதிரே இருந்த மதுவிழியின் தகப்பனாரின் புகைப்படத்தை நிமிர்ந்து பார்த்து, 'அண்ணா நீ இருந்தா மதுவிழிக்கு என்னெல்லாம் செய்திருப்பியோ அதைவிட சிறப்பா உன் மகளை நான் பாக்கிறேன், அவளுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைச்சு குடுத்திட்டா என் கடமை முடிஞ்சிடும், அதுக்குப்பிறகு நானும் உங்களோட, ஹரியோட....' எண்ணியபடி மௌனமாய் அழுதார். இப்போதெல்லாம் மதுவிழியிடம் பல மாற்றங்களைக் கண்டார் ஸ்வேதா. குறும்புத்தனம் அவளிடம் இருந்து விடைபெற்றிருந்தது. சில வேளைகளில் யாரும் வருவதுகூட தெரியாமல் யோசனையில் ஆழ்ந்து விடுகின்றாள். 'மதுவிழிக்குள் காதல் புகுந்துவிட்டதோ' எனும் ஐயம் ஸ்வேதாவிற்குள் பலமாய் எழுந்தது. அன்றும் அப்படித்தான். ஸ்வேதா அருகில் வந்ததை அறியாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். மதுவிழியின் தலையை மென்மையாய் வருடியபடி 'மதுக்குட்டீ... என்றார் மென்மையாய்.

சட்டென நடப்பிற்கு வந்த மதுவிழி, ''அத்தை எப்ப வந்தீங்க...? என்றபடி திரும்பினாள்.

''இப்பத்தான் வந்தேன். காலை ஏதோ சொல்லனும்னு சொன்னே. சொல்லும்மா என்ன விஷயம்?'' என்றார் கனிவுடன்.

''அத்தை நான் சொல்லப்போற விசயம் உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும். ஐ ஆம் ரியலி சொறி...'' என்றுவிட்டு அஸ்வந்தை சந்தித்தது முதல் கிராமத்தில் நடந்த கடைசி அத்தியாயம் வரை ஒன்றும் விடாமல் சொல்லிமுடித்தாள். அதன்பின் அஸ்வந்திடம் இருந்து எதுவித தகவலும் இல்லை

என்பதையும் கூறினாள்.

சிலையாய் அமர்ந்திருந்தார் ஸ்வேதா. அவரால் நம்பவே முடியவில்லை. குழந்தையாய் அவர் எண்ணிய மதுவிழியா இத்தனையையும் செய்திருக் கிறாள்? தனது வளர்ப்பில் எங்கோ தவறு நடந்து விட்டதாய் உணர்ந்தார். தனியொரு பெண்ணாய் தொழிலை பல பரிணாமங்களில் உருவாக்கிய தன்னால் அஸ்வந்தைப் பற்றி தெரிந்துகொள்ள முடியவில்லையே என கழிவிரக்கம் கொண்டார்.

எதுவுமே பேசாமல் அதிர்ச்சியுடன் இருந்த அத்தையைப் பார்க்கும்போது மதுவிழிக்கு மிகவும் கவலையாக இருந்தது. மெல்லச் சரிந்து அவரது மடியில் முகம் புதைத்தாள். அத்தை... நானா இப்படி செய்திட்டேன்னு கேவலமா இருக்கு. எதுக் காக உயிர் வாழணும்னுகூட தோணுது. செத்திட்டா உங்களைவிட்டு தூரப்போயிடுவனே. உங்களை யும் அஸ்வந்தையும் பாக்கமுடியாதேன்னு பயமா இருக்கு என்றுவிட்டு குலுங்கி அழுதாள்.

சட்டென மதுவிழியைத் தோளோடு அணைத் துக்கொண்ட ஸ்வேதா,'மது... ஏன் இப்படிப் பேசுறாய்? என்ன பேச்சு இதெல்லாம்? எனக்குப் புரியுது. அஸ்வந் மேல நீ வைச்சிருந்த அளவு கடந்த அன்புதான் உன்னை இப்படி செய்யவைச் சிருக்கு. அழாதை. நீ இவ்வளவு நம்பிக்கை வைச் சிருக்கிற அஸ்வந், மௌனமா இருக்கிறதுதான் ஏன்னு புரியல, சரி, நான் பேசுறன். வேலை ஏதா வது டென்சனாக்கூட இருக்கலாம். நீ யோசிக்க வேண்டா... என்றபடி எழுந்துகொண்டாள். மறுநாள் அலுவலக மேலதிகாரியிடம் சகல வேலைகளை யும் ஒப்படைத்து செய்யவேண்டியவற்றை விளக்கி விட்டு, இரண்டு விமான ரிக்கெற்றுகளை ஒழுங்கு செய்தார். அன்றிரவே மதுவிழியையும் அழைத்துக் கொண்டு அஸ்வந்தை சந்திப்பதற்கு புறப்பட்டனர்.

ஸ்வேதாவின் பள்ளித் தோழியான விஜயாவின் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடாயிருந்தது. விஜயா வின் கணவர் சிறுவயதிலேயே விபத்தில் இறந்து விட அதன்பின் திருமணம் பற்றி நினைக்காது, சமூகசேவையில் தன்னை முழுதாய் ஈடுபடுத்திக் கொண்ட விஜயா மீது ஸ்வேதாவிற்கு அதிக அன்பும் மரியாதையும் இருந்தது.

அங்கு சென்று சேர்ந்ததும் தோழிகள் இருவரும் பழைய கதைகளில் ஆழ்ந்துபோய்விட அறையில் தனியாக இருந்த மதுவிழியின் மனம் செயல் ஒன்றைச் செய்யநினைத்தது. சில நாட்களின் முன் தீபக் தந்த அஸ்வந்தின் புதிய செல் எண்ணை டயல் செய்தாள், தன்மானத்தை விட்டு, மறுமுனை யில் றிங் போயிற்று, எண்திரையில் வந்த எண் களை சற்றும் கவனியாது ''ஹலோ...'' என்றான்.

'ந... நான் மதுவழி. மெல்ல வந்தது அவளது பதில். அவ்வேளை தனது செயலை அவமானமாய் உணர்ந்தாள் மதுவிழி. சிறிதுநேரம் மௌனமாய் இருந்தான் அஸ்வந். கிண்கிணியாய் ஒலித்த அவளது சின்னக்குரல் தனது பிடியை தளர்ந்து விடுமோ' என ஒரு கணம் யோசனையாக இருந்த போதும் அந்தக் குரலையாவது ஆசைதீரக் கேட்டு விட வேண்டும் என மனம் உந்தியது.

'அஸ்வந், நீங்க ஏன் இப்படி மௌனமா இருக் கீங்கன்னு எனக்குப் புரியல, ஆனா... ஆனா... உங்களை மாதிரி எனக்கு இருக்க முடியல...

ஏன்? என்றான் வேண்டுமென்றே குரலை கடினப்படுத்தி. ஏனா?... உலகத்திலேயே உயர்ந்த உன்னதமான தாய்மை என்ற நிலையை நான் உங்கள் மூலமா அடைஞ்சிட்டனே அதனால் தான்... என்றாள் கேவலுடன்.

ஒருகணம் ஆனந்த எல்லையைத் தொட்டு நின்றான் அஸ்வந், 'துவி' அவனையறியாமல் அவனது உதடுகள் முணுமுணுத்தன. மனதின் போக்கு மூளைக்குப் புரிய சட்டென விழித்துக் கொண்டான் அஸ்வந். வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாகிவிடக்கூடாது என எண்ணினான். இப்போது தனது பிரதிபலிப்பை மதுவிழி அறிந்துகொள்வது நல்லதல்ல என எண்ணியவன் போனை கட் பண்ணினான். சிலையாய் அமர்ந்திருந்தாள் மதுவிழி. அஸ்வந் தின் இச்செயலை அவள் எதிர்பார்க்கவே இல்லை. கண்ணெதிரே நொருங்கியது அவளது கனவுகள்.

அன்றைய தினம், காலையிலேயே தன்னைத் தயார்ப் படுத்திய ஸ்வேதா, அஸ்விந்தின் அலுவலக முகவரி யைக் குறித்துக் கொண்டாள். முதலில் அஸ்வந்திடம் பேசிவிட்டு அதன் பின்னர் அவனது பெற்றோரைச் சந்திக்கலாம் என எண்ணியபடி வீதிக்கு வந்து ஓட்டோ ஒன்றில் பயணமானாள்.

(தொடரும்...)

## முக்கிய குறிப்பு

இந்த சஞ்சிகை விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து குறித்த ஒரு பகுதி மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதார உதவிக்கு அன்பளிப்பு செய்யப்படுகின்றது.

– ஆசிரியர் –

# மாபெரும் நற்செய்தி

**புலமைப்பரிசில் பரீட்சையை நோக்கிய பயணம்**

## தரம் 3 புலமைச்சுடர்

செப்ரெம்பர் 15இல் இருந்து




புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற தரம் 3 இலிருந்தே அடிப்படைப் பயிற்சிகளைப் பெறவேண்டிய தேவை மாணவர்களிடம் உள்ளது. அந்தவகையில் தரம் 3 இலிருந்தே மாணவர்களை வழிப்படுத்தி தரம் 5 இல் சிறந்த பெறுபேறுகளை பெறவைப்பதற்கு பல பெற்றார்கள் , ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தரம் 3 இற்கு புலமைச்சுடரானது எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு 1 ஆம் 15 ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக மாதம் இருமுறை வெளிவர இருக்கின்றது. தற்பொழுது புலமைச்சுடரானது 4,5 ஆகிய தரங்களுக்கு வெளிவருவது யாவரும் அறிந்ததே.

## வெளியீட்டின் முக்கிய நோக்கம்

- மாணவர்கள் படிப்படியாக பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதாகும்.
- மாணவர்களின் சுயகற்றல், தேடல் திறன்களை விருத்தி செய்யக் கூடிய வகையில் உள்ளடக்கம் அமைந்துள்ளது.
- பெற்றோர் வீட்டில் இருந்தே வழிகாட்டக்கூடிய சிறந்த பயிற்சிகள் தாங்கி இருக்கின்றமை.
- பரீட்சைக்குரிய சிந்தனை ஆற்றலை விருத்தி செய்யமுடியும்.

இவ் வாறான பல நன்மைகள் நோக்கமாக கொண்டு இவ் வெளியீடு வெளிவருகின்றது. ஆரம்பத்தில் இருந்தே தொடர்ச்சியாக பயிற்சியினை மேற்கொள்ளல் மிகவும் முக்கியமானது. அதலால் இன்றே உங்கள் அருகில் உள்ள சுடர்ஒளி , உதயன் முகவர்களிடம் முற்பதிவினை மேற்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**

ஆசிரியர் - புலமைச்சுடர்,
இல.85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

தொ. பே. : 011 5738855, 071 6850005 ,
வடமாகாண விநியோக தொடர்புகளுக்கு 0776569617
மின்னஞ்சல்: kalvisudarinfo@gmail.com

# தலைகுனிந்து படிப்பதெல்லாம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கே...




எமது நாட்டின் முன்மாதிரியாக தொழிற்படும் இல்லத்தரசிகளின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் வரிசையில் இம் மாத நட்சத்திர இல்லத்தரசியாக கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றியவரும் 10 தடவை ஹஜ் கடமையை நிறைவேற்றியவருமான ஹாஜியானி மௌலவி யாமலீஹாசுபை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் அனுபவப் பகிர்வுகள் வாசகர்களாகிய உங்களுக்காக...

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் புனித ஹஜ் கடமையும் ஒன்றாகும். இந்த புனிதக் கடமையை நிறைவேற்றுவதற்காக உலக நாடுகளின் எல்லா பாகங்களிலிருந்தும் மக்கள் புனித மக்கா மாநகரை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடத் தயாராகும் முஸ்லிம் வாசகர்களுக்காக கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்த ஹாஜியானி மௌலவி யாமலீஹா சுபைரை ஒளி அரசி நேர்கண்டபோது :

**உங்கள் குடும்பம் கல்வி பற்றிய கருத்துக்களை ஒளிஅரசி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்?**

கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை நகரில் அப்துல் ரஹீம் சித்தி உம்மா தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தேன். கல் எலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியில் எனது பாடசாலை கல்வியை கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரீட்சார்த்தியாக தோற்றி அரபு மொழியில் சிறப்புப் பட்டதாரியானேன். அரபு, தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய நான்கு மொழிகளிலும் தேர்ச்சிபெற்றேன். மூன்று பெண் பிள்ளைகளுக்கு தாயாராக இருக்கின்றேன்.

**நீங்கள் முஸ்லிம் மக்களுக்காக ஆற்றிய சேவைகளைப் பற்றி கூறமுடியுமா?**

கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபராக ஐந்தாண்டுகளாக கடமையாற்றினேன். 1972 ஆம் ஆண்டு முதல் அரச சேவையில் ஆசிரியையாக இணைந்தேன். அதனையடுத்து அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானானேன். சுமார் 30 வருடங்களாக பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஆசிரியையாக கடமையாற்றி ஓய்வுபெற்றேன்.

இலங்கையிலுள்ள ஈராக் தூதரகத்தில் அரபுமொழி மொழிபெயர்ப்பாளராக சிறிது காலம் கடமையாற்றிய நான் அரச அங்கீகாரம் பெற்ற அரபுமொழி மொழி பெயர்ப்பாளராகவும் திகழ்கிறேன். இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஆலோசனை சபையின் உறுப்பினராக இருந்து மாதர் நிகழ்ச்சியின் பிரதித் தயாரிப்பாளராகவும் சுமார் இருபது ஆண்டுகள் பங்களிப்புச் செய்துள்ளேன். தற்சமயம் கொழும்பிலுள்ள பிரபல சர்வதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியையாகவும் இஸ்லாமிய அரபுபாட இணைப்பதிகாரியாகவும்



கடமையாற்றி வருகிறேன். தொழில் திறன் மிக்க முஸ்லிம் பெண்கள் அமைப்புடன் இணைந்து சமூகசேவையிலும் ஈடுபட்டு வருகிறேன்.

**கேள்வி - உங்களது ஹஜ் பயண அனுபவங்கள் பற்றி சற்று விளக்குவீர்களா?**

**பதில்** - எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளால் புனிதமக்காவுக்கு சென்று பத்து முறை ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. ஒவ்வொரு முறையும் என்னுடன் சேர்ந்து எமது ஹஜ் குழுவில் வரும் சகோதரிகளுக்கு தேவையான வழிகாட்டல்களையும் உதவிகளையும் நான் செய்துவந்துள்ளேன். அல்லாஹ்வின் வீடான புனித கஃபா மக்கா நகரிலேயே அமைந்துள்ளது. இந்த கஃபாவை கண்குளிர கண்டுகளிப்பது என்பது ஒவ்வொருவருக்கும் கிடைக்கப்பெறும் பெரும் பாக்கியங்களுள் இணையற்றது. முதன் முதலாக நான் அந்த புனிதக் கஃபாவை பார்த்தபோது அல்லாஹ் எனக்கு இரு கண்களை படைத்ததன் பாக்கியத்தை அடைந்து விட்டேன் என்ற மகிழ்ச்சியில் கண்ணீர் சிந்தினேன். இது ஆனந்தக்கண்ணீர் என்றால் அது மிகையாகாது. இது எனக்கு மறக்கமுடியாத சம்பவமுமாகும்.


ஹஜ் கடமைகள் ஒவ்வொன்றும் அதனோடு சம்பந்தப்பட்ட இடங்கள் அனைத்தும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல நன்மைகளை உள்ளடக்கிய இடங்களாகும். இஸ்லாத்தின் இறுதிக் கடமையான இந்த ஹஜ் இஸ்லாமியரை உலகளாவிய ரீதியில் இணைக்கும் ஒரு வருடாந்த ஆத்மீக மாநாடாகும். இன, நிற, குலவேறுபாடு, உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு அனைத்தையும் கிழித்தெறிந்து அல்லாஹ்வின் முன்னிலையில் அனைவரும் சமமானவர்களே என்ற இஸ்லாமிய கோட்பாட்டை நடைமுறையில் பிரதிபலிக்கும் ஒரு வணக்கமே ஹஜ்ஜாகும். ஹஜ் என்பது இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட ஒரு வணக்கமாகும். நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் மகனான நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் பரம்பரையில் வந்த இறுதி நபியே முஹம்மது நபி (ஸல்) அவர்களாவார்கள். நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் வாழ்க்கை முழுவதும் அல்லாஹ்வுக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு தியாகியின் வரலாறாகவே காணப்படுகின்றது. தன் மகனான இஸ்மாயீல் (அலை) அவர்களை அல்லாஹுக்காகதி யாகம் செய்ய முன்வந்தது அவர்களது இறை விசுவாசத்தின் ஆழத்தையும் உறுதியையும் விளக்கி நிற்கின்றது.

புனித ஹஜ் கடமையானது ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்வுக்காக தனது வாழ்க்கையின் மிக முக்கிய கட்டங்களில் கூட தியாகங்களை மேற்கொள்ள தயாராக இருக்கவேண்டும் என்பதை உணர்த்துவதோடு, உறுதியான நம்பிக்கைவைத்தல், விட்டுக் கொடுத்தல் பொறுமையை கடைபிடித்தல் போன்ற மேலான நற்குணங்களையும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு ஹாஜியும் துல் ஹஜ் பிறை 8ஆம் நாள் இஹ்ராம் அணிந்து நிய்யத்து வைத்தது முதல் குறிப்பிட்ட நாட்களில் தங்கியிருந்து நற்கிரியைகளில் ஈடுபடவேண்டும்.

அல்லாஹ்வின் படைப்புகளின் இரகசியங்கள், வேறுபாடுகள், பல்வேறு நாட்டவர்களின் தோற்றம், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் போது எம்மால் தெரிந்துகொள்ள முடிகின்றது.

**கேள்வி - சன்மார்க்க பணிகளில் முழுமையாக ஈடுபாடு கொண்ட நீங்கள் இன்றைய முஸ்லிம் பெண்களுக்கு கூறும் அறிவுரை என்ன?**

**பதில்** - இன்றைய உலகம் அறிவுத்துறையிலும் ஆராய்ச்சித்துறையிலும் மிகவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. கூடவே பிள்ளைகளின் சமய உணர்வுகளை, நம்பிக்கைகளை, பழக்கவழக்கங்களைப் பாதிக்கக்கூடிய சக்திகளும் தீவிரமடைந்துள்ளன. இவ்வாறான காலகட்டத்தில் முஸ்லிம் பெண்கள் உலக அறிவும் சமய அறிவும் ஒருங்கே இணைந்த கல்வியை தமது பிள்ளைகளுக்கு ஊட்டுவதில் ஆர்வம் காட்டவேண்டும். அத்தோடு தமது அறிவையும் விருத்திச் செய்து கொள்ள வேண்டும். இத்தகைய அறிவின் மூலமே முஸ்லிம் சமுதாயம் ஒரு சிறப்பான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க முடியும். வறுமை நிலையிலும் தம் பிள்ளைகளுக்கு கல்வியைப் புகட்டுவதன் மூலமே அந்தக் குடும்பம் தலைநிமிர்ந்து வாழ முடியும். வறுமையானது கல்விக்கு ஒரு தடைக் கல்லாக இருக்கமுடியாது என்பதனை அண்மையில் மறைந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியான பேரறிஞர் அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு உலகிற்கு உணர்த்திக்கொண்டிருக்கிறது. அந்த ஒரு உதாரணத்தை மட்டும் உங்களின் சிந்தைக்கு விருந்தாக்க விரும்புகிறேன். நானும் சுமார் முப்பது வருடங்களுக்கும் மேலாக பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும் ஓர் ஆசிரியை என்ற வகையில் கல்வியின் மகத்துவத்தை மென்மேலும் வலியுறுத்த விரும்புகிறேன். தலைகுனிந்து படிப்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே என்ற தாரகமந்திரத்தை ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் மனதில் பதியச் செய்யவேண்டும். இதன் மூலமே சிறப்பான நல் ஆரோக்கியமான எதிர்கால சமூகம் ஒன்றை உருவாக்க முடியும். ⊖




* ''திட்டம் போட்டு எங்க ஊர் ரௌடியை ஊர் பக்கம் வராதபடி பண்ணீட்டோம்!''
''எப்படி?''
''எல்லாரும் அவனை தேர்தலில் நிற்க வச்சு ஜெயிக்கப் பண்ணீட்டோம்!''



* ''என் வீட்டுக்காரர் இரவில் யாரும் டைப் அடித்தால்தான் தூங்குவார்!''
''ஏன் அப்படி?''
''ஆபீஸ் பழக்கமாயிற்றே!''



* ''நான் கஞ்சா விற்றே 14 தடவைகள் ஜெயிலுக்குப் போயிருக்கேன்!''
''அப்போ, நீ 'சிறைக் கஞ்சா' செல்வன் என்று சொல்லு!''



* ''பல் டாக்டர் சொத்தைப் பல்லுக்குப் பதிலா என் நல்ல பல்லை பிடுங்கீட்டா!''
''அது பரவாயில்லை எங்க பல் டாக்டர் என் சொத்தையே பிடுங்கீட்டார்!''



* ''நடிகையைத் திருமணம் செய்தது தப்பா போச்சு!''
''ஏன்?''
''முதலிரவுக்கு அவளுடைய 'டூப்'பை அனுப்பிச் சிருக்கிறா!''

# வித்தியா அக்கா



அலரி மரமே; உன்னை
நான் வெறுக்கின்றேன்.
என் அக்கா அலறிய போது
எங்கே சென்றாய் நீ?

புங்குடுதீவில் என் அக்கா
பூப்போல திரிந்து சென்றாளே
புல்லுக்கும் தீமை நினைகாதவளை
புதருக்குள் பதுக்கிவிட்டீரே

காமவெறி நாய்களே
இல்லை, இல்லை
நாய்கள் கூட நன்றியுள்ளன. - நீங்கள்
காமவெறிப்பேய்களாவீர்

மதுவுக்கு அடிமையாகி - ஒரு
மாதுவைக்கொண்டீரே
இனி மண்டிக்கிடந்தாலும் - உங்கள்
மரணம் என்கையாலே!

- பிரவிலாஷா -
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, தரம் ௯)

# புன்னகை

நான் வருகின்ற வழி தன்னில்
எனக்காக காத்திருப்பாய்
பாவை உன் தலை தனிலே
பூ வைத்து பார்த்திருப்பாய்
எந்நாளும் உன் தரிசனம் காண
நானும் வரம் பெற்றேன்
ஒரு நாள் உன்னை தூக்கி எறிந்ததால்
என் மனமும் வெதும்பிப்போனது
காரணம் நான் போகும் வழியில்
மெழுகுச்சிலையாய் நீ நின்றது தான்.
விளம்பரத்துக்காக ஆட்களை மாற்றியவர்கள்
உன் சிலையையும் தகர்த்துவிட்டார்கள்.
இன்று நீ தவிடு பொடியாக்கப்பட்டவள்.
அனைவரையும் உன் புன்னகையில் கவர்ந்தவள்.
ஆனால் இன்று நீ உன் தவணை முறையை
முடித்துக்கொண்ட ஒரு விளம்பரச்சிலை.


- சமீலா இஸ்மாத் -



ச. லலீசன், சிரேஷ்ட விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



# இதழ்நீர் சுவையானதா?



இனிமையைச் சுட்ட புலவர்கள் கஷ்டப்பட்டிருக்கின்றார்கள். ஓர் அகவுணர்வை எப்படிப் புற உணர்வின்பால் உள்ள வார்த்தைகளால் வடிப்பது என்ற குழப்பம் கவிஞர்களிடம் ஏற்படுவது இயல்புதானே?

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல, பாலும் தேனும் கலந்தது போல, எனப் பாவலர்கள் பலர், பலருக்கும் தெரிந்த உவமைகளைக் கையாண்டு இனிமையை எடுத்தாள முயன்றுள்ளனர்.

பொய்யாமொழிப் புலவர் இனிமையைக் குறிக்கக் கையாளும் காட்சி இன்னும் ஒருபடி மேற்சென்று இனிக்கின்றது.

காதலனும் காதலியும் முத்தத்தில் மூழ்கித் திழைக்கின்றனர்.. இந்தச் சுவையை வர்ணிக்க வார்த்தைகளைத் தேடுகின்றார் புலவர். புலவருக்குத் தமிழ் கைகொடுகின்றது. முத்தத்தின் உச்சக்கட்டம் இதழோடு இதழ் கலந்துவிடுகின்றது. இனிதான அதரங்களின் சேர்க்கையால் இதழ் நீர் கலக்கின்றது. இதற்கும் உவமை சொல்ல விழைகின்றார் புலவர். தஞ்சைவாணன் கோவை என்ற நூலில் இந்த ஒப்பீட்டைப் புலவர் கையாள்கின்றார்.

தமிழை ஆராய ஆராய எப்படி இனிக்கின்றதோ அதைப் போல இவளது செங்கனிவாயை நுகருந்தோறும் இனிதான அமிழ்தச் சுவை பயக்கிறதே என்கிறான் தலைவன்.

**தேருந்தொறும் இனிதாந் தமிழ்போன்று**
**இவள் செங்கனிவாய்**
**ஆருந்தொறும் இனிதாய் அமிழ்தாம்**
**எனது ஆருயிர்க்கே**

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் சிந்தனையில் முத்தக்காட்சியும் அதனால் கலக்கும் இதழ் நீரும் வேறு சிந்தனைகளை ஏற்படுத்துகின்றன. இராமனும் இலக்குவனும் காட்டில் சென்றுகொண்டிருந்தபோது சுக்கிரீவன் வாழும் இரலை என்னும் மலையடிவாரத்தை நோக்கி நடந்தனர். அம்மலையடிவாரத்தில் உள்ள பம்பை என்ற பொய்கைக் கரையை அடைந்தனர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பம்பை ஆற்றின் அழகை வர்ணிக்கின்றார் கம்பர்.

மலைத்தேனும் யானையின் மணம் மிக்க மதநீரும் கலந்த பம்பை ஆற்றின் நீரைப் பருகிச் சுவைக்கும்போது ஏற்படும் உணர்வு பெண்களின் ''அதரபானம்' எனத்தக்க இதழ்நீரை விடச் சுவையாக இருக்கின்றதாம்.

**விண் தொடர் நெடுவரைத் தேனும் வேழத்தின்**
**வண்டு உளர் நறுமத மழையும் மண்டலால்**
**உண்டலர் பெருங் களி உறலின் ஓதியர்**
**தொண்டைஅம் கனி இதழ்த் தோன்றல்; சான்றது**

பெண்களின் வாய் இதழுக்குக் கொவ்வைப் பழத்தை (தொண்டைக் கனி) ஒப்பிடுவது இயல்பு. இறைவனது வாயைக் கொவ்வைச் செவ்வாய் என்றுதானே அப்பர் பெருமான் குறிப்பிடுகின்றார். கனிக்கும் உதட்டுக்கும் உள்ள பொதுத்தன்மைகள் இனிப்புச் சுவையும் செந்நிறமும் ஆகும்.

பொய்யாமொழிப் புலவரின் பாடலில் மகளிரின் இதழ்நீருக்குத் தமிழ் உவமையாக்கப்பட்டுள்ளது. ஆனால், மகளிரின் இதழ்நீரைவிட பொய்கை நீர் மிக்க இனிமை உடையது எனக் கம்பர் பாடல் குறிப்பிடுகின்றது.

புலவர்கள் கற்பனையில் எங்கெல்லாம் போகின்றார்கள்?



விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்ட அவர், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்து பல ஆக்கங்களையும் எழுதியிருந்தார். இவரது கணவர் மனோராஜ சிங்கம் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியில் செயற்பாட்டாளராக விளங்கிய காலங்களில் அவரது அரசியல் பணிகளோடு சாந்தியும் இணைந் திருந்தார். அத்துடன், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊடாக, தமிழ் மட்டுமன்றி சிங்கள மாணவர்களுக்காகவும் கல்விசார் வெளியீடு கள், ஆசிரியர் கையேடுகள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிட்டு வந்தார். அவர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் அவரது சமூகப் பணிகள் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்கள் மத்தியிலும் வியாபித்தி ருந்தன. 'கூடம்' எனும் சமூக அறிவியல் சஞ்சிகை, 'அகவிழி' எனும் ஆசிரியர்களுக்கான சஞ்சிகை, 'இருக்கிறம்' எனும் சமூக சஞ்சிகை உட்பட இன்னும் பலதரப்பட்ட நூல்கள், வெளியீடுகள் வெளிவரக் காரண மாக விளங்கினார். எழுத்துத்துறையில் மிகுந்த ஈடுபாடுள்ள அவர், 'இருக்கிறம்' சஞ்சிகையில் 'மிஸ்டர்க்ரோ' என்ற அரசியல் கட்டுரையையும்,

# பெண்ணினத்தின் அழியாத குரல்

அரசியல் விமர்சகரும், சமூகவியல் ஆய்வாளரும், பெண்ணியல்வாதியு மான கொழும்பு விழுது ஆக்க மேம் பாட்டு கழகத்தின் ஸ்தாபகரும் நிறை வேற்றுப் பணிப்பாளருமான சாந்தி சச்சிதானந்தம் சுகயீனம் காரணமாக ஆகஸ்ட் 27 ஆம் திகதி காலமானார். அவர் மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியாவார். நீண்ட காலமாக சுகயீனமடைந்திருந்த நிலை யிலும், சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டி யதுடன் சமகால அரசியல் நிலைமை களையும் நாளேடுகளில் விமர்சித்து வந்தார். ஐக்கிய நாடுகள் சபையிலும் ஆரம்பகாலங்களில் பணியாற்றியிருந் தார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட சாந்தி சச்சிதானந்தம், மொரட்டுவ பல்கலைக்கழக பொறியி யல் பட்டதாரியாக விளங்கிய போதிலும், அந்தத் துறையில் ஈடுபடாது, சமூகப் பணிகளிலேயே கூடுதலாக ஈடுபட்டு வந்தார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும், பாண்டித்தியம் பெற்ற அவர், இரண்டு மொழிகளி லும் ஆக்கங்களை எழுதியிருந்தார். மட்டக்களப்பிலுள்ள மன்று என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஸ்தாபக ராக விளங்கிய அவர், கிழக்கு மாகா ணத்தில் பல சமூக அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டார். 1958 ஆம் ஆண்டு பிறந்த சாந்தி சச்சிதானந்தத் திற்கு 2 பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் மகனும் உள்ளனர். இவரது கணவர் மனோராஜசிங்கம் 2009ஆம் ஆண்டு காலமாகியிருந்தார்.

வாழ்வியல் கோலங்களுடனான பண்பினை எடுத்துக்கூறும் 'தத்துவ விசாரம்' என்ற பத்தியினையும் எழுதிவந்தார். இதற்கு வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பும் காணப்பட்டது.

அத்துடன் அவர் 'தலைவி' மற்றும் 'உரிமைக்குரல்' என்ற பத்திரிகை களையும் வெளியிட்டு வந்தார். கிழக்கு மாகாணத்திலிருந்து முதலா வது தினசரியாக வெளிவந்த 'தினக்கதிர்' பத்திரிகையையும் அவரே ஆரம்பித்து வைத்தார். பெண்கள் அரசியலில் நுழையவேண்டும் என்ப தற்காக அவர் அரும்பாடுபட்டார். அதன் ஒரு அங்கமாக 'செங்கோல் தூக்க விளைந்தோம்' என்ற புத்தகத்தினையும் வெளியிட்டார்.

பெண்கள் மத்தியஸ்தர்களாகவும், சமாதான நீதிவான்களாகவும் இருக்கவேண்டும் என்று அவர் எடுத்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளன. அத்துடன் இளம் தலைமுறையினரின் நலன்கருதி ஆறு மாத ஊடகத் துறைப் பயிற்சியினையும் இலவசமாக வழங்கி வந்தார்.சாந்தி தனது கருத்துக்களை துணிவுடன் தெரிவிக்கும் ஆளுமை கொண்டவர். பல பெண்நலன் சார்ந்த அமைப்புக்களை நிறுவி போர்க்காலத்தி லும் அதன் பின்னரும் பணியாற்றியவர். கிழக்கு மாகாண போர்க் களத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட சவால்கள், கொடுமைகள், அச்சுறுத் தல்கள் போன்றவற்றுக்கு அவர் முகம்கொடுத்தார். போரால் நலிவுற்ற மக்களுக்குப் பணியாற்றும் அவரது நெஞ்சுறுதியை அச்சுறுத்தல் களால் தளரவைக்க முடியவில்லை.பெண்களின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி அவரது வழியில் நலிவுற்ற மக்களுக்கு வழிகாட்டுவது தான் நம்மை விட்டுப்பிரிந்த அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

சாந்தி சச்சிதானந்தத்தின் சமூக சேவைக்கு அடையாளமாக, அவரது இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டிருந்த அரசியல்வாதிகள், அரச மற்றும் தனியார்துறைகளின் உயரதிகாரிகள், கல்விமான்கள், மதத் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் அவரது இறுதிக்கிரியை களில் கலந்துகொண்டிருந்தமை இலங்கையில் மட்டுமன்றி, உலக நாடுகளின் மக்கள் மத்தியிலும் அவர் கொண்டிருந்த செல்வாக்கை பறைசாற்றுவதாக அமைந்திருந்தது. அல்லலபடும் மக்களும் இந்த நாடும் அமைதிப் பூங்காவாகத் திகழவேண்டும் என்று அயராது கனவு கண்டு கொண்டிருந்தவர் இன்று அமைதியாகிவிட்டார். ஒளிஅரசி தனது சஞ்சிகையில் நட்சத்திர இல்லத்தரசியாக அவரை நேர்கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவருக்கு ஒளிஅரசி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு சாந்தி சச்சிதானந்தம் மறைந்திருந்தாலும் தமிழ் பெண்ணி னத்தின் முன்னோடியாக ஒளிஅரசியுடன் என்றும் இணைந்திருப் பார். அவரது வழியில் ஒளிஅரசி தனது பயணத்தை தொடரும்...

# கிழவியின் தொண்டு



ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவர் தமது ஊரில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார். இதுவரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் ஒன்றைக் கட்ட நினைத்தார்.

இதற்காக நாடெங்கிலும் இருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்காக கற்களையும், பாறைகளையும் கொண்டுவரச் செய்தார்.

சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்றுவந்தது.

பலநாட்களுக்குப் பின்னர் ஒருவழியாக கோயில் கட்டிமுடிந்தது. அழகிய கோபுரமும், கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தை பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின.

மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணிபூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக் கல்லொன்றின் கோயிலை கட்டிய தனது பெயரை பொறிக்கச் சொன்னான். அதனை கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாக பதித்துவைக்கச் சொன்னான்.

அன்றிரவு அரசன் தூங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினான். மன்னன் கட்டிய கோபுரமும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப்பெற்ற சலவைக்கல்லும் இருந்தது.

இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறுயாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டு கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆம் அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத பெண்மணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது.

இதைக் கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும் மறு புறம் வேதனையாகவும் இருந்தது.

''இவ்வளவு பாடுபட்டு பெரும் பொருள் செலவுசெய்து இந்தக் கோயிலை கட்டினேன். முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப் படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப் பட்டிருக்கிறதே'' என்று வேதனையடைந்தான். காவலர்களை அனுப்பி அந்த சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்துவருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர்ப்பூராகவும் சுற்றித்திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குபுறமுள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்துவந்த ஒரு மூதாட்டியை அழைத்துவந்தனர். அவள் பெயர்தான் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன், ''அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் 'பெயர் உங்களுடையதுதானா? என்று கேட்டான். கிழவி கண்களைத் நன்கு துடைத்துக்கொண்டு சலவைக்கல்லைப் பார்த்தாள். பிறகு ''ஆம். அரசே அது என்னுடையதுதான். தவறுதலாக பொறிக்கப்பட்டுவிட்டதுபோல் இருக்கிறது'' என்றாள்.

''இல்லை அம்மா என் பெயர்தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்துவிட்டு தங்கள் பெயரை இதில் பொறித்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை'' என்றான் அரசன்.

''நான் இந்தப் பக்கம் வந்ததுகூட இல்லை. அப்படி இருக்க என் பெயர் இதில் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?'' என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

''தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள் எவ்விதமாகவாவது சம்பந்தப்பட்டிருப்பீர்கள். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்கமாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்ன என்று கூறுங்கள்'' என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, ''மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத்தான் வரும். அந்தச் சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந் தீர தண்ணீர் கொடுப்பேன். குதிரைகளுக்கு சிறு புட்களைக் கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது'' என்றாள் கிழவி.

'' தாயே, நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவேதான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார். தன்னலமற்ற தங்கள் தொண்டை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும். வாழ்க தங்கள் புகழ்'' என்று கூறிய மன்னன், அந்தக் கிழவிக்கு நிறையப் பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

**''மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்;**
**ஆகுல நீர பிற.''**

ஒளிஅரசி தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் ஒவ்வொரு மாதமும் நடக்கும் நிகழ்வுகளை ஒவ்வொரு தலைப்பில் வகைப்படுத்தி அத்தலைப்புக்குரிய Top 1 நிகழ்வுகளை தெரிவுசெய்து பாராட்டி வருகின்றது. உங்கள் நிகழ்வுகளும் Top 1 நிகழ்வுகளுக்குள் இடம்பெற வேண்டுமானால் புகைப்படங்களையும் விபரங்களையும் 07 ஆம் பக்கத்தில் உள்ள ஈமெயில் முகவரிக்கு அனுப்பவும். இம்மாதம் Top 1 நிகழ்வுகளுக்குரிய அமைப்புகளுக்கு ஒளிஅரசியின் வாழ்த்துக்கள்.



## Top 1 சுயதொழில்

வடமாகாண கால்நடை அமைச்சின் 'தகர்' திட்டத்தின் மூலம் நல்லூரைச் சேர்ந்த 30 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் கடந்த மாதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. 'தகர்' என்பது ஆடுகளைக் குறிக்கும் பழந்தமிழ்ப் பெயர் ஆகும். இதனைப் பெயராகக் கொண்டு 'தகர் வளர் துயர் தகர்' என்ற தொனிப் பொருளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சு நல்லின ஆடுவளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டமொன்றைக் கடந்த ஆண்டில் இருந்து செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்துக்கான ஆடுகளை இலங்கையின் முதலாவது கிராமசபைத் தலைவி என்ற பெருமையுடன் நெடுந்தீவில் 1940களில் கிராமசபைத் தலைவியாகப் பணியாற்றிய அமரர் செல்லம்மா நாகேந்திரன் ஞாபகார்த்தமாக அவரது உறவினரான இலண்டனில் வசிக்கும் செ.சுரேஸ் என்பவர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.



## Top 1 தெருவெளி ஆற்றுகை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேண்டுகோளிற்கினங்க போதையற்ற தேசத்தினை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 'போதை எமக்கு பகை' எனும் விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை கடந்த மாதம் இடம்பெற்றது. 'போதை எமக்கு பகை' எனும் தொனிப்பொருளில் கல்லூரி அதிபர் மே.இந்திரபாலாவின் வழிகாட்டலில் போதை விழிப்பணர்வு செயற்றிட்டத்தின் செயலாளர் மா. நேருவின் ஒழுங்குபடுத்தலில் நாடகத்துறை ஆசிரியர் எஸ். ரி. அருள் குமரனின் நெறியாழ்கையில் இத்தெருவெளி ஆற்றுகை இடம்பெற்றுள்ளது.



## Top 1 நடன நாடகம்

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட அரங்கில் 'அளப் பெரும் கருணை' என்ற தொனிப்பொருளில் நடன நாடகம் கடந்த மாதம் நடைபெற்றது. குழந்தை ம. சண்முகலிங்கதின் எழுத்துருவில் நெறியாள்கையை திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி தேவந்தி திருனந்தனும் வழங்கியிருந்தனர்.



## Top 1 வெளியீடு


ரம்யா உதயகுமாரின் 'முதற் பிரசவம்' என்னும் கவிதை தொகுதி வெளியீட்டு நிகழ்வும் வவுனியா தமிழ்ச்சங்கமும், செந்தணல் வெளியீட்டகமும், கனகராயன்குளம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்திய மாணவி பிரபாகரன் வேதிகா எழுதிய 'கண்ணாடிப்பூக்கள்' கவிதைநூல் வெளியீடும் வெளியிடப்பட்டுள்ளது. இளம் படைப்பாளிகளின் சிறந்த படைப்புக்களுக்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

தொடர்புகளுக்கு 071 4273035

சே. மகேஷ், யாழ். ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.



# பள்ளி நூலகங்களால் பயன்பெறுவோம்



நூலகங்கள் இல்லாத பள்ளிகளைக் காண்பது அரிதாகிவிட்ட இன்றைய கற்றல் சூழலில் நூலகங்களுக்குச் சென்று வாசிப்பில் ஈடுபடாத மாணவர்களையும் ஆசிரியர்களையும் காணும்போது ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. ஆனால், இத்தகைய சூழல் கற்றலின் பெருமையைக் குலைக்கும் செயற்பாடு என்பதை யாவரும் உணர்தல் அவசியமாகும். பள்ளியில் கற்பிக்கப்படும் பாடநூல்களுக்கும் மேலதிகமாகப் பலரும் புதிய துணைக் கற்றல் நூல்களைக் கற்க முன்வருதல் இல்லை.

பாடத்தை மாத்திரம் விளக்கும் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்துகொள்வதிலும் பரீட்சைக்குத் தோற்றுவதிலும் அதிலே சித்தி பெறுவதிலும் காட்டும் அக்கறையொன்றே கற்றவன், பட்டதாரி என்ற சான்றிதழைப் பெறப் போதுமானதென்ற கருத்தே நம்மவரிடையே பெருகிக் காணப்படுகின்றது. பள்ளிப் பரீட்சைகளில் முன்னேறிப் பள்ளியைவிட்டு வெளியேறிய பின்னர் எங்கள் படிப்பு முடிந்துவிட்டது என்று கருதுவோரும் எம்மவரிடையே உள்ளனர். இத்தகைய குறுகிய சிந்தனையே மேலும் மேலும் கற்கவேண்டும் என்ற விருப்பையும் நூல்களை வாசிக்கவேண்டும் என்ற ஆவலையும் தடுத்துவிடுகின்றது.

நூலகங்களைப் பயன்படுத்துவதால் நிறையும் கல்வி அளவிடற்கரியது. அதன் மூலம் கிடைக்கும் கற்றல் வசதிகள் வாழ்நாள் முழுவதும் எம்மைக் கற்றலில் ஈடுபடத் தூண்டுகிறது.

பள்ளிகளில் உள்ள நூலகங்கள் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பயன்படுத்தப்படும்போது தான் அவற்றின் மகத்துவம் மேலோங்குகிறது. நூலகம் வாசிப்புக்கான ஒரு தரிப்பிடம் மாத்திரமல்ல, கற்றலுக்கான ஒரு பல்கலைக்கழகமும் அதுவே!

பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள நூலகங்களால் பள்ளிச் சமூகம் அடையக்கூடிய பயன்கள் எண்ணிறந்தவை. நூலகத்தினுள்ளே நுழையும் போதே நூலகத்தைப் பக்தியோடு அணுகும் உணர்வு பிறக்கிறது. அங்கு குவிந்துள்ள பல்துறை சார் நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிக்கும் ஒவ்வொரு வாசகரின் அறிவும் அவற்றால் விரிவடைகின்றது.

எமது தாய்மொழியாகிய தமிழ்மொழியில் எழுதப்பட்ட நூல்களை வாசிக்குந்தோறும் சொற்களஞ்சிய விருத்தியும் இலக்கிய இரசனையும் பெருகுகின்றன. எமது வரலாறும் வாழ்க்கை முறைகளும் மேம்பட்ட சந்தர்ப்பங்களையும் அறிஞர்களும் பெரியோர்களும் வாழ்ந்து காட்டிய நல்வழிகளையும் அவை அறியத்தருகின்றன. அவற்றில் கூறப்பட்ட கருத்துக்களை எமது வாழ்க்கை முறையில் பின்பற்றி வாழவேண்டும் என்றஆவலையும் தூண்டுகின்றன. சிந்தனை விருத்திக்கும் திட்டமிடலுக்கும் நூல்களே பாதையிடுகின்றன.

திருவள்ளுவர், ஔவையார், கம்பர், இளங்கோவடிகள் போன்ற முன்னோர் தந்த நன்னூல்களை வாசித்து - கற்று அதன்படி ஒழுகவேண்டும் என்ற உந்துதலையும் நூலகங்கள் வழங்குகின்றன.

பள்ளி நூலகங்களில் அறிவியல், புவியியல், கணிதம், அழகியற்கலைகள், பொது அறிவுடன் மொழிவளம் சிறக்க உதவுவன எனப் பலவகை

நூல்கள் உள்ளன. அவை யாவுமே கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உதவுவனவாகும். நாம் செயற்படுத்துவதற்கு முனையும் பல்வேறு செயற்பாடுகளுக்கும் நாம் அரங்கேற்ற எண்ணும் பல்சுவை கலைநிகழ்வுகளுக்கும் உதவும் கருத்துக்களையும் காட்சிகளையும் தரும் நூல்களும் எமது பள்ளி நூலகங்களில் உள்ளன.

இந்நிலையில் நூலகங்களைப் பயன்படுத்துவதில் நாம் எத்தகைய ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றோம் என்பதைச் சற்றுச் சிந்திப்பது நலமானதாகும்.

ஒவ்வொரு ஆசிரியரும் தமது கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் மேலாக மென்மேலும் கற்கவும் ஆசிரியரது கற்பித்தற் பொருளுக்கும் மேலாக மாணவர்களின் வினாக்களுக்குச் சிறப்பான விடைபகரும் திறன் மேம்படவும் நூலகங்களை நிறைத்திருக்கும் நூல்கள் கருத்துரைக்கின்றன. எனவே, நூலகத்தைப் பயன்படுத்துவோம்.

ஆசிரியர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதில் காட்டும் ஆர்வத்தையும் அக்கறையையும் பின்பற்றியே மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பர். வாசிப்பதற்கான ஆவலைத் தூண்டும் முன்னுதாரணமாக ஆசிரியர்கள் தமது பள்ளி நூலகங்களைப் பயன்படுத்த முன்வரவேண்டும். பத்திரிகைகளையோ சஞ்சிகைகளையோ வாசிக்கும் பழக்கம் ஒவ்வொருவரிடமும் தூண்டப்படும் போதுதான் எம்மவரின் மத்தியில் நல்லவற்றைக் கற்றவரின் பெருக்கமும் கற்றதன்படி நல்லோராய் ஒழுகுபவரின் வர்க்கமும் அதிகரிக்கும்.

பள்ளி நூலகங்கள், பள்ளியிற் கற்கும் காலங்களில் தொடக்கி வைக்கின்ற வாசிப்புப் பயிற்சியானது, ஒவ்வொருவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்கின்ற வழியைக் காட்டும் வலுவுடையதாகத் திகழ்கின்றது. நூலகங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நற்பயன்கள் குறித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவதுடன் மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் நடந்துகொள்ளவும் வேண்டும். ஆசிரியரை இனங்காட்டுவது ஆசிரியர் ஒவ்வொருவரதும் நடத்தைகளே.

## மூளைக்கு வேலை + அறிவுக்கு விருந்து

### புதிர்கள்

01. ரவி சொக்லேட் வாங்க கடைக்குச் சென்றான். ஒரு சொக்லேட்டின் விலை ஒரு ரூபாய். 15 ரூபாய்க்கு சொக்லேட் வாங்கினான். மூன்று சொக்லேட் உறைகளைத் திருப்பிக் கொடுத்தால், ஒரு சொக்லேட் இலவசமாகத் தருவதாகச் சொன்னார் கடைக்காரர். காசு கொடுத்து வாங்கியவை இலவசமாகப் பெற்றவை என அத்தனை சொக்லேட்டுகளையும் ரவி சாப்பிட்டான். மொத்தம் ரவி சாப்பிட்டது எத்தனை சொக்லேட்டுகள் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

02. இரண்டு எண்கள் இருக்கின்றன. அவற்றை பெருக்கினால் மூன்று பத்து. அவற்றையும் அவற்றை கூட்டி வந்த தொகையையும் பெருக்கினால் முப்பத்து மூன்று பத்து. அந்த எண்கள் யாவை?

### விஞ்ஞான விளக்கம்

03. நன்னீரை விட கடல் நீர் ஏன் நீச்சலுக்கு இலகுவானது?

04. மாலையில் அடிவானம் சிவப்பு நிறமாக தோற்றமளிக்க காரணம் என்ன?

### இலங்கை வரலாறு

05. முதலாவது பெண் பிரதமர் யார்?

06. இலங்கையின் கண்டி அரசை ஆண்ட கடைசி மன்னன் யார்?


(முயலுங்கள் முடியாவிடின் அடுத்த இதழ்வரை காத்திருங்கள் அல்லது 071 8628369 க்கு அழையுங்கள்)

# தாய்மாருக்கான புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் பரீட்சை என்பது பிள்ளைகளுக்கானது என்பதைவிட பெற்றோருக்கான ஒன்று போல தற்போது தோற்றமளிக்கத் தொடங்கியுள்ளது. இது ஆரோக்கியமானவிடயமா? என்பது ஒரு புறம் இருக்க இதன் பாதிப்பானது வீட்டிலுள்ள அனைவரையும் ஆட்டிப்படைக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதிக புள்ளிகள் பெறவைக்க வேண்டும் என்பதில் ஒரு வகையினரும், சித்தியடைய வைக்கவேண்டும் என்பதில் ஒருவகையினரும், தரமான ஒரு பாடசாலையில் இணைக்க வேண்டுமே என இன்னொரு வகையினரும் என ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொருவித மனோபாவத்துடன் இதனை எதிர்கொள்கின்றனர்.

பெற்றோரின் அதிக அளவிலான நச்சரிப்பானது பிள்ளைகளிடம் ஒருவித எரிச்சல் உணர்வை தோற்றுவித்து விடுகின்றது. எப்போதும் படி ----- படி என சொல்லிக்கொண்டிருப்பது பெற்றோருக்குப் பிள்ளைகள் மீதும், பிள்ளைகளுக்கு பெற்றோர் மீதும் கோபத்தினை உண்டுபண்ணி மனதளவில் ஒரு விரிசலையும் உண்டுபண்ணிவிடுகின்றது. பிள்ளை மீதான பெற்றோரின் எதிர்பார்ப்பே அக்கோபம் என்பது பிள்ளைகளுக்கும் புரியாமலில்லை.

இம் மனநிலையை முடித்துவிடுவது போல புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற்று முடிந்திருக்கிறது. இதன் பின்னான பிள்ளைகளின் பெற்றோரின் மனநிலையை ஆராய்ந்த ஒளிஅரசி வாசகர்களாகிய உங்களுக்கும் அதனைத் தந்து மகிழ்கிறது.



**கஜேந்திரன் மதிவதனி - கஜேந்திரன் சினேகன் (மணியகாரன் தோட்டம் அ. த. க பாடசாலை)**

எனது மகன் கெட்டிக்காரன் என்பதால் பரீட்சை முடிவுகள் பற்றி நான் யோசிக்கவோ பயப்படவோ இல்லை. படிக்கும்படி கூறவேண்டிய அவசியமும் எனக்கு ஏற்பட்டதில்லை. வீட்டில் அவன் அதிகம் படிப்பதுமில்லை. கிரகித்தல் சக்தி அதிகமாக உள்ளதால் பாடசாலை, ரியூசன் படிப்புகளே போதுமானதாக இருந்தது. அவன் பரீட்சையில் சித்தியடைவான் என்னும் பரிபூரண நம்பிக்கை உள்ளதால் எந்தப் பயமுமில்லை.

**தயாளன் யசோதினி - தயாளன் கம்சத்வனி (நெல்லியடிமெதடிஸ்ற் மிசன் அ. த. க. பாடசாலை)**

பரீட்சை முடிவடைந்துவிட்டதும் மிக ஆறுதலாக உள்ளது. பெற்றோரின் கடமைகளை எனது பிள்ளைக்குச் சரியாகச் செய்துவிட்ட மனநிறைவு உள்ளது.

இன்றைய பொழுதை மகிழ்ச்சியான நிம்மதியான தருணமாக உணர்கிறேன். வேறு எந்தப் பயமும் எனக்கில்லை.

**விநாயகமூர்த்தி சுலக்சன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்)**

எனது மகன் நல்லதொரு பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்னும் எதிர்பார்ப்பு உண்டு. அதற்கான நல்லபெறுபேறு வரவேண்டும் என எண்ணுகிறேன்.

இன்று மிகமிக சந்தோசமான நாளாகும். இவ்வளவு நாளும் மனதில் இருந்த படபடப்பு இப்போது இல்லை.

**இறஞ்சகுமார் மாதினி - இறஞ்சகுமார் தாருகன்**

பரீட்சை முடியும் வரை எந்தத் தடையும் வரக்கூடாதே என்னும் பயம் இருந்தது. இத்தனை நாள் இருந்த பயத்தை எண்ணும்போது இப்போது மிக இலகுவாக இருப்பது போலத் தோன்றுகின்றது. எப்படியும் பரீட்சை முடிவுகள் வரும்வரை இந்தப் பயமும் படபடப்பும் இருந்தே தீரும். வெற்றியோ தோல்வியோ அதனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்ற எண்ணமே உள்ளது.

**குகேந்திரன் அபிராம் (வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்)**

இதுவரை இருந்த பயவுணர்வு இப்போது இல்லை. நன்றாகச் செய்துவிட்ட திருப்தி, பரீட்சை முடிந்துவிட்ட மகிழ்ச்சி இரண்டுமே உள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சை முடிந்ததும் பெற்றோர் இவ்வுணர்வை கைவிட்டு விடக்கூடாது. ஏனெனில் இது பிள்ளைகளுக்குள் ஒரு மனரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் சாதாரணதரம் வரை இவ் உந்துதல் ஓரளவேனும் தொடர்வதே பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு மிகமிக நல்லது.

# பெண்மை

ஈரைந்து வயதினிலே
சிறகு முளைத்துப் பறந்தேன்
அப்பா தடுத்தார்
சிறுபிள்ளை என்று
மூவைந்து வயதினிலே
சிறகுமுளைத்துப் பறந்தேன்
அம்மா தடுத்தார்
பருவப்பெண் என்று
ஐயைந்து வயதினிலே
சிறகு முளைத்துப் பறந்தேன்
கணவன் தடுத்தான்
குடும்பப்பெண் என்று
எட்டைந்து வயதினிலே
சிறகு முளைத்துப் பறந்தேன்
பிள்ளை தடுத்தான்
அம்மா என்று.........






கவிஞர்களுக்கு ஓர் நற்செய்தி! நீங்களும் இப்பகுதியில் சிறப்புக் கவிஞராக விரும்பினால் உங்களால் வெளியிடப்பட்ட ஒரு கவிதைப்புத்தகத்துடன் சமூகம் சார்ந்த இரண்டு கவிதைகள் எழுதி ஒளிஅரசிக்கு அனுப்புங்கள். தரம் அறிந்து தெரிவு செய்யப்பட்டு பிரசுரம் செய்யப்படும்.

## சிறப்புக்கவிஞர்

இறைவன் மனிதனை உருவாக்குவது போலவே கலைஞர்களும் தமது படைப்பினை ஆக்குகின்றார்கள். அதனால்தான் இவர்களை படைப்பாளிகள் என வர்ணிக்கின்றனர். உள்ளத்தில் எழும் கற்பனை வடிவங்களுக்கு வார்த்தையால் உணர்வு கொடுப்பவர்கள் கவிஞர்கள். இவ் ஆற்றல் எல்லோருக்கும் வருவதில்லை. மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்த சந்தோசம், துக்கம், சிரிப்பு, அழுகை, கோபம், காதல், நட்பு, பழி என அனைத்து உணர்வுகளும் ஒரு கவிஞனின் பார்வையில் ஆயிரம் அர்த்தம் தந்துவிடும். இயற்கையோ, செயற்கையோ கவிஞன் கவிதையில் வர்ணிக்கும்போது அது பிரகாசித்து ஜொலிக்கும். இவ்வாறான படைப்பாளிகளை அடையாளப்படுத்தி உலக அங்கீகாரத்தை ஏற்படுத்தவேண்டியது ஊடகங்களின் தலையாய பணியாகும். அக்கடப்பாட்டின் அங்கமாக ஒளிஅரசியும் கவிஞர்களை சிறப்பித்து மகிழ்வதில் பெருமை அடைகின்றது.

அந்த வகையில் இம்மாத ஒளிஅரசியின் சிறப்புக்கவிஞராக வல்வையூரான் (கம்பிகளின்மொழி பிறேம்) எனும் புனைபெயரில் கம்பிகளின் மொழி என்னும் தனது கவியினைப் படைத்துள்ள கோபாலகிருஸ்ணன் பிறேம்குமார் எம்மோடு இணைந்துள்ளார். இவரது பிறப்பிடம் வங்கக்குடாக்கடலின் ஓரத்தில் அமைந்து இசைபாடும் மன்னார், திருக்கேதீஸ்வரமாகும். வாழ்விடமாக விளங்குவது வீரவரலாற்றின் சின்னமான வல்வெட்டித்துறை ஆகும். சிறு வயது முதல் புரட்சிகரமான எண்ணங்கள் இவருள் இருந்ததால் பல ஆண்டுகளுக்கு முன் போராட்ட வாழ்வில் இணைந்துகொண்டார். இறுதி யுத்தத்தில் தனது அங்கங்களில் இழப்புடன் பூசா சிறைச்சாலையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையடைந்துள்ளார்.


இவரது எழுத்துலக பிரவேசம் பற்றி வினவியபோது, மக்களின் அவலம், நண்பர்களின் இழப்பு என்பவையே என் எழுத்துலகிற்கு வித்திட்டன எனக்கூறும்போது இறுகிய முகத்துடன் ஒருநொடி மௌனமானார். நட்பின் ஆழம்தான் என்னை முதல் முதலில் எழுதத்தூண்டியது, என் எழுத்துருவாக்கத்திற்கு ஆரம்பத்தில் வழிகாட்டியது ஈழநாதம், வெள்ளிநாதம் பத்திரிகைகளே ஆகும். போர் மேகங்கள் சூழ்ந்த போது என் எழுத்துக்கள் முடங்கிப்போனது. காலமாற்றத்தில் மீண்டும் பூசாவில் என் கற்பனைகள் வடிவம் பெறத்தொடங்கின எனவும் தனிமை, வேதனை, கொடுமை இவற்றின் பிரசவமாய் வெளிவந்ததுதான் கம்பிகளின் மொழி என்னும் எனது கவிதைத்தொகுப்பு எனவும் கூறும் இவர் கம்பிகளும் பேசும் என்னும் யதார்த்தத்தை மையப்படுத்தியே இப்பெயரினை சூட்டியதாகவும் கூறுகின்றார்.

மித்திரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளிலும் தனது கவிதைகள், குறுங்கதைகள் வெளிவந்துள்ளன எனவும் கூறும் இவர் போர்ச் சூழலில் மக்கள் அநுபவித்த துயரினை மையமாகக்கொண்டு காய்ந்து போகாத இரத்தக்கறை என்னும் குறுநாவலை உருவாக்கியுள்ளதாகவும் மிக விரைவில் அதன் வெளியீட்டுவிழா நடைபெறும் எனவும் கூறுகின்றார். பல திரைப்படங்களுக்கு உதவியாளராகப் பணியாற்றியுள்ள இவர். சமூக நாடகங்கள், குறும்படங்கள் என்பவற்றையும் எழுதி இயக்கியுள்ளார். அறவிடமுடியா வட்டியும் அறுந்துவிட்ட வாழ்க்கையும், வேலியும் பயிரை மேயும், காற்றாகிப் போனவன் போன்றவை இவர் எழுதிய சமூகநாடகங்கள் ஆகும். களவு என்பது கைத்தொலைபேசியை மட்டும் கொண்டு இவர் வடிவமைத்த குறும்படம் ஆகும். அறவிட முடியா வட்டியும் அறுந்துவிட்ட வாழ்க்கையும் என்னும் சமூகநாடகமும் களவு என்னும் குறும்படமும் வல்வெட்டித்துறை மக்களால் சிறப்புற பாராட்டப்பட்டவையாகும்.

இவரது கலைப்பயணமானது நீண்ட தேடலோடு இன்னும் தொடரவும் கலைத்தாயின் மகனாகி ஒரு சாதனையாளனாய் மாறவேண்டும் எனவும் ஒளிஅரசி மனதார வாழ்த்தி நிற்கின்றது.

# சிறந்த ஆடைகளை தெரிவுசெய்வது எப்படி

மனிதர்கள் அனைவரும் மானத்தை காப்பதற்காக அணிந்து கொண்ட ஆடைகள் இன்று அழகுக்கு அழகு சேர்ப்பனவாக அமைந்துவிட்டன. ஆள் பாதி ஆடை பாதி என்கின்ற அளவுக்கு ஆடைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நவீன தொழில் நுட்பத்தாலும் மற்றும் செயற்கை நூல் இழைகளின் வரவாலும் ஆடைகளின் உபயோகமும், வடிவமும், பயன்பாடுகளும் மாறிவிட்டன. ஆடைகள் இரண்டு தளங்களில் பயன்படுகின்றன. தேவை, வசதி சார்ந்த ஒரு தளம். அடையாளம் சார்ந்த ஒரு தளம். இவ்விரண்டுமே நாம் வாழும் சூழலுடன் சம்பந்தப்பட்டவையே ஆகும். நிரந்தரமாக ஒருவர் ஒரே வகையான ஆடைகளைத்தான் அணிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சூழலுக்கு ஏற்றவகையில் ஆடைகளை அணிவது சிறந்தது. இன்றைய தேவைக்காகவும் வசதிக்காகவும் நாம் நம் ஆடைகளைத் தெரிவுசெய்வதே இயல்பானது. ஒவ்வொருவரினதும் உருவத்தோற்றத்தையே மாற்றி சிறந்த கம்பீரமான தோற்றத்தை வழங்குவது ஆடைகளே ஆகும். எனவே ஆடைக்கொள்வனவின் போது ஆடைகளை சிறந்த வகையில் தெரிவு செய்ய வேண்டும். அந்தவகையில் ஆடைகள் விற்பனையில் முதன்மையான நிறுவனமான சரவணா ஆடையகத்தின் முகாமையாளருடன் ஒரு நேர்காணல் :




**கே :** ஆடைகள் விற்பனையில் முன்னோடியான நீங்கள் ஆடைகளை விற்பனைக்காக இறக்குமதி செய்யும் போது எவற்றை கவனத்தில் எடுக்கிறீர்கள்?

**ப :** தரமானதாகவும் பல்வேறுபட்ட டிசைன்களிலும் கொள்வனவு செய்வோம்.

**கே :** ஆடைகளை மக்கள் கொள்வனவு செய்யும் போது அவர்கள் எவற்றை கவனத்தில் எடுக்க வேண்டும்?

**ப :** ஒவ்வொருவரும் தமது தோற்றத்திற்கேற்றவாறு பொருத்தமான ஆடைகளை தெரிவு செய்வது முக்கியம்.
நிகழ்வுகளுக்கான ஆடைகளை நாம் தெரிவு செய்யும் போது இரவு நிகழ்வுகள் பகல் நிகழ்வுகள். ஆடம்பரமான நிகழ்வுகள், சாதாரண நிகழ்வுகள் என்பதை வகைப்படுத்தி அதற்கேற்றவாறு ஆடைகளை தெரிவுசெய்தல் வேண்டும். தரமான சேவையினை வழங்கும் நிறுவனத்தில் ஆடைத் தெரிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**கே :** மக்கள் ஆடைகளை கொள்வனவு செய்யும் போது வேறு ஏதாவது அனுகூலங்கள் உங்கள் நிறுவனத்தினால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருக்கின்றனவா?

**ப :** ஆடைக்கு பொருத்தமான வகையில் ஆபரணங்களையும் எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக விற்பனை செய்கின்றோம். நியாயமான விலையில் ஆடைகளை விற்பனை செய்கிறோம்.

**கே :** ஆடைகளை எங்கிருந்து இறக்குமதி செய்கிறீர்கள்?

**ப :** ஆடைகளை இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்கின்றோம்.

**கே :** ஆடைகள் விற்பனையில் நீங்கள் முன்னோடிகளாக விளங்குகிறீர்களா?

**ப :** ஆம். வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையினையும், சரியான தகவல்களையும் வழங்கி வருகின்றோம். வவுனியாவில் குறுகிய காலத்தில் ஆடை விற்பனையில் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம் எமது ஆடை நிறுவனமாகும்.

வவுனியாவில் உள்ள சரவணா ஆடையகத்தில் வாடிக்கையாளர்கள் ஆடைக்கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது உச்சப்பயனை பெற்றுக்கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் சிறந்த ஆடைத்தெரிவுக்காக சரவணா ஆடையகத்தை நாடமுடியும். நிபுணத்துவ முகாமையாளரின் மேலதிக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள 024 2222965 என்ற இலக்கத்திற்கு அழைக்க முடியும்.

# சுமைகளும் சுகங்களும்



அதிகாலை நான்கு மணியில் இருந்து தன்னந்தனியாக சுழன்றுகொண்டிருந்த சுமதிக்கு எரிச்சல், கோபம் எல்லாம் ஒன்றாய் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. இரவு நித்திரையில்லை. குழந்தை உறங்க 1 மணி ஆகிவிட்டது.

என்ன செய்வது, என் கஷ்டம் எப்ப தீருமோ? அப்பவே சொன்னனான் பாழாய்ப்போன கலியாணம் எனக்கு வேண் டாம் என்டு. கேட்டுதுகளே... பாரம் இறக்கி வைக்கிறம் என்டு பாழுங்கிணத்துக்கை தள்ளி விட்டிட்டு அவை சந்தோசமாய் இருக்கினம். நான் படுற பாடு எனக்குத் தானே தெரியும். தன் சோகங்களை தனியாகவே புலம்பிக் கொண்டு வேலைகளை செய்தவளுற்கு குழந்தையின் அழு கையை கேட்டதும் கோபம் கொழுந்துவிட்டெரிந்தது.

சுமதி இங்க கொஞ்சம் வாரும்... பிள்ளை நனைத்து விட்டது போல அழுகுது நித்திரை கலையாத ரவியின் குரல். அதுக்கும் நானே வரோணும் பக்கத்தை எல்லாம் கிடக்கு எடுத்து மாத்துங்கோ. ரவியின் உடுப்புகளை அயன் பண்ணியபடி பதில் தந்தாள் சுமதி. இங்க வந்திட்டுப்போம். என்னால முடியாது என்றபடி மறுபக்கம் திரும்பி படுத்துக் கொண்டான் ரவி. இதைக்கேட்டதும் சுமதிக்கு அழுகையே வந்தது.

கலியாணத்திற்கு முன்னர் உன்ரை அம்மாமாதிரி நான் உன்னை கவனிப்பன் என்று வாக்குறுதியை வழங்கிய ஆண்ம கன் ரவி. பிள்ளைக்கு 'நப்பிகின்' மாத்தி றது, பிள்ளை வண்டி தள்ளுறது இதுகளை பெண்கள் வேலையாகவும், வீட்டு வேலைகள் யாவும் பெண்களே செய்ய வேண்டும் என்ற சிந்தனை கொண்ட படித்த இளைஞன்.

குழந்தையின் அழுகை நிண்டபாடில்லை அது அழுதுகொண்டிருக்க தாய்க்கு வேலை ஓடுமா? அப்படியே போட்டு விட்டு படுக்கையறை சென்று குழந் தையை பார்த்து அழுகையை நிறுத்தி பாலும் கொடுத்துவிட்டு வந்தாள்.

ரவியைப்பார்க்கையில் வேதனையாக இருந்தது.

என்னை ஒரு மிசினாக நினைச்சிட் டாரோ தனக்குள் கேள்வியை கேட்டுக் கொண்டு மறுபடி புலம்பலை ஆரம்பிக் கிறாள். தினமும் தனியனாய் 4 மணிக்கு எழும்பி. பள்ளி செல்லும் பிள்ளை, வேலைக்குப்போகும் கணவன், இவை களின் அன்றாட வேலைகளையும் செய்து, தனது வேலைகளும் செய்து அயன் பண்ணி, சமையல் செய்து, குளிக்கவைத்து, சாப்பாடு பரிமாறி, தான் வேலைக்குச் சென்று மறுபடி வந்து குழந்தைகளை அழைத்து, வீட்டு வேலைகள் பார்த்து நித்திரைக்குப்போக 10 - 11 ஆகிவிடும். அதி காலை 4 மணிக்கு எழுந்தால் தான் அனை வரையும் சரியாக கவனித்து 8 மணிக்கு தானும் வேலைக்கு போகலாம். கணவனி டம் இருந்து எந்த உதவியும் ஆதரவும் இன்றி தன்னந்தனியாக சுழலும் அவளது மன உளைச்சலையும், சுமையையும் பங்கிட அவன் தயாராக இல்லை.

அவனைப்போலத்தான் அவளும் வேலைக் குச்செல்கிறாள்; உழைக்கிறாள். ஆனால், அவளுக்குமட்டும் குடும்பத்தில் சுமை ஏன் அதிகம்...? வீட்டு வேலைகள் பெண் கள் வேலையாம். அதைச்செய்ய வெட்கப் படும் அவன், நான் பொட்டையன் இல்லை

உதுகள் செய்ய என்பான். உதவி கேட்டால் தேவை யில்லாத பிரச்சினை.

என்ன நீர் தான் பெரிய வேலைக்குப்போற பொம்பிளை மாதிரி தினம் படம் காட்டிறீர்... உங்க மற்றவை போறதில்லையோ? பிள்ளையளை கவனிச்சுக்கொண்டு எங்கட அம்மாமார் வீட்டு வேலை செய்யலையோ? உமக்கு வேறை வோசிங் மிசின், காஸ் அடுப்பு இப்படி நிறைய வசதிகள் கிடக்கு. அவை எவ்வளவு கஷ்டப்பட்டவை என்று பேசுவான். ஏனப்பா என்னை மாதிரி அவையும் வேலைக்குப்போனவையோ... 24 மணிநேரம் வீட்டில இருந்தவை செய்திச்சினம். நான் வேலைக்கும் போய் இங்கையும் மிசினாய் வேலை செய்யவேண்டியதாய் கிடக்கு, வோசிங் மிசினுக்க உடுப்பு போடாமல் தானாய் தோய்க்குமே... அடுப்பில காய்கறியளை வெட்டி வைக்காமல் தானாய் காய்ச்சுமே...? அதுக்குதான் உதவி வேணும் எண்டிறன். நான் என்ன மிசினே வீட்டிலையும் மாடாய் வேலைசெய்து ஒபி சிலையும் வேலை செய்து கஷ்டப்பட அவளும் கேட்காமல் இல்லை.

அவளது பேச்சிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அவனை விட அவள் எந்த விதத்தில் உயர்ந்தவள் அல்லது எந்த விதத்தில் தாழ்ந்தவள். 2 வேலை செய்ய அவனால் முடியாதவிடத்து அவ ளால் எப்படி முடியும். குடும்பம் அவளுடையது, குழந்தைகள் அவளுடையது அதற்காக தனியாக கஷ்டப்பட முடியுமா?

சுகங்களை பகிரும் துணைவன் சுமைகளையும் பகிரும்போதுதானே அவளுக்கும் மகிழ்ச்சி. அவ னும் ஒரு கை கொடுத்தால். 4 மணிக்கெழும்பி 8 மணிவரை சுடுதண்ணியாய் கொதிப்பவள். சற்று தாமதமாய் எழுந்து பிள்ளைகளையும் கவனிச்சு சந்தோசமாய் ஆரோக்கியமாய் இருக்கலாம்தானே. இது அவளது கேள்விகள்.

அவன் அதை உணர்ந்ததாய் தெரியவில்லை. எத்தனை நாள் தான் வாய்விட்டுக்கேட்பது அது தான் தனக்குள் புலம்புகிறாள். மணி 7 அடித்துவிட் டது. 6.30 க்கே பிள்ளைகளை எழும்பி குளிக்க வைத்து தயார்படுத்திவிட்டாள். தானும் தயாராகி விட்டாள். 7 அடித்ததும் ரவி படுக்கையை விட்டு எழுந்தான்.

உடுப்புகள் றெடியா... எந்த சேட் அயன் பண் ணினீர்? அதற்குள் ஆயிரம் கேள்விகள்.

ஏன் நீங்களும் பேபியே, அயன்போட்ல கிடக்கு போய்ப்பாருங்கோ... பிடிக்காட்டால் திரும்ப அயன் பண்ணுங்கோ. அவள் பதில் சொல்லி விட்டு பிள்ளைகளை அதட்டி உணவு ஊட்டிக் கெண்டிருந்தாள். ரவி குளித்து முடித்து வந்து மேசையில் வைத்திருந்த தேநீர்க் கோப்பையை தூக்கியபடி சென்று தொலைக்காட்சிப்பெட்டிக் குள் தன்னை நுழைத்துக்கொண்டான்.

அழைப்பு மணி அலறியது.

கதவைத்திறக்கிறியளோ என்று குரல் கொடுத் தாள். போய்த்திறவும் உமக்குத்தான் ஆக்கள் வந்தி ருப்பினம் என்றான் ரவி. அவனை முறைத்துப் பார்த்தபடி கதவைத்திறந்தாள் சுமதி. வாசலில் நின்றது பக்கத்துவீட்டு சுந்தரி.

வாங்கோ, என்ன சுந்தரியக்கா இந்த நேரம்... ஆச்சர்யமாக கேட்டாள். ஏனெனின், சுந்தரியும் இப்ப அவசரமாய் வேலைக்கு கிளம்பிக்கொண்டி ருக்க வேண்டியவள். ஒரு உதவி கேக்க வந்தனான் சுமதி என்றாள் சுந்தரி.

என்னக்கா சொல்லுங்கோ கருசனையோடு வினவினால் சுமதி.

என்னெண்டால் கண்ணன் நேற்றொரு சின்ன கார் விபத்தில கொஞ்சம் காயப்பட்டிட்டார். இரவு ஒரு பாட்டியால வரேக்க நடந்திருக்குது. அது தான் நீங்கள் உங்கட பிள்ளையளை பள்ளிக்கூடம் கூட்டீட்டு போகேக்க கபிலனையும் கூட்டீட்டுப் போறியளே? எனக்கு கொஞ்சம் வேலை கிடக்கு... வழமையா அவர் பிள்ளைகளை வெளிக்கிடுத்த நான் சமைக்கிறனான். அவர் பிள்ளையளை கொண்டே விட்டிட்டுவர நான் வெளிக்கிட்டிடு வன் போகலாம்.

இண்டைக்கு இரவு கண் முழிச்சது என்னால வெள்ளெனவும் எழும்ப முடியேல்லை. பாவம் கண்ணன் நான் சமைக்காமல் விட்டால், பிறகு நாங்கள் வந்து அவசரப்படுவம் எண்டு ஏலாத தோட எழும்பி சமைச்சு கஷ்டப்படுவார். அதுதான் இவனை உங்களோட விட்டால் நான் சமைச்சு வைச்சிட்டு என்ர நேரத்துக்குப்போவன். உங்க ளுக்கு ஏலும் என்டால் சரி; இல்லாட்டால் நான் கடையில எடுத்து வைச்சிட்டுப்போப்போறன் என்று முடித்தாள் சுந்தரி.

சே பிரச்சினையில்லை அக்கா. இவை இரண்டு பேரும் இப்ப தயாராகிட்டினம். நான் போகேக்க கூப்பிடிறன். கொண்டு வந்து ஏத்திவிடுங்கோ. பின்னேரமும் நான் கூட்டீட்டுவாறன். கண்ணன் அண்ணைக்கு நல்லாகும் மட்டும் நான் கூட்டீட் டுப்போறன். அக்கா நீங்கள் கஷ்டப்படாதேங்கோ என்ற சுமதி பெருமூச்சுத்தான் விட முடிந்தது.

சுமதிக்கு ஒரு விதத்தில் சுந்தரிமேல் பொறாமை தான். இயலாத நேரத்திலும் கண்ணன் அண்ணை அவாக்கு உதவி செய்ய நினைக்கிறார். அவர் கஷ்டப் படக்கூடாது என்று மனைவி எப்படித்துடிக்கிறா இதெல்லோ வாழ்க்கைத்துணை என்ற சொல்லிற்கே அழகு. இனி என்ன செய்வது மௌனமாய் விட்டு வந்த பாதி வேலையை தொடரச்சென்றாள் சுமதி.

ம்... ஒற்றுமையாய் வாழுற அந்த குடும்பத்திற்கு இந்த உதவியை ஆவது செய்வமே என்று புறு புறுத்த படி பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு பாட சாலை சென்றுவிட்டாள் சுமதி. மறுநாள் வழ மையை விட சற்று முன்னரே எழும்பிய ரவி தன் வேலைகளை தானே செய்யலானான். அப்படியே பிள்ளைகளையும் கவனித்தான். அத்தோடு நின்று விடாமல். சுமதி நான் வேணும் என்றால் இன்டைக்கு பிள்ளையளை கொண்டே விட்டிறன். நீர் வரேக்க கூட்டிட்டுவாருமன். என்றான் ரவி.

சுமதிக்கு ஒரே ஆச்சரியம் என்ன இண்டைக்கு சந்திர - சூரிய கிரகணம் ஏதுமே என்று முழித்தாள்.

என்ன லூசு மாதிரி முழிக்கிறீர்... இல்லை நேற்று சுந்தரி கண்ணனுக்கு சுகமில்லை என்ற உடனை வழமை குழம்பி கஷ்டப்பட்டு உன்னட்டை உதவி கேட்டு வந்திட்டா... அவனுக்கு ஒன்று என்றதும் அவவின்ர நாளாந்த வாழ்க்கையில இத்தனை மாற்றம். ஆனால், எனக்கு ஒன்டென்றால் உனக்கு எந்த மாற்ற மும் இருக்காதே. நான் நல்லாய் இருக்கும்போது கூட நலமற்றவன் மாதிரி நடந்திருக்கிறனே, இனியாவது கொஞ்சம் சுமப்பம்.

''என் குடும்பச்சுமைகளை சுமப்பதில் சுகம் காணுவம்'' என்றபடி கண் சிமிட்டினான். அவனது பேச்சைக்கேட்க பாவமாய் இருந்தது சுமதிக்கு. இருந்தாலும் அதுதானே உண்மை. சுகதேகியான அவன் இத்தனை நாளும் அவளில் சார்ந்தல்லவோ இருந்தான். குழந்தைகளோடு அவனையும் சேர்த் தல்லவோ அவள் சுமந்தாள். சரி. ரவி நீங்கள் கூட்டிக் கொண்டு போங்கோ நான் அடுப்பிலை வைச்சது களை இறக்கி வைச்சிட்டு ஆறுதலாய்ப்போறன். என்ற அவளின் வார்த்தையில் ஒரு தெளிவும் குளிர்ச்சி யும் நிறைந்திருந்தது அதை கவனித்த போது அவனுக்கே உறைத்தது. இனியாவது விடிய விடிய வீட்டில வெடி விழாமல்... அமைதியாய் நாட்கள் மலரட்டும் என்று கூறி பிள்ளைகள் கையைப்பிடித்தான்.

---

## ஒளி அரசி நடாத்தும் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி : 05

# (சித்திரம் பேசுதடி கண்ணம்மா)

**மாணவர்கள் மத்தியில் ஓவியம் வரைதலை ஊக்கப்படுத்துவதற்காக ஒளி அரசியின் தேசிய மட்ட சான்றிதழுக்காக இப் போட்டி அனைத்து வகுப்பு மாணவர்களும் பங்குபற்றக்கூடியவாறு நடத்தப்படுகின்றது. இதன்படி குறிப்பிட்ட தலைப்புக்கான ஓவியத்தை மாணவர்கள் சுயமாக வரைந்து அதனை 'ஓவியப் போட்டி' எனக் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் எழுதி எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.**

### போட்டிக்கான நிபந்தனைகள்

- **மாணவர்கள் ஓவியத்தை A4 அளவிலான வெள்ளைத்தாளில் வரைந்து வர்ணமிட்டு ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.**
- **பரிசுக்குரிய சான்றிதழ்கள் வகுப்பு ரீதியாக முதல் மூவருக்கு தபால் மூலம் அனுப்பிவைக் கப்படும்.**

### ஓவியப் போட்டிக்கான கூப்பன் 05

பெயர் : ..............................
வகுப்பு : ..............................
பாடசாலை : ..............................
தனிப்பட்ட முகவரி : ..............................
..............................
தொலைபேசி : ..............................

போட்டோ பிரதிகள் எடுக்கப்பட்ட கூப்பன் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

### செப்டெம்பர் மாத ஓவியப் போட்டிக்கான தலைப்பு

முன்பள்ளி தொடக்கம் தரம் 2 வரை - **அழகான புத்தகப்பை**
தரம் 3 தொடக்கம் தரம் 8 வரை - **உணவு பரிமாறும் பெண்**
தரம் 9 தொடக்கம் உயர்தரம் வரை - **கிராமத்து வீட்டின் திண்ணைப்புறம்**

மேலதிக தொடர்புகளுக்கு : 071 8628369

# லக்ஸினியுடன் ஒரு கணப்பொழுது

பெண் விடியலுக்கான விழிப்புணர்வு - 04



குடும்பத்துடன் லக்ஸினி



நெடுந்தீவு என்னும் அழகிய கிராமத்தில் தனித் தனியான அரச அலுவலகங்கள் அமைக் கப்பட்டு சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன.

அந்தக் கிராமம் நீண்டதும், நீண்டதூரத் தில் இருப்பதாலோ என்னவோ அதற்கு ஏற்றாற்போல் பெயரும் அமைந்துள்ளது. அதுதான் நெடுந்தீவுக் கிராமம். அது கிராம மாக இருந்தாலும் நகரம் போலவே அதன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 3ஆம் திகதி. யேசுதாஸன் குடும்பத்தில் பேரிழப்பு நடந்த நாள். விடுப்புப் பார்க்கும் தீவான நெடுந்தீவை திரும்பிப் பார்க்க வைத்த நாளும் அதுதான்.

யேசுதாஸன் பிறிடா கிலறா தம்பதிகளின் 4ஆவது மகள்தான் லக்ஸினி. வறிய குடம்பத்தில் பிறந்த லக்ஸினியின் தந்தை யார் ஒரு வண்டில்காரன். 12 வயது நிரம்பிய லக்ஸினி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் 8ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். அந்தக் குடும்பத்திலேயே மிகித்துடிப்பான வளாக இருந்த லக்ஸினி பாடசாலைக்கல்வி, விளையாட்டு, ஆடல், பாடல் என இந்த உலக வாழ்வின் சந்தோசமான பருவத்தை அனுபவித்து வந்தாள்.

கள்ளங்கபடமற்ற இயல்புகளோடு இருந்த லக்ஸினிக்கு பேரிடி விழுந்த நாள் 2012ஆம் ஆண்டு மார்ச் 03ஆம் திகதி. யேசுதாஸன் குடும்பம் சிறுகுடிசை வீட்டைமாற்றி சிறிய வீடொன்றை கட்டும் முயற்சியில் ஈடுபட்ட போது லக்ஸினி தன்னாலான சிறு உதவிகளை தன்குடும்பத்திற்கு செய்வாள். வேலையில் ஈடுபட்டிருந்த யேசுதாஸன் மதிய சமையலுக் காக 100 ரூபா பணத்தை கொடுத்து லக்ஸினியை மீன் வாங்கி வரும்படி அனுப்பிவிட்டார்.

லக்ஸினி அப்பாவிடம் பணத்தை வாங்கிக் கொண்டு நெடுந்தீவு சந்தைக்கு சென்றாள்... அன்று; கச்சத்தீவு பெருநாள். அதனால் சந்தை பூட்டப்பட்டு இருந்தது. மீன் தேடி சந்தையை விட்டு வெளியே கொஞ்சத்தூரம் சைக்கிளை திருப்பியிருக்கிறாள் லக்ஸினி. அவளுக்குப் பின்னால் 35 வயதைக் கடந்த அவனும் சென்றதை அயலவர்கள் பார்த்திருக்கின்றனர். அதற்குப் பின்னர் லக்ஸினியை எவரும் காணவில்லை.

இதற்கிடையில் சங்கீதம் பழக போகவே ணும் என்று லக்ஸினி எங்கே என அவளது பாடசாலைத்தோழி வீடு தேடி வந்தாள். அப்போதும் லக்ஸினி வந்திருக்கவில்லை.

சந்தை பூட்டப்பட்டுள்ளது என்பதை எவர் மூலமோ அறிந்துகொண்ட லக்ஸினியின் தாயார் சந்தை பூட்டியிருப்பதால் லக்ஸினி விளையாடப்போயிருப்பாள் என்ற எண்ணத்தில் அவளைத் தேடவில்லை. ஆனால், பல மணித்தியாலங்கள் கடந்த பின்னும் லக்ஸினி வீடு திரும்பவில்லை. யேசுதாஸன் தேடிப்போன இடங்களிலும் லக்ஸினி இல்லை. அவளின் நண்பிகளும் தம்மோடு லக்ஸினி வரவில்லை எனக் கூறினர். இதனால் பதற்றமடைந்துவிட்டனர். தமது மகளை மிகுந்த ஏக்கத்தில் தேடத்தொடங்கியது லக்ஸினி குடும்பம்.

அந்த வேளையில் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்துக்கு பெண்ணொருவர் பதறியடித்தபடி சென்றார். நெடுந்தீவு பிள்ளையார் கோவிலின் அருகிலுள்ள காட்டுக்குள் தான் விறகு பொறுக்க சென்றதாகவும், அங்கு சிறுமியொருத்தி ஆடைகள் கிழித்தெறியப்பட்டு, காயங்களுடன் இறந்து கிடப்பதாக நேரடி சாட்சியம் கொடுத்தார். இந்தச் செய்தி நெடுந்தீவு மக்களை நிலை குலையச்செய்தது. ஆனால், இந்தச் செய்தி மிகத் தாமதமாகவே யேசுதாஸ் குடும்பத்திற்கு கிடைத்தது. தனது மகளாக இருக்கக் கூடாது என இறைவனை மன்றாடியபடி பதறியடித்துக்கொண்டு தன் மகனோடு அந்தப் பற்றைக்காட்டுக்குள் விரைந்தார் யேசுதாஸ். அவர் தன் கையால் மடித்துக்கொடுத்த 100 ரூபா காசு அந்த மடிப்புக் குலையாமல் அப்படியே இருந்தது. அவள் சைக்கிள் ஒரு ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அருகே இரத்தம் வடிய உயிரற்ற சடலமாக குப்புறக் கிடத்தப்பட்டிருந்தாள் லக்ஸினி. ஆடைகள் கிழித்தெறியப்பட்டதைப் போலவே அவளின் முகமும் குத்திக் கிழித்துக் காயப்படுத்தப்பட்டிருந்தது. நெடுந்தீவு மக்கள் கொந்தளித்தனர். லக்ஸினி கொல்லப்பட்ட சம்பவம் வெளித்தெரிந்தவுடன் பாலியல் வன்முறையாளன் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

பல திருமணங்களைச் செய்து வன்முறையில் பெயர்பெற்ற அப்போதுதான் நெடுந்தீவில் ஒரு திருமணத்தை முடித்திருந்த ஜெகதீஸ்வரன் என்பவர் லக்ஸினியின் பின்னால் சென்றதை அயலவர்கள் கண்டிருந்தனர். அவரும் ஊர் மக்களுடன் சேர்ந்து இந்த சம்பவத்துக்கு எதிராகக் கண்டனம் எழுப்பிக்கொண்டு அலைந்திருக்கிறார். அப்போதுதான் ஊரவர்கள் ஜெகதீஸ்வரனின் காலில் இரத்தம் படிந்திருப்பதைப் பார்த்தனர். காரணம் கேட்டனர். அப்போது அவர் பலருக்கும் பலவிதமாக கூறிய பதில் அவர்மேல் சந்தேகத்தைக் கொண்டுவந்தது.

லக்ஸினியை கடைசியாகக் காணும்போது ஜெகதீஸ்வரனே பின்தொடர்ந்தார் என்பதைக் கடைசியாய் கண்டவர்கள் சாட்சி சொன்னார்கள். அவர் வாழும் பகுதியில் இருக்கும் சிறுமிகளைத் துரத்தி வருபவர் என்றும், சிறுமிகளை ஆசை வார்த்தை கூறி தன் இச்சைக்குப் பயன்படுத்த முயற்சித்தவர் என்றும், ஊர்காவற்றுறையில் ஏற்கனவே ஒரு சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திக் கொன்றவர் எனவும் ஜெகதீஸ்வரனின் நிகழ்காலத்தையும் கடந்த காலத்தையும் அலசி ஆராய்ந்த அந்தக்கிராமத்திற்கு சந்தேகத்திற்கு உரியவராக அவரே மக்களின் கண்களிற்குள் வந்தார்.

அப்போது நேரம் இரவு 10 மணி. ஜெகதீஸ்வரன் வீட்டுக்குள் நுழைந்து, படுத்துகிடந்த அவரைப் பிடித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அவரைத் தம்மிடம் ஒப்படைக்கக் கோரி அழைத்துச் சென்றனர். மக்கள் தம்மிடமே ஒப்படைக்கும்படியும், தாமே இதற்குத் தண்டனை வழங்கப்போவதாகவும் போராடினர். ஆனாலும் பொலிஸ்தரப்பு அதற்கு அனுமதிக்கவில்லை. குற்றவாளியைக் கைதுசெய்து சிறைக்கு அனுப்பியது. மக்கள் நீதி வேண்டி போராடினர். ஆனாலும் நெடுந்தீவு மதில்களைக் கடந்து அந்தப் போராட்டங்கள் வெளியில் வரவில்லை. நீதிகோரலுக்கான அவர்களின் குரல் எடுபடவுமில்லை.

ஆனாலும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் விசாரணைகளை நடத்திக்கொண்டிருக்கின்றது. தீர்ப்புக்கள் தாமதமாகும்போது தாமதிக்கப்படும் நீதி மேலும் பல அநீதிகளையே உருவாக்கிவிடுகிறது. பிரச்சினைகளுக்கு கிடைக்கும் உடனடித்தீர்வுதான் சட்டத்தை நிலைநாட்டுகிறது. அடுத்த இதழில் சாரதாம்பாளுடன் வலம் வருவோம்...

**(விடியலுக்கான விழிப்புணர்வு தொடரும்...)**

# பொது அறிவுப் போட்டித் தொடர் - 08

அறிவுத் தேடலில் ஆர்வமுடைய வாசகர்களது அறிவுப்பசியை தீர்க்கும் ஒரு களமாக ஒளிஅரசி **சைப்பீ ரெடிங் கம்பனியினது** அனுசரணையுடன் பொது அறிவுப் போட்டித் தொடரினை அறிமுகப் படுத்தியுள்ளது. இங்கு தரப்படுகின்ற பொது அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு சரியாக விடை எழுதி அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு முறையே ரூபா 750, ரூபா 500 மற்றும் ரூபா 250 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

## வினாக்கள் :

01. உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடி கொண்ட நாடு எது?
02. ஹோர்மோன் இல்லாத உயிரினம் எது?
03. ஹோலிவுட் படத்திற்கு முதல் முதலில் இசை அமைத்த இந்தியர் யார்?
04. கம்பளிக்காக வளர்க்கப்படும் ஆடுகளுக்கு பெயர் என்ன?
05. ''வாடகைக்கார்கள்'' இல்லாத நாடு எது?
06. மனிதனின் கண்ணீரில் உப்பின் பெயர் எது? பூச்சிகளில் வேகமாகப் பறக்ககூடிய உயிரினம்?
07. உலகின் மிக பெரிய பாலம் எங்கு கட்டப்பட்டுள்ளது?
08. வாட்ஸ்அப் (Whatsapp) அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
09. பூரண ஆயுள் எத்தனை ஆண்டுகள் வாழ்வதைக் குறிக்கும்?
10. உடலின் எந்த உறுப்பு இரத்தத்தை சுத்திகரிக்கிறது?


அனுசரணை

**SAIFI TRADING COMPANY**

IMPORTERS OF PAPER & BOARD

No. 96, New Moor Street, Colombo - 12.


**உங்களது விடைகளை ''ஆசிரியர் ஒளிஅரசி, இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14'' என்ற முகவரிக்கு 20.09.2015 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.**

### பொது அறிவுத் தொடர் - 08

முழுப்பெயர் : ..............................

..............................

முகவரி : ..............................

..............................

..............................

தொலைபேசி இல.: ..............................

ஒப்பம் : ..............................

### பொது அறிவுத் தொடர் - 06 இல் வெற்றியீட்டியவர்களும் அவற்றிற்கான விடைகளும்

**01 ஆம் பரிசு : திருமதி. வே. தவமணிதேவி, புலோலி தெற்கு, புலோலி.**


**02 ஆம் பரிசு : திருமதி ம. டில்லிமலர், நெல்லியடி.**

**03 ஆம் பரிசு : ஜெயந்திகாந்தி றோய், அல்வாய்.**

1. முதன்முதலில் அவுஸ்திரேலியாவில் 1869ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஹெர்மன் என்ற பொருளாதார பேராசிரியரால் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
2. 305 எலும்புகள். பதினெட்டு அல்லது இருபது வயதில் 206ஆக குறைந்துவிடுகிறது.
3. 150 ஆண்டுகள்
4. C.W.W. கன்னங்கரா
5. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
6. இமயமலை (இந்தியா)
7. வத்திக்கான் நகரம்
8. சீனா
9. காடிகோகிராப்
10. ஏதென்ஸ்

# பல்லாண்டு வாழும் அப்துல் கலாம்

இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவரும், விஞ்ஞானிகள், இளைஞர்கள், பள்ளிச் சிறார்கள் மற்றும் சாதாரண குடிமக்கள் என அனைவராலும் போற்றப்பட்டவரும், அனைவரது நெஞ்சில் நிறைந்தவரும், தமிழகத்தின் தலைசிறந்த மைந்தருமான பாரத ரத்னா டொக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாமின் மறைவினால், அனைவரும் மிகுந்த மனவேதனை அடைந்துள்ளோம். ராமேஸ்வரத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை குடும்பத்தில் பிறந்து, உன்னத நிலையை அடைந்தவர் அப்துல் கலாம் - எதையும் விஞ்ஞானப் பார்வையுடன் அணுகிய டொக்டர் அப்துல் கலாம், இளைஞர்கள் வாழ்வில் ஏற்றம்பெற உந்து சக்தியாக விளங்கினார் - ஏவுகணை உருவாக்கம், அணுசக்தித் திட்டங்கள் ஆகியவற்றில் அவருக்கு மிகுந்த பங்களிப்பு இருந்தது. போலியோ பாதித்தவர்களுக்கான எடை குறைந்த ஊன்றுகோல் மற்றும் இதய நோயாளிகளுக்கான ஸ்டென்ட் கருவி ஆகியவற்றை உருவாக்கியதில் மனநிறைவு கண்டவர். நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் - ஆனால், இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்'' என்ற அவரது வார்த்தைகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர் அப்துல் கலாம். அப்துல் கலாம் மறைந்துவிடவில்லை. எம்முடன் பல்லாண்டு காலம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.







# சர்வதேசத் தர சாதனை

## யாழ் இந்துக்கல்லூரி மாணவன் சிவமைந்தன்

சர்வதேச தர சாதனைகளை கடந்த 3 வருடங்களாக பெற்று வருகிறார் நடேசமூர்த்தி சிவமைந்தன் என்ற மாணவன். 13 வயதான சிவமைந்தனுக்கு சர்வதேச சாதனைகள் படைப்பது என்பது தற்போது சாதாரண விடயமாகிவிட்டது. சர்வதேச சாதனைகளை ஒருவர் படைப்பது என்பது மிகவும் கடினமான விடயமாகும். தமிழ் மாணவனாக சர்வதேச சாதனையை தொடர்ந்து வந்த 3 ஆண்டுகளிலும் நிலைநாட்டி தனது கல்லூரியான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு பெருமை தேடி கொடுத்திருக்கிறார். புலமைப்பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப்பெற்ற அவர் தொடர்ந்து தனது கல்விச் செயற்பாடுகளில் சிறந்தோங்கினார். பிலிப்பைன்ஸில் நடைபெற்ற சர்வதேச கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் கணிதப் பிரிவில் 2013 ஆம் ஆண்டு வெண்கலப்பதக்கத்தையும், 2014 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடைபெற்ற கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் விஞ்ஞான பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், இந்த வருடம் சீனாவில் நடைபெற்ற ஒலிம்பியாட் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் தனதாக்கி சாதனையின் உச்சியை தொட்டுள்ளார். மேலும் கணித விநாவிடை, புதிர்போட்டிகள், சமூகவிஞ்ஞான போட்டிகள் என பல போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடர்ந்து பதக்கங்களை வென்று சாதனை படைத்து வருகிறார். சிறுவயதிலேயே சர்வதேச சாதனைகளை படைத்த சிவமைந்தனையும் அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டிய பெற்றோர், யாழ் இந்துக்கல்லூரி பாடசாலைச் சமூகம் மற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் ஒளிஅரசி பாராட்டி வாழ்த்துகிறது.

இது போன்ற சாதனைகளை படைத்து நிற்கும் எம் அருமை மாணவர்களின் சாதனைகளை ஒளிஅரசிக்கு அறியத்தருவதோடு மேலும் பல மாணவச்செல்வங்கள் சாதனை படைக்க வழிகாட்டுங்கள். (071 4273035)

# இசையால் வசமா

கருத்தின் உறைவிடமாகவும், அழகின் இருப்பிடமாகவும் அமைந்து, உள்ளத்தை உள்ளம் உணர்ந்தவாறு வெளிப்படுத்தி உள்ளத்திற்கு உவகையூட்டுவது இசையாகும். இசையானது தன்னலம், பழி பாவங்களும் நிறைந்த இந்த உலகை விட்டு நம்மை நல்ல உலகுக்கு அழைத்துச் செல்கிறது. ஓசையும் நயமும் இசைந்து மனதுக்கு இன்பம் அளிப்பது இசை. இசையால் வசமாகாதவர் எவரும் இல்லை. அந்தவகையில் எமது கலை பண்பாடுகளை வளர்த்தெடுக்கும் வகையில் கீதவாஹினி இசைக்கல்லூரியுடன் ஒளிஅரசி...

**முன்னாள் யாழ் வலய அழகியல்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆசிரியை கிருஷ்ணவேணி மயில்வாகனத்துடன்.**

இசைத்துறைக்கே எனது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்துவிட்டேன் எனது முதல் குருவாக ராதாதேவி சபாபதி அவர்களிடமே இசைக் கலையைப் பயிலத் தொடங்கினேன். மன்னார் விடத்தல்தீவு பாடசாலையில் எனது இசைத்துறைக்கான சேவையை 1977 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்தேன். அதனைத் தொடர்ந்து பல பாடசாலைகளிலும் இசைக்கல்வியை பயிற்றுவித்து பல மாணவர்களை இசைத் துறையில் தேசிய மட்டத்தில் சாதனை புரியவைத்து தங்கப்பதக்கங்களையும் பெறவைத்தேன். அதன் பின்னர் 6 வருடமாக இசைத்துறையின் சேவைக் கால ஆசிரியராக பணிபுரிந்தேன். இசைத்துறையின் உதவிக்கல்விப் பணிப்பாளராக தேர்ந்தெடுக்கப் பட்டு 5 வருடங்கள் கடமையாற்றினேன். ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு வயலின், வாய்ப்பாட்டு, புல்லாங்குழல் என்பவற்றை முறைப்படி கற்பித்தேன். என்னிடம் கல்வி பயின்ற 30 மாணவர்கள் சங்கீத கலாவித்தகர்களாகவும், 40 மாணவர்கள் இசைக்கலைமணி, நுண்கலைமணி பட்டங்களையும் பெற்றுள்ளனர். வாத்திய பிருந்தா என்னும் பல்சுவை இசை நிகழ்வை தொடர்ந்து வழங்கி வருகிறேன். 1980 ஆம் ஆண்டிலிருந்து கீதவாஹினி இசைக்கல்லூரியை ஆரம்பித்து இன்றுவரை எனது இசைப்பயணத்தை வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டிருக்கிறேன். எனது மாணவர்களே இன்று ஆசிரியர்களாகி கொழும்பு, நோர்வே, லண்டன், அவுஸ்ரேலியா போன்ற பல்வேறு நாடுகளிலும் இசைக்கல்லூரியை ஆரம்பித்து இசைத்துறையை வளர்த்துவருகின்றனர். மேலும் கர்நாடக சங்கீதத்தில் மாணவர்களுக்கேற்ற வகையில் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். பக்தி இரச கீர்த்தனைகளை உருவாக்கி இசையமைத்து இறுவட்டு வடிவிலும் வெளியிட்டுள்ளேன். இசை ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்களும் பயன்



கிருஷ்ணவேணி மயில்வாகனம்



கீதவாஹினி இசைக்

# தம் உள்ளங்கள்

பெறக்கூடிய வகையில் சமயத்தோத்திரப் பாடல்களை இறுவட்டாக வெளியிட்டுள்ளேன். கடந்த வருடம் யாழ் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையால் 'யாழ் ரத்னா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டேன். எனது மாணவி பிரவீணா சிறந்தவகையில் இசைத்துறையில் சாதனை படைத்ததுடன் விரிவுரையாளராக கடமையாற்றி வருவது என்னை பெருமிதம் கொள்ளச்செய்கிறது. மாணவர்களிடையே கலை உணர்வை வளர்ப்பதன் ஊடாக அன்பு, அடக்கம், பணிவு, ஒற்றுமை, தலைமைத்துவம், தெய்வீகம் போன்ற பண்புகளை சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு விதைத்துவிடவேண்டும் என்பதுடன். தமிழர்கள் தமது கலைகளை வளர்ப்பதன் ஊடாக கலை கலாசாரத்தை அழிவடையாமல் பாதுகாக்கவேண்டும் என்பதே எனது அவாவாகும்.

**கிழக்கு பல்கலைக்கழக அழகியல்துறை வயலின் விரிவுரையாளர் பிரவீணா மாதவன்.**

நான் தற்போது கிழக்கு பல்கலைக்கழக வயலின் விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறேன். 6 வயதிலிருந்தே நான் இசைத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தேன். எனது கர்நாடக சங்கீதத்தின் ஆரம்ப குருவாக ஆசிரியை சர்வேஸ்வரி அவர்களும் வயலினின் குருவாக ஆசிரியை நந்தினி அவர்களும் கற்பித்தார்கள். அதன்பின் 10 வருடமாக ஆசிரியை கிருஷ்ணவேணியிடம் வாய்ப்பாட்டு, வயலின் இரண்டையும் கற்று ஆசிரியர் தரம் சித்தியடைந்தேன். யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் கல்வி கற்று நுண்கலைமாணி பட்டம் பெற்றேன். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினது தேசிய இளைஞர் விருதை பெற்றேன். நுண்கலைப்பீடத்தில் வயலினிற்கான சிறந்த கர்நாடக சங்கீத மாணவி என தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டேன். அதன்பின் சென்னைபல்கலைக்கழகத்தில் முதுகலைமானி பட்டப்படிப்பை அக்கரை சகோதரிகளிடம் பயின்றேன். முதுகலைமானிப் பட்டத்தை பெற்று தற்போது விரிவுரையாளராக கடமையாற்றுகிறேன். எனது கணவர் மிருதங்க வித்துவான் மாதவனுடன் இசைப்பயணத்தில் இணைந்து பல மாணவர்களை இசைத்துறையில் சிறந்தோங்கச்செய்வதே எனது விருப்பமாகும். எனக்கு இசைத்துறை வழிகாட்டியாக இருந்து என்னை உருவாக்கி அடுத்த தலைமுறைக்கும் இசையை ஈந்தளிக்க உதவிய ஆசிரியை கிருஷ்ணவேணி அவர்களுக்கு கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்கள் அனைவரும் நன்றிக்கடன்பட்டுள்ளோம். அத்துடன் நாம் அனைவரும் கிளைபரப்பி இசையை மேன்மேலும் வளர்த்தெடுக்க வேண்டும்.



...ரி ஆசிரியர்களுடன் மாணவர்கள்



பிரவீணா மாதவன்

# கப்பல் ஓட்டிய தமிழர்கள்



கப்டன் ஆசுகன்



கப்டன் ஆதவன்



கிராமங்களின் இயற்கைவனப்பை, தொழில் முறைகளை அம்மக்களின் மன உணர்வுகளை கிராம அலசல் என்னும் நேரடிப் பதிவியினூடாக தந்துவரும் ஒளிஅரசி இம்மாத கிராம அலசலினூடாக வல்வெட்டித்துறையின் கப்பல் கலை பற்றிய பல அரிய தகவல்களை, கப்பலோட்டிய தமிழன் என்னும் பெயரை வரலாற்றில் பொறித்த வீரத்தை வாசகர்களாகிய உங்களுக்குத் தருவதில் மகிழ்வடைகின்றாள்.

கப்பல் என்பது பெரிய கடலோடும் வாகனமாகும். கப்பல்கள் மற்றும் படகுகள் மனிதவரலாற்றுடன்இணைந்து வளர்ந்து அன்றாட வாழ்விலும் ஆயுதமோதல், வணிகம் போன்றவற்றிலும் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக மாறிவிட்டது. அன்றைய கடல்வழிப் போக்குவரத்தே இன்றைய உலக பொருளாதார முறையை உருவாக்கியது. கப்பலோட்டுவதும் கடல் வாணிபம் செய்வதும் தமிழரின் பண்டைய மரபுவழித்தொழிலாகும். ஈழத்துகடலோடிகள் மிகச்சிறந்த தொழில் வன்மையையும் மிகச்சிறந்த ஆற்றலையும் கொண்டு நீண்ட மரபுவழித்தொழிலைச் செய்துள்ளனர். சங்ககாலம் தொட்டு பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு வரை தமிழரின் கடல் வாணிபம் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளது.

தமிழருக்கு ஒரு முகவரிதந்த வல்வெட்டித்துறையின் வீரவரலாறுகளில் அன்னபூரணி என்னும் பாய்மரக்கப்பலின் அமெரிக்கா நோக்கிய பயணமும் ஒன்றாகும். தமிழர்கள் சிற்பக்கலை, தற்காப்புக்கலை, ஓவியக்கலை என்பவற்றில் மட்டுமன்றி கப்பற்கலையிலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு அன்னபூரணியின் பயணம் ஒரு சான்றாகும். கப்பல் கட்டுதல், பராமரித்தல், செலுத்துதல் என்பவற்றில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள் என்பது இன்றைய இளைஞர்களுக்கு தெரியாத ஒருவிடயம் ஆகும். கப்பலோட்டிய தமிழர்கள் சிதம்பரத்தில் மட்டுமன்றி வல்வெட்டித்துறையிலும் இருந்தனர். முழுக்க முழுக்க யாழ்ப்பாணத்து மரங்களினால் தயாரிக்கப்பட்ட அன்னபூரணி பாய்களின் உதவியுடன் மட்டுமே மேற்குசமுத்திரத்தில் பயணித்த ஒரு காற்று வெளிக்கலமாகும். 1933ல் இலங்கை யாழ்ப்பாணத் துறைமுகங்களில் ஒன்றான வல்வெட்டித்துறையில் இருந்துபுறப்பட்ட அன்னபூரணி பல இடர்களைத் தாண்டி அமெரிக்காவின் மசச்சூசெட்ஸ் என்னும் துறைமுகத்தை அடைந்தது. பிரந்தகத்திற்கு பெருமைதேடித் தந்த அன்னபூரணியின் வடிவமைப்பு ஆங்கிலேயர்களையே வியக்கவைத்த ஒன்றாகும். இதன் ஆகக்கூடிய வேகம் சில இடங்களில் 18 கடல் மைல்களாகும். புயல், உணவுப்பற்றாக்குறை, மருத்துவ வசதியின்மைஎன்பவற்றின் மத்தியில் சிதைந்து போகத்தக்க பல அபாய நிலைகளைக் கடந்து இது அமெரிக்காவை அடைந்தது. பாய்களில் பயணித்த அன்னபூரணியை அமெரிக்க வணிகர் கொள்வனவு செய்து சிறிய இயந்திரத்தைப் பூட்டி கொழும்பிலிருந்து எடுத்துச் சென்றதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வல்வெட்டித்துறையில்







கப்பல் இருந்தமை வாக்குமூலங்களின் மூலம் தெரியவருகின்றது. ஆனாலும் எண்பது ஆண்டு களுக்கானவையே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய கப்பல்துறையானது சரியாக செயற்படுத் தப்பட்டிருந்தால் சிங்கப்பூரின் கப்பல் தள அமைப்பை ஒத்ததள அமைப்பு வல்வெட்டித்துறையிலும் இருந்திருக்கும். ஆரம்பத்தில் கடல் வணிகத்தில் சிறந்த இடமாக வல்வெட்டித்துறையே விளங்கி யது. இதன் இயல்பு வர்த்தகம் உடைக்கப்பட்டபோது கப்பல்துறையானது மூன்று பிரிவுகளாகப் பிரிந்தது.

1. நவீன கப்பலோட்டிகள் 2. கடத்தல்

3. கடற்புலிகளின் சிறப்பான உருவாக்கத்திற்கு துணையாகவும் இருந்துள்ளது.

கடத்தல் என்பது இயல்பு வணிகம் உடைக்கப் பட்டபோது ஏற்பட்ட பொருட்கொள்வனவின் மறுபெயராகும். இவ்வணிகம் தொடர்ச்சியாக இயங்கியிருந்தால் சர்வதேச கப்பல் துறைமுக நகராக வல்வெட்டித்துறை விளங்கியிருக்கும் என்பது திண்ணம். பெரும்பான்மை இனத்தில் பலமாவட்டங்களிலும் கப்பல் கப்டன்கள் உள்ள போதும் வடபகுதியில் வல்வெட்டியில் மிகப் பெரும்பாலானவர்கள் கப்டன்களாகவே உள்ளனர். வல்வெட்டித்துறை இந்தியாவின் அருகில் இருந் தமை, வல்வெட்டி வாழ் இளைஞர்கள் தளராத வீர முள்ளவர்களாக விளங்கியமை, அறிவு ஜீவிகளாக இருந்தமை எல்லாமேதான் இத்துறை மீதான ஈடுபாட்டிற்கான காரணம் எனலாம்.

கப்பல்துறை பற்றிய சரியான விழிப்புணர்வின் மையே இன்றைய இளைஞர்கள் இதில் ஈடுபடா மைக்கான காரணமாகும். கப்டனின் மாதவருமா னம் பத்துலட்சத்திற்குமேலே ஆகும். இத்துறையில் பலர் இணைவதன் மூலம் வெளிவருமானத்தை அதிகரித்து அனேக சமூககாரியங்களைச் செய்யமுடி யும். யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் சினெக் என் னும் கப்பல் கல்லூரி இயங்குகின்றது. தற்போது ஐரோப்பிய நாடுகளில் பெண்களும் இத்துறையில் தொழில்புரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பதவி களுக்கேற்ப தொழில்புரியும் காலங்கள் மாறுபடும். இவர்கள் தமது குடும்பத்தினரையும் தம்மோடு அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

**வல்வெட்டித்துறைச் சேர்ந்த கப்பல் கப்டன் களான ஆதவன், ஆசுகன் ஆகியோரின் மனப் பதிவுகள்---**

இத்தொழிலை நாங்கள் மிகவிருப்புடன் செய்கின்றோம். அண்ணன், தம்பிகளான நாங்கள் இருவரும் ஒரே துறையில் பணியாற்றுவது எமக்கு மிகமிக பெருமையான விடயம். சகோதரர்கள் கப்பல் கப்டன்களாகும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை. பல நாடுகளுக்கு சென்று பல அளவுகளிலான கொள்கலன் கப்பல்களில் பணி யாற்றுகின்றோம். தற்போது கடலில் அதிகமாக கெண்ரையினர் கொள்கலன்களே தொழிலில் ஈடுபடுகின்றன. கொள்கலன் கப்பல்கள் சுமார் 400 மீற்றர் வரை நீளமானவை. இதன் மூலம் கடல் பற்றிய பற்பல சுவாரசியமான விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. விடுமுறைக் காலத்தில் எந்த அழுத்தமும் இன்றி வாழ்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இயன்றளவு சமூக காரியங்களில் ஈடுபடுவது மனநிறைவைத் தருகின்றது. இத்தொழிலை ஆபத்து என கருதுபவர்களுக்கு நாங்கள் கூறவிரும் புவது யாதெனில், எல்லாத்தொழிலுமே ஆபத்தானது தான், கப்டன் தொழில் மட்டும் ஆபத்து என்று சொல்லி விட முடியாது. அதிக வருமானத்தைப் பெறுவதன் மூலம் எமது சமூகத்தை முன்னேற்ற முடியும். கப்பல் களின் ஒருபகுதி நட்சத்திர விடுதியை ஒத்த அமைப்பைக் கொண்டிருக்கும். வாழ்க்கை மகிழ்ச்சி யானதாகவே உள்ளது. எமது நீண்ட மாதப்பிரிவு மனைவி, பிள்ளைகளிடம் மனவெறுமையை ஏற் படுத்தும்போது மட்டும் அதனை வேதனையான தருணமாக உணர்கின்றோம் என்கிறார்கள். கப்டன் ஆதவன் எம்முடன் தொடர்ந்து உரையாடும்பொழுது சாதாரணதரத்தில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியுட னும் உயர்தரத்தில் கணிதப்பிரிவிலும் கல்விகற்றவர்கள் கப்பல் கப்டன் பட்டப்படிப்பிற்கும். சாதாரணதரத் தில் சாதாரணபெறுபேறு பெற்றவர்கள் சிப்பந்திப் பட்டப்படிப்பிற்கும் விண்ணப்பிக்கலாம். அது பற்றிய சரியான தகவல்கள் தெரியவராமையினால் இன்றைய இளைஞர்கள் அதிகம் பங்கு பற்றுவ தில்லை என ஆதங்கத்துடன் கூறுகின்றார்.

**கப்டன் ஆதவனின் மனைவி அமுதா வாசகர்களுக்கு கூறியவை---**

ஒரு கப்பல் கப்டனை மணக்கவேண்டும் என எண்ணியதில்லை. ஆனால், இப்போது கப்பல் கப்டனின் மனைவியாக வாழ்வதில் நான் மகிழ்ச் சியும் பெருமையும் அடைகிறேன். கணவருடன் சிங்கப்பூர், யப்பான் போன்ற பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறோம். கப்பல் துறைமுகத்தில் தரித்தி ருக்கும் வரை அந்நாட்டினுள் சென்று வருவோம். இவ் அரியவாய்ப்பு அனைவருக்கும் கிட்டாது என எண்ணுகிறேன். ஒவ்வொரு விடுமுறையையும் கடலில் களிப்பது மிகமிக இன்பமான உணர்வு. பல நாட்டு மக்களை அவர்களின் கலாசாரங்களை நேரடியாக அறிந்துகொள்ளமுடிகிறது.

(தொடர்ச்சி 53 ஆம் பக்கம் பார்க்கவும்...)



நவரத்தினசாமி

# விவாத திறமையாளராக ஒரு களம்

## விவாத மேடை 06 இன் முடிவுகள்

## "பருவ வயது பிள்ளைகளை சமாளிக்க முடியுமா? முடியாதா?"

இன்றைய சூழலில் பருவவயது பிள்ளைகளை சமாளிக்க முடியுமா? சமாளிக்க முடியாதா என மேற்கொண்ட விவாதத்திற்கு ஒளியரசிக்கு கிட்டிய குறிப்புக்களிலிருந்து இத்தொகுப்பு வழங்கப்படுகிறது. பருவவயது பிள்ளைகளை சமாளிக்கமுடியும் என்ற விவாதத்திற்கு கலைச்செழியன் வனஜா, விஷ்ணுகரன் கமலா, சகிலா முகமட், விநாயகம் நாகேஸ் ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்திருந்தனர். பருவவயது பிள்ளைகளை சமாளிக்க முடியாது என குமார் கம்ஷா, பிருந்தாபன் தட்சாயினி ஆகியோரும் தங்கள் கருத்துக்களை வழங்கியுள்ளனர். அவர்கள் எழுதிய கருத்துக்களில் முக்கியமான விடயங்களை ஒளிஅரசி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

**வி. கமலா, யாழ்ப்பாணம்.**

சுற்றி தப்புகள் நடந்தாலும் தடம்மாறி விடக்கூடாது புரிந்துணர்வுடனும் உயர்வுடனும், தனிமனித ஒழுக்கத்துடனும் வாழ வேண்டும் என எண்ணி பெற்றோரின் சிறந்த கண்காணிப்புக்குள் வளர்க்கப்படும் பிள்ளைகளை பருவவயது வந்தாலும் சமாளிக்கமுடியும். பருவவயது என்கின்ற அதி உன்னதமான பருவத்தை கடந்துவருவதில் பிள்ளைகள் அதிக கவனம் எடுக்கவேண்டும் என்பதும் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்வது பெற்றாரின் பங்கு என்பதும் இங்கு முக்கியமான விடயமாகும். பருவவயது பிள்ளைகளுக்கு பெற்றோர் அடிக்கடி சிறந்த அறிவுரைகளை கூறுவதன் மூலம் பிள்ளைகளை சமாளிக்கலாம். அதாவது, சந்தன மரத்தை பாம்பு சுற்றும் ஆனால், அந்த மரம் தன்னுடைய நறுமணத்தையும் இழக்காது, பாம்பின் விசத்தையும் எடுத்துக்கொள்ளாது என்பன போன்ற உதாரணங்களை எடுத்துக்கூறி சிறந்த வளர்ப்பின்மூலம் பருவவயதினரை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இவ்வாறு நன்மை, தீமை இரண்டையும் ஆராயும் விதத்தில் வளர்க்கப்படும் பருவவயது பிள்ளைகளை சமாளிக்க முடியும்.

**பி. தட்சாயினி, மட்டக்களப்பு.**

இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப, வளர்ச்சிகளும், வாழ்வியல் முறையும் பருவ வயதினரை மாற்றிவிடுகிறது. உதாரணமாக கணினி இன்று எல்லோருக்கும் ஒரு முக்கியமான அத்தியாவசியமான பொருளாக இருப்பதோடு இது இல்லாமல் இருக்கமுடியாது என்ற ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது. உண்மைதான். இருபது ஆண்டுகளுக்கு முன் இருக்காத அளவிற்கு இப்பொழுது இந்தக் கணினி உலகம் விசுவரூபம் எடுத்துள்ளது. பெட்டிவடிவாக இருந்த கணினி மாறி எங்கும் தூக்கி செல்லும் வகையில் மாற்றமடைந்துள்ளது. தற்போது கைத்தொலைபேசியிலே இணைத்தளவசதி காணப்படுகிறது. இவ்வாறு இருக்கும்போது, நடக்கும்போது, ஏன் படுக்கும்போதும், கூட பருவவயதினர் அதற்கு அடிமையாகவே காணப்படுகின்றார்கள். புதிய புதிய விடயங்களை அறிந்துகொள்ளும் ஆர்வத்தினால் அவர்கள் உந்தப்படுவதால் அவர்கள் இவற்றை அளவுக்கதிகமாக கையாளும்போது பெற்றோரால் சாமாளிக்க முடியாத

நிலைமை உருவாகிறது. அறிவார்ந்த விடயங்களும், அருவருப்பான விடயங்களும் இந்தக் கணினியில் உள்ளன. நல்லது கெட்டதை பிரித்து பார்க்கமுடியாத பருவவயதிலே பிள்ளைகளை சமாளிப்பது கடினமே. அதனை விட தற்போது மதுபோதை போன்ற பாவனைகள் அதிகரித்து காணப்படுவதால் அதனை எவ்வாறு பிள்ளைகள் கையாள்கிறார்கள் என்பதை கவனிக்கமுடியாதபோது அது மிகப் பெரிய பிரச்சனையாகிவிடுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பருவவயது பிள்ளைகளை சமாளிக்க முடியாது.

**க. வனஜா, கொக்குவில்.**

தேவைக்கேற்றவாறு நவீன சாதனங்களை கையாளுதல், தாய் தந்தையரின் விருப்பங்களுக்கு ஏற்றவகையில் தனக்கு உயர்வு தரக் கூடிய காரியங்களை செய்தல் என குழந்தைப் பருவத்திலிருந்தே நற்பண்புகளுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் பருவவயது வரும் போதும் அவ்வாறே செயற்படுவார்கள். இதனை தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பார்கள். எனவே, எப்பொழுதும் தமது பிள்ளைகளின் மேல் சிறந்த கண்காணிப்பை மேற்கொண்டு அவர்களை நல்வழிப்படுத்தி தொடர்ந்து அவர்களை நல்லதொரு சூழலிலும் நல்ல நண்பர்களுடன் பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும்போது பருவவயதிலும் அவர்களை சமாளிக்க முடியும்.

**கு. கம்ஷா, வெள்ளவத்தை.**

பருவவயது என்பது ஒரு நெருப்பு ஆறு. இந்தவயதில் உள்ளவர்களை சமாளிப்பது என்பது மிகக் கடினமான விடயமாகும். அதாவது, பருவவயது பிள்ளைகள் மேற்கத் தேய வாழ்வியல் முறைக்குள் வாழ விரும்பியோ, விரும்பாமலோ தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக கலாசாரம், பண்பாடுகளை தொலைத்தவர்களாக பருவவயது பிள்ளைகள் வளர்கிறார்கள். இதனால் பருவ வயதுப்பிள்ளைகளை சமாளிப்பது கடினதாகவே உள்ளது. பிள்ளைகளை, அடித்தோ கண்டித்தோ வளர்க்க முடியாது. அதற்கு நாம் வாழும் நாட்டு சட்டம் இடம்கொடுக்காது. இதனால் பிள்ளைகள் தங்கள் எண்ணப்படி எதையும் செய்யலாம் என்ற ஒரு நிலை உள்ளது. இந்த சட்டத்தை பிள்ளைகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துவதால் பருவவயது பிள்ளைகளை சமாளிக்கமுடியாது.

**பரிசு வென்றோர் :**

வாதாட்டத்தை முன்வைத்து பருவ வயது பிள்ளைகளை சமாளிக்க முடியும் என்ற தலைப்பில் வாதாடிய யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த விஷ்ணுகரன் கமலாவும் பருவவயது பிள்ளைகளை சமாளிக்க முடியாது என்ற தலைப்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிருந்தாபன் தட்சாயினியும் முதலாம் இடத்தைபெறுகின்றனர்.

இதுவரை பரிசு கிடைக்காதவர்கள் 071 8628369 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**விவாத மேடை 08 இற்கான தலைப்பு**

**''மாணவர்களின் உயர்வுக்கு வழிகாட்டுவது பாடசாலையா? தனியார் கல்விநிலையங்களா?''**

**உங்கள் விவாதங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2015**

## விவாத மேடை - 08

முழுப்பெயர் : ..............................................

..............................................................

முகவரி : ..................................................

..............................................................

..............................................................

தொலைபேசி இல.: ......................................

ஒப்பம் : ....................................................



**செ. 21**
**உலக சமாதான தினம்**

# வெண்புறாவே தூதுபோ

உலக சமாதானம் என்பது பூமியில் நிலவுகின்ற நாடுகளும் வாழ்கின்ற மக்களும் ஒருவரோடு ஒருவர் இணைந்து, அரசியல் சுதந்திரம், அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றில் பங்கேற்கின்ற இலட்சியத்தைக் குறிக்கிறது. உலகத்தில் வன்முறையும் போரும் மறைந்து, மக்கள் மனதார ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து, அமைதியை வளர்க்கின்ற அமைப்புகளை உருவாக்குவதும் உலக அமைதி என்னும் இலட்சியத்தில் அடங்கும். தனிமனிதர் பகைமை உணர்ச்சிகளையும் செயல்களையும் தங்கள் வாழ்விலிருந்து அகற்றுவதும், மனித உரிமைகளை மேம்படுத்தி, கல்வி, தொழில்நுட்பம், மருத்துவம், முதலியதுறைகள் வழியாக உலக அமைதியைக் கொணர்வதுமே. உலக அமைதி நாள்.

உலகின் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் பாரிய பணி யுனெஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலக சமாதான முயற்சியொன்றின் போது ஐ.நாவின் பொதுச் செயலாளர் ஹாமர்சீல்ட் விமான விபத்தில் உயிர்துறந்தமை 1961 வரலாற்றுச் சுவடாகும். அவர் உயிர்துறந்த நாள் செப்டெம்பர் மூன்றாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமையிலாகும். யுனெஸ்கோவின் முகவுரை வாசகம் மனித உள்ளங்களில்தான் போர் தோன்றுவதனால் மனித உள்ளங்களில்தான் அமைதிக்கான அரண்களும் அமைக்கப் பெறல் வேண்டும்'' என்பதாகும்.

மனிதர் தம் உள்ளத்தில் அமைதியை நிலைநாட்டினால் மட்டுமே உலகில் அமைதி ஏற்பட முடியும் என்பது புத்தசமயக் கருத்து. புத்தசமயத்துக்கு அடிகோலிய கவுதம புத்தர் ''அமைதி உள்ளத்திலிருந்து பிறக்கிறது. அதை வெளியில் தேடாதே'' என்று போதித்தார்.

நாடுகளிடையே சமாதானம் மட்டுமா சமாதானம், அமைதிக்கு வழி இல்லையா? அதற்கும் மேல் பல உள்ளன. நாடு, இனம், மதம், மொழி, நிறம் போன்ற சகல வேறுபாடுகளுக்கும் அப்பால் தனிமனித சுதந்திரத்தை உரியமுறையில் பேணுவதும் அங்கீகரிப்பதும் நடைமுறையில் தடையின்றி அனுபவிப்பதுமே சமாதானம். மொழிநீதியான அடக்குமுறைகள், சமயரீதியான வெறுப்புணர்வு, இனரீதியான, நிறரீதியான பேதங்கள் நிலவும் ஒருநாட்டில் அல்லது உலகில் சமாதானம் என்பது போலியானது.

இன்றைய சமாதான தினத்திலே சமாதானம் என்றால் என்ன? சமாதானத்தின் மூலம் அமைதியை எப்படிக் காண்பது என்பது பற்றியாவது சிந்திப்போம்.

'வாழு, வாழவிடு' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உலக மக்கள் யாவரும் அடுத்தவர் நிம்மதியைக் குலைக்காமல் நாம் வாழவேண்டும். தாம் என்ன உரிமைகளுடன் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனரோ அதே உரிமையுடன் மற்றவர்களும் வாழ உரிமையுண்டு என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து அங்கீகரிக்க வேண்டும்.

கொலைவெறிக்கும், கொடும் பகைக்கும் உரமூட்டி, வளப்படுத்தும் ஈனச்செயல்களிலிருந்து உலகம் விடுபடும் நாளே உலக சமாதான தினமாக, நிம்மதி நிலவும் அமைதித் தினமாக விளங்கும்.

சமாதானம் குறிப்பாக நான்கு நிலைகளில் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம்.

1. பொருளாதாரம்
2. அரசியல்
3. இராணுவம் - எதிர்
4. சமூக ஒற்றுமை

உலகம் முழுவதும் உள்ள மக்கள் தாங்கள் வாழும் சமூகத்தின் ஒரு கூறாக உள்ளனர். அம்மக்கள் ஐக்கியமாக இயங்கினாலன்றி எந்த ஒரு சமூகமும் தனித்து முன்னேற்றமடைய முடியாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

இலங்கையில் எமது இன ஒற்றுமை சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய விழுமியங்களுள் ஒன்றாகும். இந்த விழுமியங்கள் வளர்ந்து செல்லவேண்டிய ஒரு கூறாகும். ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னர் தலை முறை தலைமுறையாக நாம் காத்துவந்த ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது.

இன்றைய சுதந்திர தினத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் பேதமின்றி இதனை கருத்தில்கொள்வது முக்கியம்.

ஆண்டில் ஒரு நாளாவது சமாதானம் என்றால் என்ன? அதன் தேவை எதற்கு என்பதை உலகம் சிந்திக்க இந்நாள் வழி வகுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.


யதார்த்தமாக உலகை நோக்கும்போது எங்கே சமாதானம், எங்கே சமாதானம் என்று தேடுவது மட்டுமல்ல எது சமாதானம் என்று அறிந்து கொள்ளும் ஆர்வமும் கூட வருகின்றது.

மொழிரீதியான அடக்குமுறைகள், சமயரீதியான வெறுப்புணர்வு, இனரீதியான, நிறரீதியான பேதங்கள் நிலவும் ஒரு நாட்டில் அல்லது உலகில் சமாதானம் என்பது போலியானது.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, குண்டெறிதல், சொத்துகளை அழித்தல், நிம்மதியாக வாழ்ந்த மக்களை அகதிகளாக்குதல், பட்டினி போடுதல், கடத்தல், அடித்தல், கை - கால் முறித்தல், சித்திரவதை செய்தல், மத, மொழி உரிமைகளைப் பறித்தல், வாக்குரிமையைப் பறித்தல் இவ்வாறு பல தீமைகளின் இருப்பிடமாக உள்ள நாடொன்றில் சமாதானம் அமைதி நிலவுமா? சமாதான தினம் கொண்டாடப்படுவதால் ஏதாவது பயன் ஏற்படுமா?

கொலைவெறிக்கும், கொடும் பகைக்கும் உரமூட்டி, வளப்படுத்தும் ஈனச் செயல்களிலிருந்து உலகம் விடுபடும் நாளே உலக சமாதான தினமாக, நிம்மதி நிலவும் அமைதித் தினமாக விளங்கும்.

இதையாருக்கு, எப்படிப் புரியவைப்பதென்று தெரியாமல் தத்தளிக்கும் மனிதநேய சிந்தனையாளர்களின் தவிப்புக்கு விரைவில் முடிவு கட்டப்பட வேண்டும். ஏன் என்று கேட்போரை இகழ்வதும் இட்டதுதான் சட்டம் என்று எண்ணுவதும் தான் என்றமமதையுடன் செயற்படுவதும் பயனற்றது. நிலையற்றது என்பதை உலக நாடுகளை ஆட்சிசெய்பவர்களும் அதிகாரம் செலுத்துபவர்களும் உணர்ந்து திருந்தும் நாளே உண்மையான சமாதானதினம் - அமைதி தினம். அவ்வாறான ஒருநிலை ஏற்படும் போதே உலக சமாதான தினம் கொண்டாடுவதில் அர்த்தம் ஏற்படும்.



Oli Arazi In

# பேசும் படம்

**கவிதைப் போட்டி -01**

1 ஆம் பரிசு - 250/=
2 ஆம் பரிசு - 150/=
3 ஆம் பரிசு - 100/=

**கவிதைப் பிரியர்களே!**

பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தப் பகுதி மீண்டும் வெளியாகியுள்ளது. மேலுள்ள படத்தைக் கூர்ந்து பாருங்கள் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை சுவைபட ஆறு வரிகளுக்கு மேற்படாத சிறந்த கருத்தைக் கூறும் கவிதையாக ஒரு தபாலட்டையில் எழுதி 20.09.2015 க்கு முன்பு அனுப்புங்கள். சிறந்தவை என எமது ஆசிரியர் குழுவால் தெரிவுசெய்யப்படும் மூன்று கவிதைகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள பணப்பரிசுகள் வழங்கப்படும். பரிசுக்குத் தெரிவான கவிதைகள் தவிர்ந்த ஏனைய கவிதைகளும் இப்பகுதியில் பிரசுரமாகும். கவிதைகளை அனுப்பவேண்டிய முகவரி 07 ஆம் பக்கத்தில் உள்ளது.

# நவீன இலத்திரனியல் சாதனங்கள்

கனவு காணுங்கள், கனவுதான் சிந்தனையாகவும் சிந்தனைதான் செயலாகவும் மாறுகின்றது என்பதும் வித்தியாசமாக சிந்திக்கும் துணிச்சல். எவரும் சென்றிராத பாதையில் பயணித்து புதியதை கண்டுபிடிக்கும் தைரியம். இயலாத ஒன்றென கருதப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு வெற்றி பெறுதல் ஆகிய உயரிய திறமைகளை வளர்த்துக்கொண்டு பாடுபடவேண்டும் என்பது இளைஞர், யுவதிகளுக்கான மறைந்த டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் செய்தியாகும்.

இன்றைய இளைஞர், யுவதிகள் நாளைய தலைவர்கள் என்பது யதார்த்தம். சிந்தனைத்திறன் கொண்ட இளைஞர்களின் கருத்துக்கள் சமூகத்தைப் புரட்டிப்போடும் சக்திவாய்ந்த ஒரு ஆயுதம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. நல்ல கருத்துக்கள் நல்ல சமூகத்தை உருவாக்கும். என்பது திண்ணம். அத்தகையதொரு எண்ணப்பாட்டின் அடிப்படையில்தான் ஒளி அரசியும் இளைஞர், யுவதிகளுக்கான கருத்தாடல் பக்கமாக 'யுத் டிஸ்கஸன்' என்னும் பகுதியை வாசகர்களாகிய உங்களுக்குத் தந்து வருகின்றது. இம்மாத கருத்தாடல் தலைப்பானது நவீன இலத்திரனியல் சாதனங்கள் இன்றைய காலத்திற்கு வரமா? சாபமா? என்பதாகும்.

இத்தலைப்பின் கீழ் பல இளைஞர், யுவதிகள் கூறிய கருத்துக்கள் இதோ உங்களுக்காக...

**அன்ரனி இமானுவேல் அமல்**

நவீன இலத்தினியல் சாதனங்கள் என்பவை இன்றைய காலத்தில் மிகமிக அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றின் உற்பத்தியானது முழுஅளவில் பயன்படுவதாக இல்லாமல் அதிகளவில் கழிவுப் பொருட்களாகவே எஞ்சுகின்றன. இவ் உற்பத்தியின்போது சூழல் மாசடைதல் நிகழ்வதால் இவற்றின் உருவாக்கமே தீமையாகவே உள்ளது. சமூகப் பாவனை என்பதற்கு முன்னர் உற்பத்தியே சாபமான ஒன்றாகவே உள்ளது.

**ரவிதாஸ்**



இன்றைய நவீன வசதிகளை ஒப்பிட்டுநோக்கும் போது நவீன இயந்திரப் பாவனையானது வரமான ஒன்றாகவே எண்ணத் தோன்றுகிறது.

**உதயகுமார் திவாகரன்**

இலத்திரனியல் சாதன கண்டுபிடிப்பானது நேரவிரயத்தை சுருக்கியிருக்கிறது. புறாவில் தூது விட்டகாலம் போய் அஞ்சல் வழி போக்குவரத்தும் சுருங்கி குறுஞ்செய்தி மூலம் நொடியில் தகவல் அனுப்பிவிடக்கூடியவாறு தொழில்நுட்பம் மாறியிருக்கிறது. இது இலத்திரனியலின் வரம் என்றே கருதவேண்டும்.

**மகாலிங்கம் அனோஜா**

இலத்திரனியல் வளர்ச்சியானது இன்றைய காலத்தில் சாபமான ஒன்று என்றே கூறவேண்டும். இன்றைய பல குற்றங்களுக்கு தொலைபேசி, இணையம் என்பவையே காரணமாக உள்ளன. இதனை வைத்துப்பார்க்கும்போது இலத்திரனியல் சாதனங்கள் தேவையற்ற ஒன்றேதான்.



**ஜெயந்தி காந்திறோய்**

இலத்திரனியல் சாதனப் பாவனையானது 20 வீத தீமையையும் 80 வீத நன்மையையும் தருகின்றது. உலக நடப்புகளை உடனுக்குடன் அறிய முடிகிறது. வேலைகளை இலகுவாக்கிக்கொள்ள முடிகிறது. இவற்றை பார்க்கும் போது இது ஒருவரம் என்றே கூறவேண்டும்.

## ஒலிஅரசியின் சித்திரம் பேசுதடி கண்ணம்மா ஓவியப் போட்டி முடிவுகள்

**அழகானசட்டை**

**1ம் பரிசு :** த. சாருக், தரம் 1 வட இந்து ஆரம்ப பாடசாலை
**2ம் பரிசு :** ஜெ. வனுஸ்ரிகன், தரம் 1 வேதாரணீஸ்வரா வித்தியாலயம்
**3ம் பரிசு :** கனோசியா அரவிந்தன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**சிரமதானகாட்சி**

**1ம் பரிசு :** என். எவ் அதீபாகாத்தூன், தரம் 2 பாத்திமாவித்தியாலயம்
**2ம் பரிசு :** அ. மரியோமில்சான், தரம் 3 சென்ஜோன்ஸ் கல்லூரி
**3ம் பரிசு :** கஜப்பிரியன், இணுவில் மேற்கு இணுவில்

**சுமை தாங்கும் அன்னை**

**1ம் பரிசு :** வி. அபிசாந், சென் ஜோன்ஸ் கல்லூரி
**2ம் பரிசு :** கு. மாதங்கி, இணுவில் இந்துக் கல்லூரி
**3ம் பரிசு :** இ. விதுசன், இணுவில் அந்துக் கல்லூரி

# இளைஞர் சமூகத்திற்கு வரமா? சாபமா?

**தவகுலநாதன் சிவேந்தன்**



இலத்திரனியல் சாதனங்களினால் நன்மையைவிட அதிகளவு தீமையே கிடைக்கின்றது. மருத்துவத்துறையில் நோய்களை விரைவில் கண்டுபிடிக்க இலத்திரனியல் உதவினாலும் அதன் பாவனையானது உடலுக்கு தீங்கு விளைவிப்பதாகவே உள்ளது. தொடர்பாடல் சாதனங்கள் ஓரளவு நன்மை தருகின்றன என்றே கூறவேண்டும்.



**நாகராசா நிரோஜன்**

இலத்திரனியல் சாதனங்களின் பாவனையானது பிரதானமாக நன்மையானதாகவே காணப்படுகிறது. போக்குவரத்து, தொடர்பு சாதனம் என்பவை எமக்கு அதிக நன்மை தருபவையாகவே உள்ளன. மிகக் குறைந்தளவில் உள்ள தீமையை நாம் பயன்படுத்தத் தேவையில்லை.



**பாலசுப்பிரமணியம் சாந்தகுமார்**

நவீன இலத்திரனியல் பாவனை நன்மை, தீமை இரண்டும் கலந்ததாகவே உள்ளது. தொலைக்காட்சி, இணையம் என்பவை பயன்தருவதாக இருப்பினும் கதிர்வீச்சு போன்ற தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன.



**வரதராஜா கோகுல் ராஜ்**

இலத்திரனியல் சாதனங்களின் பாவனையானது வரமே ஆகும். தீமையான விடயங்களை விட்டுவிட்டு எமக்குத் தேவையான நல்ல விடயங்களை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும்.



**பாலசுப்பிரமணியம் நளினி**

இலத்திரனியல் சாதனங்களின் பாவனையானது நன்மை, தீமை கலந்ததாகவே உள்ளது. தகவல் தொடர்பு சுருங்கிவிட்டபோதும் இணையப் பயன்பாடு அதிகரித்தமை இதனை தீமையாகவே கருத வைக்கின்றது.



**கார்த்திக்**

பரந்துவிரிந்த உலகு உள்ளங்கையில் சுருங்கிவிட்டதற்கு நவீன இலத்திரனியலே காரணம். அதனால் இதனை ஒரு வரமாகவே கருதவேண்டும்.

**துரைரட்ணம் மாதங்கன்**



தொலைபேசி, இணையம் என்பவற்றின் பயன்பாடானது பல வேலைகளை இலகுவாக்கியுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியானது நிச்சயமாக வரமான ஒன்றாகவே காணப்படுகின்றது. அவரவர் பயன்படுத்தும் விதத்தில் தான் தீமை ஏற்படுகின்றது.

# வானூர்தி தொழில்நுட்பத்தில் புதிய கண்டுபிடிப்பு



ஆண்டுத்தோறும் 400 கோடி ரூபாய்களை சேமிக்க உதவும் வகையில் வானூர்தியில் புதிய தொழில்நுட்பத்தை கண்டறிந்துள்ள ஈழத்தமிழர் சிதம்பரநாதன் சபேசனுக்கு பிரித்தானியா அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.


## ஈழத்தமிழருக்கு பிரித்தானியா பாராட்டு


யாழ்ப்பாணம் - சாவகச்சேரியைச் சேர்ந்த முனைவர் சிதம்பரநாதன் சபேசன் ஏற்கெனவே இங்கிலாந்தில் a groung breaking radio teal time tagging system என்ற கண்டுபிடிப்பை நிகழ்த்தி சாதனை படைத்துள்ளார். இச் சாதனைக்காக அவருக்கு கண்டுபிடிப்பாளர் மற்றும் கண்டுபிடிப்பை வர்த்தக ரீதியாக அறிமுகப் படுத்துபவர் ஆகிய உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவரது கண்டுபிடிப்பான inteligent wireless passive sensor technology system விமான நிலையத்தில் பயணிகளையும் பயணிகளின் உடைமைகளையும் தெளிவாக இனங்காட்டக்கூடியது. இவரது கண்டுபிடிப்பு விமான நிலையங்களில் பாதுகாப்பு சேவைக்கு பெரிதும் பயன்படக்கூடியவை. கடந்த ஆண்டு தென்மராட்சியைச் சேர்ந்த சிவநாதனை அதியுயர் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு ஒன்றிற்காக அமெரிக்க அதிபர் ஒபாமா அழைத்துப் பாராட்டினார். இந்த ஆண்டு அதேபோல சபேசனைப் பிரித்தானியா பாராட்டுகிறது. சபேசன் யாழ் இந்துக்கல்லூரியின் மாணவனாவார்.

# விஞ்ஞானிகளின் விந்தைகள்

## பைதகரஸ்

கி.மு 580 காலப்பகுதியில் வாழ்ந்தவர். மெய்யியல், கணிதம், வானியல் தேர்ச்சி பெற்றவர் கேத்திர கணிதத்தில் உள்ள பைதகரஸின் தேற்றம் இவரால் முன்வைக்கப்பட்டது. எண்களின் முக்கியத்துவம், குணாதிசயம் பற்றி கூறியுள்ளார். சங்கீதத்திற்கும் கணிதத்திற்கும் இடையிலான தொடர்பைக் காட்டியுள்ளார். இரவு, பகல் ஏற்படுவதற்குக் காரணம் தீக்கோளம் ஒன்றை பூமி சுற்றி வருவதாகும் எனக்கருதினார்.






## ஹிப்போகிரட்டிஸ்

கி.மு 460 - 377 காலப்பகுதியில் வாழ்ந்தவர். மருத்துவ விஞ்ஞானத்தின் தந்தை. மருத்துவர்கள் எடுக்கவேண்டிய ஒழுக்க சத்தியப்பிரமாணத்தை அமைத்தார். இது ஹிப்போகிரட்டிஸ் சத்தியப்பிரமாணம் எனப்படுகிறது மருத்துவ நூல் தொகுப்பு ஒன்றை வெளியிட்டார்.

# மலேரியாவுக்கான மருந்து கண்டுபிடிப்பு





மலேரியா நோயைக் குணமாக்கவல்ல புதிய மருந்து ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த மருந்தின் ஆய்வகப் பெயர் டிஎஸ்எம் 265 ஆகும். இது மலேரியா ஒட்டுண்ணியின் பெருக்கத்தைப் பல்வேறு நிலைகளில் தடுத்துநிறுத்துவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை ஜேர்னல் சயன்ஸ் ரான்ஸ்லேஷனல் மெடிசினில் வெளிவந்துள்ளது.

## சாதனை படைத்த உலகின் முதல் பெண்கள்

01. ஒரு செய்தித்தாளின் முதல் பெண் எடிட்டர் : ஆன் ஃப்பிராங்ளின், தி நியூபோர்ட் மெர்க்குரி (1762)
02. முதல் மிஸ் வேர்ல்ட் : கெர்ஸ்டின் கிகி ஹாக்கோன்சன், சுவீடன் (1951)
03. உலக சுகாதார அமைப்பின் உலக சுகாதார அசெம்ப்ளி தலைவரான முதல் பெண்மணி : ராஜ்குமாரி அம்ரித் கௌர், இந்தியா (1950)
04. முதல் மிஸ் யூனிவேர்ஸ் : அர்மி குசேலா, பின்லாந்து (1952)
05. முதல் கறுப்பினப் பெண் நீதிபதி : ஜேன் மடில்டா போலின், நியூயார்க் நகரம் (1939)
06. உலகின் முதல் பெண் பிரதமர் : ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இலங்கை (1960)
07. உலகின் முதல் பெண் அதிபர் : இஸபெல் பெரோன், அர்ஜென்டினா (1974)
08. சொந்தமாக தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனத்தைத் துவங்கிய முதல் கறுப்பினப் பெண்மணி : ஓப்ரா வின்ஃப்ரே, பில்லினியரான முதல் கறுப்பினப் பெண்மணியும் இவரே (1986)
09. செயற்கை இதயம் பொருத்திக்கொண்ட முதல் பெண்மணி : மேரி லுண்ட் (1986)
10. வரலாற்றில் பதிவான உலகின் முதல் புகழ்பெற்ற பெண்மணி : ஹாட்ஷேப்கட் (கி.மு. 1479)

## பாடசாலை மாணவர்களே நீங்களும் எழுத்தாளராக ஒரு சந்தர்ப்பம்

இளையதலைமுறையினரின் எழுத்தாற்றலை வளர்த்து எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களை உருவாக்கும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுகதை, கட்டுரை, கவிதைப்போட்டிகளை ஒளிஅரசி நடாத்தவுள்ளது. மேற்படி போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடைபெற்று ஒவ்வொரு பாடசாலையிலும் முதல் 3 இடங்களைப்பெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்கள் இறுதிச்சுற்றுக்கு தெரிவாகி இறுதிச்சுற்றில் நடைபெறும் கட்டுரை, கவிதை, சிறுகதைப்போட்டி களுக்கு முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பணப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் எழுத்தாற்றல்கள் உள்ள மாணவர்கள் மேன்மேலும் வளர ஒளிஅரசி வழிகாட்டவுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் போட்டிகளில் பங்குகொண்டு எதிர்காலத்தில் இளம் எழுத்தாளர்களாகி சாதனை படைக்கலாம்.

**(மேலதிக விவரங்கள் அடுத்த ஒளிஅரசியில்...)**

உண்மைச் சம்பவம் ✍ ஸஹீட். எச். சப்ரீன், மருதமுனை.

# சம்போ பைக்கற்றினால் வந்தவினை

ஆடையின்றி, தேவைகள் அதிகமின்றி அலைந்த மனிதன் மெதுவாக நாகரிகமடைந்து ஒரு உன்னத படைப்பாக உயர்ந்து விளங்குகின்றான். தனது தேவைகள் மட்டும் என்றில்லாமல் பிறருடனும் உறவாடி அவர்களோடு இடைவினை புரிந்து ஒரு இனிமையான வாழ்வினை அமைத்துக்கொண்டான். இன்று இந்நிலை மாறி நாகரிகம் என்ற பெயரில் தனது வாழ்வினை ஒரு குறுகிய வட்டத்திற்குள் அமைத்துக்கொண்டான். நகரமயமாக்கல் என்ற பெயரில் வீடுகளுக்கு மேல் வீடுகளென்று அவனுடைய வாழ்க்கைப் பரப்பு சுருங்கிவிட்டது. தனது அயல்வீட்டுல் குடியிருப்பவர்கள் யார் என்று கூட தெரியாதவனாக இன்று மனிதன் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

இதன் பின்னணியிலேதான் ஒரு தொடர்மாடி வீட்டுத் திட்டத்திலே வசிக்கின்ற இரண்டு குடும்பங்களுக்கு மத்தியிலே இடம்பெற்ற ஒரு சிறிய சம்பவம் எந்த அளவிற்கு சென்றது என்பதனை இம்மாதம் பார்ப்போம். இரண்டு குடும்பங்கள் அடிக்கடி நீதிமன்றம் வருவதனை அவதானித்தேன். இவர்களிடம் பேசவேண்டும் என்று பல நாட்களாக முயற்சித்தேன். ஒரு நாள் அது கைகூடியது. அதில் ஒரு குடும்பத்தினருடன் பேசும் வாய்ப்புக் கிட்டியது. கடந்த 9 மாதங்களாக ஒரு வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு வந்து போகிறார்களாம்.







என்ன வழக்கு என வினவியபோது அவரது விடையின் ஆரம்பம் எனக்கு புன்னகையை வரவழைத்தது.

எல்லாம் ஒரு சம்போ பைக்கற்றினால் வந்தது தம்பி என்றார் அந்தப் பெரியார். நாங்கள் இருவரும் குறிப்பிட்ட ஒரு தொடர்மாடியில் பக்கத்துபக்கத்து வீடுகளில் குடியிருப்பவர்கள். இருவரின் வீட்டிற்கு நடுவில் ஒரு தடுப்புச் சுவரும் உள்ளது. எமது வெளிக் குளியலறையில் எங்கள் மகன் குளிப்பது வழக்கம். இவர் குளித்துவிட்டு தலைக்குப் போடுகின்ற சம்புபைக்கற்றினை குளியலறைக் கட்டிலே வைப்பதுண்டு. இது எமது அயல் வீட்டாருக்கும் பொதுவானகட்டு. இவர் வைக்கும் சம்போ பைக்கற் அடிக்கடி அவர்களது வீட்டின் பின்புறத்தில் விழுவது வழக்கமாய் நடந்து வந்திருக்கிறது. இது எங்களுக்கு தெரியாது.

ஆனால், அந்த வீட்டுக்கார அம்மா அதனை அவதானித்து வந்திருக்கிறார். அதை அவரே எடுத்து பல தடவைகள் குப்பைத் தொட்டியில் போட்டிருக்கிறார். ஒரு நாள் தற்செயலாக வீட்டின் பின்புறத்தில் அந்த வீட்டுக்கார தந்தை நின்றுகொண்டிருந்த போது அவருடைய தலையில் இந்த சம்புபைக்கட் விழுந்திருக்கிறது. உடனே ஆத்திரமடைந்த அவர் அயல் வீட்டாரை அழைத்து அவர்களுடன் வாய்த்தர்க்கம் புரிந்ததோடு நன்றாக ஏசிவிட்டு பொலிஸிலும் முறைப்பாடு செய்துவிட்டாராம்.


குறிப்பிட்ட திகதியில் பொலிஸில் இருவரையும் அழைத்து விசாரணை செய்து ஒரு இணக்கப்பாட்டிற்குவருமாறு கூறியிருக்கிறார்கள். ஆனால், அந்த அயல் வீட்டுத் தந்தையும் தாயும் இல்லை இது பல நாட்களாக நடந்துவருகிறது. நாங்களும் பொறுமையாக இருந்துவிட்டோம். இதற்கு நீதிமன்றம் சரியான தீர்ப்பு சொல்லும் என்று நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்திருக்கின்றனர். இந்த ஒன்பது மாதங்களுக்குள் 3 தடவைகள் நீதிமன்ற விசாரணை இடம்பெற்றுவிட்டது. இன்னும் வழக்கு முடியவில்லை என்றார் அந்தப் பெரியார்.

நாடுகளின் எல்லைகளுக்காக யுத்தங்கள் நடக்கின்றன. இருந்தாலும் நாட்டு மக்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், இங்கு ஒரு சம்புபைக்கற்றுக்காக இவ்வளவு பிரச்சினை நிகழ்ந்திருக்கிறது. இதுதான் எமது நாகரிகமா? அன்புள்ள இல்லத்தரசிகளே எமது அயல்வீட்டவர்கள் எமது உற்ற நண்பர்கள். எமக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலோ, நல்ல விடயங்கள் நிகழ்ந்தாலோ முதலில் நிற்பவர்கள் அவர்கள்தான். சமைக்கிற கறியில் அயலவருக்கும் பாதிகொடுத்து அவர்கள் எமக்குத் தந்து ஒற்றுமையாக வாழ்ந்த காலங்கள் எங்கே? குப்பைகளை தொட்டியிலே இடாதது ஒருபுறம், ஒரு பிழை தொடர்ந்து நடக்கின்றது என அறிந்தும் அதனை சுட்டிக்காட்டி தடுக்காதது மறுபுறம், தலையிலே சம்புபைக்கற் விழுந்ததற்காக நீதிமன்றம் வரை சென்றது இன்னொருபுறம். இவை மூன்றுமே தவறாக இருந்தும் இறுதியில் ஒருவர் பொறுமை இழந்ததே இதற்கு பிரதான காரணம்.

எந்தவொருவிடயமாக இருந்தாலும் சரி அதனை உரிய வேளையில் பேசி தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். மாறாக அது மனதிலே பதிந்து வைக்கப்படுகிறபோது சில வேளைகளில் வன்முறையாகக் கூட உருவெடுக்கலாம். எம் வாழ்விலே பொறுமை என்ற விடயத்தை எப்போதுமே கடைப்பிடிக்கிற பண்பினை எம்முள் வளர்த்துக்கொள்வதற்கு முயற்சிப்போமாக.

# “ஒளிஅரசி” குறுக்கெழுத்துப்போட்டி

## ‘ஒளிஅரசி’ குறுக்கெழுத்துப் போட்டி இல. 21



**போட்டி முடிவு திகதி 25.09.2015**

**மேலிருந்து கீழ்**

1. இராமனின் பாதம் பட்டு பிரக்ஞை அடைந்த பெண்
2. கால்கள் முடமானவர்களை இப்படியும் அழைப்பர்
3. ஓ.கே. கண்மணியின் நாயகன்
4. வஞ்சகம் 6. குதிரை
11. உரு ஒன்றின் மறுபதிப்பு 15. குளிர்ச்சி
18. ஒரு பறவை
19. அரவிந்தசாமி, மனிஸாகொய்ராலா நடித்த படம்
20. சிறையில் இருப்பவன் 22. வாழ்வின் முடிவிடம்
23. மகன் 24. மன்னர்கள் சொத்துக்களை சேமிக்குமிடம்
27. அடிமை என்பது (திரும்பியுள்ளது) 28. முடி

**இடமிருந்து வலம்**

1. மரணத்தில் கூட பொறாமை கொள்ளவைத்தவர்
5. நைற்றிங்கேல் அம்மையாருக்கு பிறிதொரு பெயர் கொடுத்த உபகரணம்
6. ------------ க்குப்பிறந்தது பூனையாகுமா?
7. கூடிக்குலாவுதல் 8. விளையாட்டுப்பொருளொன்று
9. பகுதி 10. இல்லத்தை ஆழ்பவள்
11. வினா என்பதன் எதிர்ப்பதம் 13. உடன்பாடு
4. மனிதனை நெறிப்படுத்தத் தோன்றியது.
15. தங்கையின் எதிர்ப்பதம்
16. காலில் கட்டி நடனமாடுவது (குழம்பியுள்ளது) 17. விதவை
19. விரோதம் 21. உலகநாயகன் 25. உயிரிலும் மேலானது
26. வலிமைக்கு உதாரணமானது
29. மகவு (திரும்பியுள்ளது) 30. மழைக்கு உதவுவது.
31. தன்மை ஒருமைச்சொல் ஒன்று 32. அழு என்பதன் ஒத்தபதம்

**இல. 20 இல் ரூ. 250/= பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்**

ரோஜிதா ஜீசகுமார்,
33/7, அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

ஜெ. மோகனரஞ்சிதம்,
இராசேந்திரம் குளம்,
வவுனியா.


திருமதி துரைராஜா,
காரைதீவு 5.

**சரியான விடைகளை எழுதி பாராட்டுபெறுபவர்கள்**

ஜெயந்திகாந்திரோய்,
அல்வாய்.

சி. யசோதா,
அம்பன், குடத்தனை.

திருமதி சிதம்பரநாதன்,
கோப்பாய்.



அனுசரணை

**Be Es En Traders**

அச்சக பொருட்களின்
மொத்த விற்பனையாளர்

Tel: +94 11 2348418

கட்டுரை ✍ செ. செல்வராஜா, ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்



# உலகக் கல்வி கருத்தரங்கு 2015 ஒரு பார்வை




அடுத்து வரும் 15 ஆண்டுகளுக்கு, உலகின் கல்வி செயல் நெறிகளைத் தீர்மானிப்பதில், 2015 ஆம் ஆண்டு ஒரு பிரதான திருப்புமுனையாக அமையப்போகின்றது. கடந்த 15 ஆண்டுகளில், கல்வி மீது கூட்டிணைந்து செயற்படுவதில் சர்வதேச சமூகம் ஓரளவு ஒருமித்த சக்தியாகத் திகழ்ந்துள்ளது.

இவ்வாண்டில் இரண்டாவது ''உலகக் கல்வி கருத்தரங்கு,'' இடம்பெற்றுள்ளது. ''இக் கருத்தரங்கானது, 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப் பகுதியில், அதிகரித்த சமாதானமும் நிலைபேறானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளைக் கட்டியெழுப்பும் என எதிர்பார்க்கலாம்'' என இதன் ஏற்பாட்டாளர்கள் - அமைப்பாளர்கள் எதிர்வு கூறியிருந்தனர்.

'எனது உலகம் 2015' எனும் பெயரில், ஐ.நா. ஸ்தாபனம், மக்களிடம் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. 'அனைவருக்கும் கல்வி' என்கின்ற ஆறு பரந்த பரப்புக்களில்,

**1. முன்பள்ளிக் கல்வி**
**2. ஆரம்பக் கல்வி**
**3. இடை நிலைக் கல்வி**
**4. வளர்ந்தோர் கல்வி**
**5. பால்நிலைச் சமத்துவம்**
**6. தரமான கல்வி வழங்கல்**

மிகவும் பிரச்சினையாக உள்ள விடயங்களைத் தெரிவுக்குமாறு அதில் கோரப்பட்டிருந்தது. 'தரமான கல்வி' என்பது மிகவும் முதன்மையான பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வி ஆனது மிகவும் செல்வாக்குமிக்கது. தரமான கல்வியானது வறுமையைக் குறைத்து, பொருளாதார வளத்தைப் பெருக்கி, உள, உடல் நலத்தை மேம்படுத்தி மக்களை வலுவுள்ளவர்களாக்கி, நிலைபேண்தகு சுற்றுச் சூழலைப் பேணி, உலக சமாதானத்தை தரமுயர்த்துகின்றது. இதன் காரணமாக கல்வி மீது கூடுதல் கரிசனையுடன் அடுத்த கட்டக் கல்விக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கவேண்டியது அவசியமானதாகும்.

2015 ஆம் ஆண்டிற்குப் பின்னதான கல்வியில், (Global Citizenship Education (GCED)) பூகோள பிரஜைக்கான கல்வி முகிழ்த்தெழுவதுடன், அது முக்கியத்துவமும் பெறுமென எதிர்பார்க்கலாம். 'பூகோள பிரஜைக்கான கல்வி'யின் அடிநாதமாக 'சமாதானமானதும், நிலைபேண் தன்மையுள்ளதுமான சமூகத்தைக் கட்டியெழுப்புதல்' - எனும் எண்ணக்கரு திகழ்கின்றது. கற்பவர்கள், தாங்களே தங்களையும். தமது சமூகத்தையும் வலுமிக்கவர்களாகக் கட்டியெழுப்பும் மாற்றத்திற்கான கருவியாக இக் கல்வி அமைகின்றது. பன்மைத்துவத்தை - வேறுபாடுகளை - மதித்து, பொது நன்மைக்காக உலகினை கட்டியெழுப்ப, 'பூகோள பிரஜைக்கான கல்வி' அத்திபாரமாக அமைகின்றது. 'பூகோள பிரஜைக்கான கல்வி'யில் விருப்புடனான ஈடுபாடு மற்றும் பல்கலாசார தொடர்புகள் ஊடாக முன்னேற்றகரமான மாற்றங்கள் சாத்தியமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**உலகக் கல்விக் கருத்தரங்கு வரலாறு.**


'உலகக் கல்வி சமுதாயமானது', 2000 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், டாக்கா நகரில் உலகக் கல்விக் கருத்தரங்கிற்காக ஒன்றுகூடின. 1990 இல் தாய்லாந்து ஜொம்தியான் நகரில் ஏற்றுக்கொண்ட 'அனைவருக்கும் கல்வி' என்கின்ற உலகப் பிரகடனம் இங்கு மீள உறுதிப்படுத்தப்பட்டது. இதில் அனைவருக்கும் கல்விக்கான 6 பரப்புக்களினை உலக நாடுகள் அமுல்படுத்தும் கூட்டுப் பொறுப்பினை உறுதிசெய்தன.

இதற்குச் சில மாதங்களின் பின்னர், ஐ.நா.சபையில், புத்தாயிரமாம் ஆண்டு இலக்குகள், எட்டு வகுக்கப்பட்டு அதற்கமைய செயற்படத் தீர்மானிக்கப்பட்டன. அவை புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் - Millenium Development Goals - MDG - என பெயரிடப்பட்டது. அந்த எட்டு இலக்குகளில், தொடக்கக் கல்விக்கான வழிவகைகள் (இலக்கு MDG 2) மற்றும் கல்வியில் பால்நிலை சமத்துவத்தினைக் கருத்திற்கொண்டு, பால் நிலை சமத்துவமும் பெண்கள் வலுவூட்டலும் (இலக்கு MDG 3) விரிவாக விபரணப்படுத்தப்பட்டிருந்தன.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த இலக்குகளை அடைய, கடந்த 15 வருடங்களில் துரித மற்றும் பரந்துபட்ட கற்றல் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

**(தொடரும்...)**

# பக்கவிளைவற்ற ஒரே மருத்துவம் யோகாசனம்



5000 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் தோன்றிய உடற்பயிற்சி தியானமுறை யோகக் கலை ஆகும். அதில் யோகாசனம் குறிப்பாக உடற்பயிற்சியையும் நிலைகளையும் குறிக்கும். யோகம் என்ற சொல் சமஸ்கிருதச் சொல் ஆகும். ''யோகம் என்றால் அலையும் மனதை அலையாமல் ஒரு நேர்வழிப்படுத்தும் செயல்'' என்று எளிமையாகவும் உரைக்கின்றனர்.

ஆசனம் என்ற சொல்லுக்கு 'இருக்கை' என்பது பொருள். உடலை ஒரு நிலையில் குறிப்பிட்ட அளவு நேரம் இருக்கச்செய்யும் உடற்பயிற்சியையும் அவை சார்ந்த நிலைகளையும் குறிக்கும் சொல்லே யோகாசனம். தமிழில் இதை ஒக இருக்கை என்றழைக்கலாம்.

யோகாசனம் = யோகம் + ஆசனம், அதாவது, மனதை அலைபாயவிடாமல் ஒரு நிலைப்படுத்தி செய்யப்படும் உடற்பயிற்சி என்று பொருள். மனதை அலைபாயாமல் தடுப்பதற்கே பெரும்பாலான யோக உடற்பயிற்சிகளில் கண்களை மூடிக்கொள்கின்றனர். மேலும் யோகாசனங்கள் அனைத்தும் மானிட உடம்பில் உள்ள பூருப்பொருள்களுக்காகவே (தசை, எலும்பு, ஈரல்) செய்யப்படுகின்றன. சில யோகாசனங்கள் இரத்த ஓட்டத்தை சீர்படுத்தினாலும் அவை இரத்த ஓட்டத்திற்காக மட்டும் செய்யப்படும் பயிற்சி ஆகாது. இதைப்போலவே சில யோகாசனங்கள் சுவாசத்தைச் சீர்ப்படுத்தினாலும், சுவாசம் சீர்ப்படுத்தலுக்கு என்று சுவாசபந்தனம், பிராணயாமா போன்ற தனிப்பயிற்சிகள் உள்ளன. அதனால் யோகாசனம் என்பது உடற்பயிற்சியும் அவை சார்ந்தநிலைகளும் மட்டுமே.

இன்று உலக நாடுகள் அனைத்திற்கும் யோகக் கலையில் முன்னோடியாக திகழ்வது பாரதமே. உலகின் முதல் யோக குரு சிவனே ஆவார். அதிகமான இந்து கடவுள்களை பார்த்தீர்களானால் யோகநிலையிலேயே சித்திரிக்கப்பட்டிருக்கும். இதிகாச கதைகளின்படி அனுமான் யோக நிலையில் இருக்கும்போதே அவரிடம் பக்தர்கள் வரத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது. அஞ்சனேயர் கோவில் அதிகமான இடங்களில் யோகநிலையியே அனுமார் வீற்றிருப்பார். அதுபோல புத்தபெருமனும் விகாரைகளில் யோகநிலையியே அமைக்கப்பட்டிருக்கின்றது இவற்றைப் பார்க்கும்போது எல்லா மதங்களிலும் இறைவன் யோக நிலைகளில்தான் பக்தர்களுக்கு காட்சியளித்து பக்தர்களின் அருள் வழங்குகிறார்கள்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், அந்த நோயற்ற வாழ்வைப் பெறுவதற்கு நாம் சற்றேனும் சிந்திப்பதில்லை. வியாதிவந்து குனமடைவதைவிட வியாதி வராமலே தடுப்பது மிகமிக நல்லது. வியாதிவராமல் தடுப்பதிலும் வந்தபின் அதை களைவதிலும் யோகாசனம் உறுதுணை புரிகிறது.

**யோகாசனம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்.**

01. நரம்புகளின் சக்தியை அதிகரிக்கிறது.
02. அதிக உடல் எடையை மற்றும் சதையை குறைக்கிறது.
03. உடலை அழகாக்க உதவுகிறது.
04. மனதிற்கு சோர்வை நீக்கி சுறுசுறுப்பைத் தருகிறது.
05. கோபத்தைக் குறைக்கிறது.
06. இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது.
07. நோய்த் தடுப்பு சக்தியை அதிகரிக்கிறது.
08. சோம்பலை நீக்குகிறது.
09. சுவாச உறுப்புகளைப் பலப்படுத்துகிறது.
10. ஞாபகசக்தியை கூட்டுகிறது.
11. ஆயுளை அதிகரிக்கிறது.
12. ஆண்மையைக் கூட்டுகிறது.
13. ஆன்மீக உணர்வைப் பெருக்குகிறது.
14. சலிப்பை அகற்றுகிறது.
15. நாளமில்லா சுரப்பிகளை சீராக இயக்குகிறது.
16. யோகாசனம் தொடர்ந்து செய்யும்போது நாளடைவில் முகத்தில் தெய்வீக ஒளி கிடைக்கும்.

உணவுண்ட உடனே யோகாசனம் பயிலக்கூடாது. அதிக உணவுக்குப் பிறகு நான்கு மணி நேரமும், சிற்றுண்டிக்கு பிறகு இரண்டு மணி நேரமும் கழித்தே ஆசனம் பயிலவேண்டும். குளிப்பதற்கு முன்போ பின்போ ஆசனம் பயிலலாம். ஆனால், குளிப்பதற்கும் ஆசனதிற்கும் நடுவில் அரைமணிநேர அவகாசம் இருந்தால் நல்லது. ஆசனத்தின் ஒவ்வொரு நிலையிலும் உடலை தளர்த்துவது மிக அவசியம். ஆசனத்தின் உச்ச நிலையில் உடலின் எல்லா இருக்கங்களையும் அகற்றவும். ஒரு ஆசனத்திற்கும், அடுத்த ஆசனதிற்கும் இடையில் சில நிமிட ஓய்வு எடுத்துக்கொள்ளவும்.

ஆசனம் செய்து முடித்தபின் செய்தவரின் உடல் புத்துணர்ச்சியோடு இருக்கவேண்டும். வியர்த்தோ அல்லது களைப்படைந்தோ இருக்கக்கூடாது. எனவே நிதானமாக ஆசனம் பயிலவேண்டும்.

எவ்வளவு நேரம் ஆசனத்தின் பூரணநிலையில் இருக்க முடியுமோ அந்தளவே முயற்சிக்கவேண்டும். அதைவிட அதிகநேரம் இருக்க முயலக்கூடாது. பயிலபயில நேரத்தை அதிகரித்துக்கொள்ளலாம்.

வேகமாக முன்னேற தினமும் பயிற்சி செய்தல் அவசியம். யோகாசனத்தில் பல வகைகள் உண்டு. அடுத்துவரும் இதழ்களில் ஒவ்வொன்றாக பயில்வோம்.

**(தொடரும்...)**




# செப்டெம்பர் மாத இராசிபலன்

## *01.09.2015 தொடக்கம் 30.09.2015 வரை*

(மிகச் சுருக்கமாக உள்ள இந்த பலன்களை பார்த்து நடந்துகொள்ளுங்கள், கவனமாக இருங்கள்)

**மேடம்**

நிலுவை சேருதல், மீள்நிய மனம் பெற விண்ணப்பித்தல், நீதிமன்ற முடிவு சாதகமாக வருதல், தித்திப்பான செய்தி கிடைத்தல்.

**இடபம்**

பொருளாதார சுபீட்சம், ஆவணங்களை சரிபார்த்த பின்னரே பிரயாணத்தில் கால் பதித்தல், நட்புக்கெட்டுவிடல், காரியஞ் சாதித்தல்.

**மிதுனம்**

வெளியீடுகளில் ஆர்வம் காட்டுதல், விசாரணை, விவாகத்தை கைவிடல், பிள்ளைகளில் கவனம்.

**கடகம்**

பகை நட்பாதல், இடர்பாடு விலகல், போதை பாவனையை கைவிடல், அயல் நாடு செல்லல்.

**சிம்மம்**

பிள்ளைகளை கண்டித்தல், தனிவழி செல்லல் கவனம், கல்வியில் பின்னடைவு, சொத்து பிரச்சனை முடிவுக்கு வரல்.

**கன்னி**

வெளியூர் செல்லும் யோகம், முரண்பாடு விலகல், விபத்து எச்சரிக்கை, காசோலை திரும்ப வாய்ப்பு.

**துலாம்**

குருட்டு அதிஷ்டம், பிதா சுகம் பாதிப்பு, உறவுகள் விஜயம், பொறுப்பின்றி கடன் கொடுப்பதை நிறுத்தல்.

**விருச்சகம்**

ஒப்பந்தத்தை கைவிடல், சத்திர சிகிச்சை மேற்கொள்ளல், பகைமை ஏற்படல், பாராட்டு கிடைத்தல்.

**தனு**

எதிர்பாராத சுப காரியம், பிணக்கு நீங்குதல், மின்விபத்து ஏற்படல், பிரயாணம் ஏற்படல்.

**மகரம்**

புதிய ஜீவன் உருவாகும், சகோதர உதவி, பணத்தை மீளப் பெறல், மனைவியினால் மோசடி தவிர்ப்பு.

**கும்பம்**

மணவிலக்கு பெறும் யோசனையை கைவிடல், பிரயாணத்தில் விழிப்பு, போலிகளில் எச்சரிக்கை, புதிய நண்பர்களில் கவனம்.

**மீனம்**

அரசுப்பணி கிடைத்தல், பெற்றோர் நலம், பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்தல், புதிய இணைப்புக்கள் பொருத்துதல்.

# அடிமைக்கும் கொத்தடிமைக்கும் என்ன வித்தியாசம்?




**கேள்வி : கணவன் தன் மனைவியின் தொலைபேசி எண்ணை எப்படி தனது தொலைபேசியில் சேமித்து வைத்திருப்பான்?**

பதில் : திருமணமான புதிதில்
- My Life

ஒரு வருடம் கழித்து
- My Wife

இரண்டு வருடங்களுக்கு பிறகு
- Home


ஐந்து வருட முடிவில்
- Hitler

பத்து வருஷம் கழித்து
- Wrong Number



**கேள்வி : அடிமைக்கும் கொத்தடிமைக்கும் என்ன வித்தியாசம்?**

பதில் : ஒரு ஆணை காதலிக்கும்போது ஒரு பெண் அவனுக்கு அடிமை. ஒரு ஆணை திருமணம் செய்துவிட்டால் அவள் அவனுக்கு கொத்தடிமை.



**கேள்வி : காதலை நம்பலாமா? நம்ப கூடாதா?**

பதில் : காதலை நம்பியவன் சாமியார் (பித்தன்) ஆவான். காதலை நம்பாதவன் சம்சாரி (குடும்பத்தலைவன்) ஆவான்.

**கேள்வி : சோதிடர்களை நம்பலாமா அம்மு?**

பதில் : சோதிடர்களை சோதித்துத்தான் பார்க்கவேண்டும். சோதிடர்களை நம்பலாமா என்பதை முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவை கேட்டுத்தான் பாருங்களேன்.

**கேள்வி : பெண்கள் நாட்டின் கண்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மையா அம்மு?**

பதில் : ஆமாம். நாட்டில் பெண்கள் இல்லாவிடின் ஆண்கள் உருவாகவும் முடியாது வாழவும் முடியாது. ஆகவே பெண்கள் நாட்டின் கண்களாவர்.

**கேள்வி : ஒரு பெண் பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் எப்படி இருப்பாள்?**

பதில் : பிறந்த வீட்டில் பெண்ணாகவே இருப்பாள். புகுந்த வீட்டில் பெண்டாட்டியாக மாறிவிடுவாள்.

**சிறந்த பதில்களுக்கு ரூபா 100 றிலோட். உங்கள் பதில்களை எழுதுங்கள்**

1. அனுபவம் என்பது என்ன?
2. தேனைவிட இனிமையானது எது?
3. நண்பர்கள் என்பது யாரை?

**ஆகஸ்ட் மாத வெற்றியாளர்**


சி. சைலா

**அம்முவின் கேள்விகளுக்கான தெரிவு செய்யப்பட்ட சிறந்த விடைகள் :**

01. விவகாரத்துக்கு காரணம் திருமணம்.
02. தோல்விக்கு காரணம் முயற்சியின்மை.
03. வெற்றிக்கு காரணம் முதலில் பெற்ற தோல்வி.

வாசகர்கள் அனுப்பிய மேற்படி கேள்விகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு / ஈமெயில் முகவரிக்கு அனுப்பவும்.

# மனைவியின் மந்திரம்




கொஞ்ச நாட்களாக தன் கணவனின் போக்கில் ஏதோ மாற்றம் தெரிவதுபோல் உணர்ந்தாள் சகுந்தலா. திருமணமாகி இந்த இருபத்தைந்து வருடத்தில் இப்பொழுதுதான் இந்த மாற்றம்!

வாரத்திற்கு ஒரு முறை தலைக்குடை அடித்துக்கொள்வதும், டீசர்ட் போட்டுகொள்வதும், ஏதோ தன்னை இளைஞனாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதுபோல் நடையில் ஒரு மிடுக்கைக் கொண்டு வருவதும், அலுவலகம் தொடங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகவே கிளம்பிவிடுவதும்... இதெல்லாம் போன இரண்டு மாதத்திற்கு முன்புகூட இல்லை.

இந்த இரண்டு மாதமாகத்தான் இப்படி ஒரு மாற்றம். என்னவாக இருக்கும்? யோசித்தாள். யோசித்தவள் தொலைபேசியை எடுத்து அவன் வேலையின் எண்களை அழுத்தினாள். எதிர்முனையில் ஹலோ... எப்பொழுதும் பேசும் கோபாலன் குரல் இல்லாமல் வேறு ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது. அந்தப் பெண்ணின் குரலிலேயே அழகு தெரிந்தது.

போனை வைத்துவிட்டு கோபாலன் வீட்டிற்கு எண்களை அழுத்தினாள். எதிர்முனையில் கோபாலன் மனைவியிடம், என்னம்மா உன் கணவர் வேலைக்குப் போகலையா...? கேட்டாள்.

இல்லைம்மா. அவருக்கு இங்க வீட்டுக்குப் பக்கத்திலேயே வேலை கிடைச்சிடுச்சு. அதனால அந்த வேலையை விட்டுட்டு இங்கத்தான் ரெண்டு மாசமா வேலைக்குப் போறார். சார் சொல்லலைங்களா...? அவள் கேட்க, கணவனை விட்டுக் கொடுக்க முடியாமல் ம்... சொன்னாரு. நான் தான் மறந்துட்டேன் என்றபடி போனை வைத்தாள்.

அலுவலகத்தில் நடக்கும் மாற்றங்களை ஒன்றுவிடாமல் உடனே தன்னிடம் சொல்லி விடும் கணவன் இதை ஏன் தன்னிடம் சொல்லவில்லை...? யோசித்து முடிவெடுத்தாள்.

அவள் கணவனின் அலுவலகத்தில் நுழைந்தபோது, அவன் ஓர் அழகான இளம்பெண்ணிடம் ஏதோ ஒரு தாளைக் காட்டிச் சிரித்துச் சிரித்து ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். அவள் சற்று தயக்கத்துடனும், பயத்துடனும் அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அருகில் வந்து நின்ற இவளை அங்கே கண்டதும் அவனின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. அவளைப் பார்த்தாள். அவள் கையிலிருந்த தாள்களில் கவனத்தைச் செலுத்தியபடி தன் வேலையில் கவனமாக இருந்தாள்.

நீ எங்க இங்க? குரலில் சற்று அதிர்ச்சி கலந்த கோபமும் தெரிந்தது.

இங்க பக்கத்தல தான் ஷாப்பிங் வந்தேன். என் கிரெடிட் கார்டை மறந்து வீட்டில வச்சிட்டு வந்துட்டேன். அதான் உங்க கிட்ட வாங்கிக்கலாம்னு வந்தேன். கூசாமல் பொய்

சொன்னாள்...

வெளியே போறதுக்கு முன்னாடியே யோசிக் கிறது இல்ல. இப்ப பாரு. சரி. ஆபிஸ் ரூமுல தான் இருக்கு. வா. எடுத்துத்தர்றேன்.

அவன் பின்னாலே போய் கார்டை வாங்கிக் கொண்டவள், ஏங்க யாரு அந்த பொண்ணு புதுசா...? கேட்டாள்.

அந்த பொண்ணா... பேரு வசந்தா. கோபால் வேலையை விட்டு போயிட்டான். அந்த இடத்துல இந்த பொண்ணு தான் வேலை செய்யுது. பாவம் ஏழை பொண்ணு. குரலில் அனுதாபம்.

வேலையில எந்த மாற்றமானாலும் எங்கிட்ட சொல்லுவீங்க. ஆனால், கோபால் வேலையை விட்டுட்டு போனதையோ... இந்த பொண்ணு வேலைக்குச் சேர்ந்ததையோ எங்கிட்ட ஒரு வார்த்தைக்கூட சொல்லவே இல்லையே நீங்க. ஏன்...? அவள் கேட்டதும்...

ஏதாவது டென்ஷன்னுல மறந்துட்டு இருப் பேன். ஏன் எல்லாத்தையும் உங்கிட்ட சொல்ல னுமா? கடுகடுப்பாக கேட்டான்.

அவனின் கோபம் புரிந்தது.

அதுக்கில்லைங்க. அந்த பொண்ணைப் பார்த் தா... இருபது வருஷத்துக்கு முன்னாடி எனக்கு ஒரு பெண் குழந்தை இறந்தே பிறந்துதே... அந்த குழந்தை ஞாபகம் வருதுங்க. அந்த குழந்தை இருந்திருந்தால் இந்த பொண்ணு வயசுதான் இருக்கும். ஏழை பொண்ணுன்னு சொன்னீங்க. அவளுக்குக் கல்யாணம் கூடினா... இவளை நம்ம பொண்ணா நினைச்சி இவளுக்கு வேண்டியதைச் செய்யலாங்க... என்றாள் குரல் தழுதழுக்க.

அவள் பேச்சைக் கேட்டு சற்று நேரம் அசையா மல் நின்றிருந்த சுரேந்தர், தன் மனைவியை நிமிர்ந்து பார்த்தான். அவளுக்கு இருந்த இந்த மனம் நமக்கில்லையே என்று தன்னைத் தானே நொந்துகொண்டு, சரிமா... கவலைப்படாதே. நீ சொன்னது போலவே செஞ்சிடலாம் என்றான். தனது கண்களை திறந்துவிட்ட தன் மனைவியை அருகே இழுத்து முத்தமிட்டான். தன் நெஞ்சினில் இருந்த படபடப்பை தனது கணவனிடம் வெளிக் காட்டாது தடுமாற இருந்த தனது கணவனின் மனதை திருத்திவிட்டேனே என்ற மனத்திருப்தி யுடன் அவளும் அவனை கட்டியணைத்தாள். இப்பொழுது இருவருக்கும் மனம் இலேசாகியது.

**(தொடரும்...)**

---

***(37 ஆம் பக்கத் தொடர்ச்சி...)***

***கப்பல்துறையின் முதுபெரும் அநுபவ சாலியான துரைசாமி நவரத்தினம் (வயது 95) அவர்களின் உள்ளத்திலிருந்து---***

நான் முதலில் கப்பல் கட்டுற வேலைதான் செய்தனான். அண்ணாதான் கப்பலிலை வேலை. பிறகுதான் எனக்கும் ஆசைவந்தது. 1942க்கு முன் னர் வல்வையில் வாழ்ந்தவர்கள் கப்பல் தொழில் தான் செய்தவையள். இந்திய செட்டிமார் கப்பலை வைச்சு தொழில் நடத்திச்சினம். துறைமுக வேலைக் குப் பிறகு கப்பல் வேலைக்குப் போனன். பத்து வருசம் தொடர்ச்சியா கப்பலில வேலை செய்திருக் கிறன். ரங்கூன், மலேசியா, சிங்கப்பூர், மலபார் எல்லா இடமும் போய் வந்திருக்கிறன். அந்தக் காலத் தில காற்று, மழை எல்லாம் சொன்னசொன்ன காலத் தில நடக்கும். உயிரை கையில பிடிச்சிருந்த தருணங் களும் இருக்கு. கப்பல்ல சாப்பிட்ட ஆட்டுக்கறியை இப்பவும் மறக்க ஏலாது. புளுங்கல் அரிசியை ஊறவைச்சு அரைச்சு தேங்காய்ப் பாலில போட்டு காய்ச்சிற சோறும் ஆட்டுக் கறியும்... இப்ப எல் லாம் பெடியள் கப்பல் வேலைக்குப் போறது குறைவு. நாட்டு நிலைமையும் வெளிநாட்டு ஆர்வமும் காரண மாக இருக்கலாம். எங்கட மூதாதைய கப்பலோட் டிகள் தான் கோயில்கள் கட்டினவை. நிறைய சமூக காரியங்கள் செய்தவை. இன்றைய இளைஞர்க ளும் கப்பலோட்டிகளாகி தங்கட வீரத்தை கப்ப லோட்டுறதில காட்டவேணும் எண்டுறது தான் என்ர விருப்பம். நூறு கப்பலோட்டி வடபகுதியில இருந்தா எங்கட இடம் எப்பிடியோ வந்திடும்.

பாய்க்கப்பல் பற்றிய நுணுக்கமான விடயங்கள் அனைத்தும் தெரிந்த ஒரே ஒருவர் இவர்தான். பாய்மரக் கப்பல், இயந்திரப்படகு, நவீனகப்பல் எனும் மூன்று விதமான கப்பலிலும் பணியாற்றிய வரும் இவர் ஒருவரே. கப்பல் கட்டுவதில் மட்டு மல்ல வகை வகையான பட்டங்கள் செய்வதிலும் வல்லவர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டுகளில் நடந்த பட்டப் போட்டியில் ஆளுநரி டம் பதக்கமும் பெற்றுள்ளார். இளமைக் காலத்தில் சிறியரக கப்பலொன்றை உருவாக்கி கடலில் செலுத்தி சாதனை படைத்துள்ளார். அதே கப்பலை பட்டமாகச் செய்து விண்ணில் செலுத்தி பாராட் டும் பரிசும் பெற்றுள்ளார். அண்மையில் வடிவ மைத்து காட்சிப்படுத்தப்பட்ட அன்னபூரணி கப்ப லின் பாயை வடிவமைத்துக் கொடுத்தவர் இவரே.

தமிழ்த்தேசியத்தின் பற்றாளனான இவர் கட லோடிகளுக்கு மட்டுமல்ல வல்வெட்டித்துறைக் கும் ஒருபொக்கிசம் என்றால் அதுமிகையல்ல.

இன்றைய இளைஞர்களில் அதிகமானோர் கப்பல் துறையை கற்பதன் மூலம் அன்னியச் செலா வணியை அதிகப்படுத்தி நாட்டிற்கும் பெருமை தேடுவதுடன் சமூக விருத்தியையும் உண்டாக்க வேண்டுமென ஒளிஅரசியும் விரும்புகின்றாள். ⊖

# தன்னம்பிக்கை = வெற்றி

நீ நட்சத்திரமாக ஜொலிக்க விரும்பினால் நீ யார் என்பது முக்கியமல்ல. உன் மனது எதை விரும்புகிறதோ, அது நிச்சயம் உன்னை வந்து சேரும். கனவு காண்; பின்னால் கனவுகளை எண்ணங்கள் ஆக்கிப் பிறகு செய்கையாக்கு. சிந்தனை செய்வது பேரளவில் இருக்கவேண்டும். நமது தேசத்தின் சனத்தொகை நூறு கோடி. ஆகவே உன் சிந்தனைகள் நூறு கோடி மக்களுக்குத் தகுதி பெற்றதாக அமைய வேண்டும். அவ்வாறு செய்தால்தான் பேரளவில் நாம் முன்னேற முடியும். ''முன்னேறிவரும் ஒரு நாடு விண்வெளி இமயத்தின் உச்சியை தொடுவதாயினும் சரி அல்லது வாழ்க்கைப் பணியின் உச்சத்தை அடைவதாயினும் சரி, மேலே ஏறிச் செல்ல ஒருவருக்கு மிக்க மனவுறுதி தேவைப்படுகிறது.'' என்று அப்துல் கலாம் அவர்கள் தன்னம்பிக்கை மிக்க வரிகளை நமக்காக விட்டுச்சென்றிருக்கிறார். அந்தத் தன்னம்பிக்கை நம் ஒவ்வொருவரிடத்திலும் இருந்தால் நாமும் முன்னேறி நாட்டையும் முன்னேற்றமடைய வைக்கமுடியும். இவ்வாறான சாதனைகளை பலர் படைத்து நமக்கு வழிகாட்டிவருகிறார்கள்.

அந்தவகையில் கொல்கத்தாவில் இருந்து 1984 ஆம் ஆண்டு சண்டா சாவேரி புவல்கா என்னும் பெண் அவரது 17 ஆவது வயதில் திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்து வாழ்க்கையில் சாதிக்கவேண்டும் என்ற கனவுகளுடன் வீட்டைவிட்டு வெளியேறினார். தற்போது அவர் 30 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவில் பெரிய தொழிலதிபராக சாதித்து அவரது நாட்டுக்கு திரும்பியுள்ளார். தனக்கு உதவுவதாகக் கூறிய அமெரிக்கத் தம்பதியருடன் தங்கி துன்பங்களின் மத்தியிலும் வாழ்க்கையில் பல சாதனைகளை படைத்தாள் அந்தப்பெண். முப்பது வருடங்களுக்கு முன்னால் சாதிக்கவேண்டும் என்ற கனவோடு தனியாக புறப்பட்ட அந்தப் பெண் தற்போது ஒரு லட்சாதிபதி தொழில் முனைவோராக கொல்கத்தா வந்துள்ளார். இவர் பல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தற்போது முன்னோடியாக திகழ்வார் என்பதில் ஐயமில்லை.


அமெரிக்காவில் அழகு சாதன பொருட்களுக்காக பிரத்தியேக கடையை நடத்திவரும் இவர் இந்தியாவிலும் தனது உற்பத்திப் பொருளை சந்தைப்படுத்துவதற்கான முயற்சியில் தற்போது இறங்கியுள்ளார். அமெரிக்கா சென்று ஒரு மாதம் வரை அவரை அழைத்துச்சென்ற தம்பதியருடன் தங்கியிருந்த சண்டா அங்கிருந்த நோயாளிகளை கவனித்துக்கொள்ளும் பணியை ஏற்றுக் கொண்டார். படுக்கைப் புண்களுடன் சிரமப்பட்ட ஒருவரைக் கவனித்துக்கொள்ளும்போதுதான் இதற்கு மாற்றாக ஏதேனும் மருந்து கண்டுபிடிக்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு தோன்றியது. அதன்பின்னர் லொஸ்ஏஞ்சல்ஸ் சென்று கொல்



டெக் பல்கலைக்கழகத்தில் உயிரியல் படிப்பின் ஒரு பிரிவில் அவர் சேர்ந்தார். தனது கனவை நெருங்குவதாக அவர் உணர்ந்த சமயத்தில்தான் அவரே (சண்டா) இரத்தப் புற்று நோயால் பாதிக்கப்படடிருந்தது தெரியவந்தது.

மனம் தளராமல் நோயுடன் போராடி மீண்டுவந்த சண்டா நோயினால் சோகையாக வெளுத்திருந்த தனது தோலில் மீண்டும் மெருகேறுவதற்காக உருவாக்கிய ஒரு கிரீம் அவருக்கு பழைய வசீகரத்தைக் கொடுத்ததுடன் அவரது தொழிலுக்கான வழியையும் காட்டியது. பட்டப்படிப்பை முடித்த பின்னர் அழகு சாதனப் பொருட்கள் முதலீட்டாளர்கள் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோது அவரது தொழிலைத் தொடங்குவதற்கான முதலீடு உதவி அவருக்குக் கிடைத்தது. அதன்மூலம் அவர் தயாரித்த நீரிழிவு நோயாளிகளின் காயங்களை ஆற்றும் மருத்துவ கிரீம்களும், தோலின் பளபளப்பிற்கு உதவும் கிரீம்களும் மற்றும் முகத்திற்கு பொலிவைத் தரக்கூடிய கிரீம்களும் பிரபலமாகத் தொடங்கின.

இவற்றினால் எந்த பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என்பது அவரது தொழில்வெற்றிக்கு பக்கபலமாக இருந்தது. கொல்கத்தாவிலிருந்து தனது வெற்றிகரமான வாழ்க்கைக்காக தனது குடும்பத்தை விட்டு பிரிந்திருந்தாலும் மீண்டும் தனது குடும்பத்தினருடன் சண்டா இணைந்துகொண்டு இந்தியாவில் தனது விற்பனைப் பொருட்களை சந்தைப்படுத்திவருவதாக தெரிவித்திருக்கிறார். எனவே, சண்டா போன்று வாழ்வில் தன்னம்பிக்கையுடன் முயலுங்கள். வெற்றி உங்களுக்காக காத்திருக்கும்.



# பெண் தலைமைத்துவ சாதனை

முல்லைத்திவு மாவட்டத்தின் முள்ளிய வளை கிராமத்தில் எழில் கொஞ்சும் அழகில் என்னை பறிகொடுத்து அந்த வீதிகளில் பவனி வந்த காலப்பகுதியில் ஒரு குடும்பம் என்னை கவர்ந்திழுத்தது. மது தையலகம் எனப்பெயரிடப்பட்ட அந்த தையல் கடை என் மனப்பதிவுகளில் ஆழப்பதிந்துவிட்டது. பெண்ணைத் தலைமைத்துவமாகக் கொண்ட அந்தப்பெண்மணியின் முகம்கூட அன்றைய நாட்களில் நான் பார்க்கவில்லை. ஆனால் அவரது புதல்வர்களும் புதல்வியர்களும் படைத்த சாதனைகள்தான் அந்தத் தாயின் மீது என்னை ஆர்வம் கொள்ளவைத்தது. பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பல வாழ்வாதாரத்துக்காக அல்லல் படும் இன்றைய நிலையில் அன்று தன்னம் பிக்கையுடன் சுயதொழில் மேற்கொண்டு தன் குழந்தைச் செல்வங்களை சீரும் சிறப்புடனும் வளர்த்த அந்தப்பெண்மணியை ஒரு கணம் நினைக்கவைத்தது. அவருக்கு உற்ற துணை யாக அவரது மகன் ஒருவரும் இணைந்து தனது சகோதரர்களை உருவாக்குவதில் பெரும்பாடுபட்டுள்ளார். இந்தக்குடும்பம் நல்லதொரு தாய்மையையும் சகோதரத்துவத் தையும் எடுத்துக்காட்டுகிறது. பல வருடங் களுக்கு முன் பல்கலைக்கழகங்களில் அனை வரும் ஒரே நேரத்தில் படிக்கும்போது அவர் களின் பொருளாதார நிலை பற்றாக்குறை யாகவே இருந்தது. ஆனால், தாயின் முயற்சியால் நிச்சயம் நல்ல நிலையை அடைந்திருப்பார் கள் என்ற நினைவில் 6 வருடங்கள் கழித்து அந்தக் குடும்பத்தை தேடிச்சென்றேன். முள்ளியவளை மண்ணுக்கே இறைவனின் வரப்பிர சாதம் தான் அந்தக்குடும்பம் என்று சொல்லுமளவுக்கு அந்தக்குடும்பம் இன்று வெற்றியின் உச்சத்தை தொட்டுவிட்டது. அந்தவகையில் ஒளியரசியுடன் மது குடும்பத்தின் பகிர்வுகள்.

பெண்தலைமைத்துவ வெற்றியாளரான மௌன சாமி திருச்செல்வம் முல்லைத்தீவுக்கு பெருமை சேர்த்த இல்லத்தரசி.

எனது கணவரை 1987 ஆம் ஆண்டிலே நான் இழந்தேன். அந்த நேரத்தில் அந்த இழப்பை தாங்கிக்கொண்டு எனது குழந்தைகளை சிறப்புடன் வளர்க்க எண்ணினேன். அந்த நேரத்தில் சுயதொழிலான தையலே எனது குடும்ப வாழ்வாதாரத்திற்கான தெரிவாக இருந்தது. தன்னம்பிக்கையுடன் முயன்றேன். எனது 7 குழந்தை களையும் நல்ல நிலைக்கு உருவாக்கி எதிர்காலத்தில் சிறந்த கல்விமான் களாக உருவாக்க வேண்டும் என்ற என் எண்ணம் வீண் போகவில்லை. இன்று அவர்கள் அனைவரும் சிறந்த கல்விமான்களாக உருவாகி சிறந்த நிலையில் இருக்கிறார்கள். எனது மகன் மதுசூதனன் என்னுடன் கூடவேயிருந்து சுயதொழிலில் ஈடுபட்டு எம் குடும்பம் நல்லதொரு குடும்பமாக வளர ஒத்துழைத்தார். திருச்செல்வம் அவர்களின் புதல்வர் களினதும் புதல்வியரினதும் கருத்து பகிர்வுகள்...

மதுவந்தி, பல்வைத்தியர் - அம்மாவிடமிருந்து கற்றுக்கொண்ட முதல் பாடம் தன்னம்பிக்கை.

மதுசூதனன், மது தையல்கடை உரிமையாளர் - இவ் வாறான உயர்ந்தொரு அம்மா வாழ்க்கையில் யாருக் கும் கிடைக்க மாட்டார். அம்மாவுடன் கைகோர்த்து என் சகோதரர்களை மிக உயர்ந்த நிலைக்கு வரவைத் தமை எனக்கு மிக சந்தோஷம்.

மதுவாணி, விவசாயபீட பட்டதாரி - அம்மாவைப் போல ஒரு மனத்திடம் உள்ள பெண்மணியை நான் எங்கும் காணவில்லை.

மதுவர்மன், பொறியியலாளர் - எங்கள் அம்மாவுக்கு நன்றிக்கடன் செலுத்த இந்த ஒரு ஜென்மம் போதாது.

மதுரகீதன், வைத்தியர் - என் வாழ்வில் எந்தத்துன்பம் வந்தாலும் அம்மாவை நினைத்துப்பார்ப்பேன். அவர் கற்றுத்தந்த முன்னுதாரணங்கள் வாழ்வில் என்றும் துணை நிற்கும். என் அம்மாவே என்றும் என் வழிகாட்டி.

மதுவதனன், பொறியியலாளர் - என் அம்மா என் வாழ்வில் எனக்கு கிடைத்த பொக்கிஷம். அவர் அருகில் இல்லாமல் வேலையின் நிமித்தம் பிரிந்து இருக்கும் போது தான் அதன் வலியை நிறைய உணர்கிறேன்.

மதுமொழி, ஆசிரியை - அம்மாவிற்கு நான் கடைக் குட்டி. இப்பொழுதும் அம்மாவுடனேயே இருப்பதில் மிக்க மகிழ்ச்சி. எப்பொழுதும் அம்மாவுடன் இருக்க வேண்டும் என்பதே எனது ஆவல். திருமதி மௌன சாமி திருச்செல்வம் அவர்களை இம்மாத மங்கையாக தெரிவுசெய்வதில் ஒளிஅரசி பெருமைகொள்வதுடன் அவரை வாழ்த்திநிற்கின்றோம்.

அதிகளவு பணச்செலவு தேவைப்படும் விளையாட்டுக்களில் ஹொக்கி விளையாட்டும் ஒன்றாகும். இவ்விளையாட்டானது உதைபந்தாட்டம் போலபலத்த இரசிகர்களைக் கொண்ட விளையாட்டாகவும் அமைகிறது. வடமாகாணத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய பாடசாலைகளே இவ் விளையாட்டை விளையாடி வருகின்றனர். அத்தோடு காயங்கள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதால் இவ்விளையாட்டிற்கு துணிந்து முன்வருவது குறைவு. ஆனால் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலைமாணவிகள் தமது மனவலிமையினால் இவ்விளையாட்டை தேர்ந்து எடுத்து சாதித்து வருகின்றனர். தற்போது இவர்கள் வடமாகாணத்தில் ஜொலிப்பதோடு தேசிய மட்டத்திலும் சாதனைகளை நிகழ்த்ததுடித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்குஅடித்தளம் இட்டவர் முன்னைநாள் அதிபரும் சித்திரபாட ஆசிரியரும் ஆகும்.

2011 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய திருமதி சிவராஜா கிருபாசக்தி மற்றும் சித்திரபாட ஆசிரியர் தில்லைநாதன் பகீரதன் ஆகியோரின் சிந்தனையில் இ. ராஜேஸ்வரன் என்பவரை பயிற்றுவிப்பாளராகக் கொண்டு குறைந்தளவு உபகரணங்களுடன் பாடசாலையில் ஹொக்கியினை ஆரம்பித்தனர். சென்ற ஆண்டுகளில் போட்டிகளில் பங்கு

# ஹொக்கியில் தடைகளைத் தாண்டும் பண்டத்தரிப்பு பெண்கள்

யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் தேசிய மட்ட ஹொக்கிப் போட்டியில் கலந்து கொள்ளும் 19 வயது ஹொக்கி அணியினர்



யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் தேசிய மட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் பாடசாலை 15 வயது பூப்பந்தாட்ட அணியினர்














பற்றியது அவர்களுக்கான பயிற்சி ஆட்டமாகவே அமைந்தது. இதனால் வெற்றி வாய்ப்புக்களும் கைநழுவிப் போய்க்கொண்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் உடற்கல்வி ஆசிரியராக இரத்தினசிங்கம் பரணீதரன் கடமை யேற்றார். அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் ஆகியோரின் கூட்டுமுயற்சியில் 2013 ஆம் ஆண்டு தமது சாதனைகளை பதிவு செய்யத்துணிந்தார்கள். இவ்வாண்டு வலயமாவட்ட போட்டிகளில் வெற்றியீட்டி மாகாணமட்டப் போட்டியிலும் 3 ஆம் இடத்தைப் பெற்று முதன்முதலில் தேசிய மட்டப் போட்டிகளிலும் கால் பதித்தனர்.

இதேவெற்றி 2014 ஆம் ஆண்டும் தொடர்ந்து தேசியமட்டத்தில் ஊவா விஞ்ஞானக் கல்லூரி மாணவர்களுடன் மோதி இரு கோல்கள் போட்டு காலிறுதி போட்டிக்கு முன்னேறினர். இருந்த போதும் அம்மோதலில் கௌரவமான தோல்வி யைத் தழுவிக்கொண்டனர். அப்போது இவ்வணி யின் அணித்தலைவியாகவும் கோல் காப்பாளரா கவும் செயற்பட்டார். சாந்தினி தனது அபாரதிற மையை வெளிக்காட்டினார். 2014 ஆம் ஆண்டு வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் 3 மாணவிகள் வட மாகாண அணிசார்பாக விளையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. 2015 ஆம் ஆண்டு பயிற்றுவிப்பாளர் ஜனார்த்தனன் மற்றும் பரணீதரன் ஆகியோரின் பங்களிப்புடன் போட்டி களில் பங்குபற்றினர். இவ்வாண்டு வலயம், மாவட்டம், மாகாணமட்ட போட்டிகளில் இறுதிப் போட்டிவரை முன்னேறி 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். மாகாணமட்ட இறுதிப் போட்டியில் கலந்துகொண்டு விளையாடிய மாணவர்கள் தமது சிறப்பான விளையாட்டை வெளிக்காட்டினர். யாழ்மாவட்ட அணி சார்பாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய போட்டியில் இறுதிவரை முன்னேறி அதில் வெற்றிபெற்று சாம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டனர். இவ் அணியில் 12 மாணவிகள் எமது பாடசாலை சார்பாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை பல சவால்களை எதிர்கொண்டே இந்நிலையை அடைந்துள்ளது. ஆரம்பத்தில் இவ் விளையாட் டின் போதும் உபகரணங்கள் இல்லாமல் யாழ் மாவட்ட ஹொக்கி சங்கத்தினரின் உதவியைப் பெற்றே இப்போட்டிகளில் பங்குபற்றினோம். அவர்களும் போட்டிகளுக்கு மாத்திரமே உபகரணங் களை தந்துதவினரேதவிர பயிற்சிகளுக்குத் தரமுன் வரவில்லை.

2013ம் ஆண்டு நடுப்பகுதியில் புதிய அதிபராக கடமையேற்ற திருமதி பஞ்சாட்சரம் புஸ்பராணி அவர்கள் எமது நிலையை கண்ணுற்று தனது ஒரு மாதகொடுப்பனவை எம்மிடம் தந்துகோல் காப்பாளருக்குத் தேவையான உபகரணங்களை வாங்குமாறு பணித்தார். இவ் உபகரணம் மட்டுமே எம்மிடம் இல்லாமல் இருந்தது. அதன் பின்னர் எமது அணிக்கு ஸ்திரமான ஒரு நிலையை ஏற்படுத்தினோம். எமது பயிற்சியையும் இடையூ றின்றி மேற்கொண்டோம். இருந்தபோதும் இவ்விளையாட்டிற்கு நிதிவளம் மேலும் தேவைப்பட்டது. வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ரூ. 50,000 ஐ எமக்கு தந்துதவினார். அதன் பின்னர் பெற்றோர்களின் பங்களிப்புடனும் ஓரளவு எமது தேவைகளை நிறைவு செய்தபோதும் மாணவர்களிற்கு சக்தி போதாமலிருப்பதாக நாம் உணர்கிறோம். இக்குறையை நீக்கும் முகமாக எமது பாடசாலை ஆசிரியர்களின் உதவியுடன் தின மும் காலை உணவாக கடலை போன்றவற்றை வழங்கி வருகின்றோம்.

இதனைவிட தனியார் கல்வி நிலையங் களுக்குச் செல்லும் மாணவர்கள் அதிகமாகக் காணப்படுவதால் வகுப்புகளை நிறுத்தி பயிற்சிக்கு அழைப்பதுபெரும் சவாலாக உள்ளது. வீராங்க னைகளும் பயிற்சி முடிந்து வீட்டிற்குச் சென்றதும் களைப்படைவதாகவும் காயங்கள் காரணமாக பெற்றோர் தடுப்பதாகவும் கூறுகின்றனர். இவைக ளைத் தாண்டியும் எமது பாடசாலை அடுத்த ஆண் டில் சிறப்புடன் திகழவேண்டும் என எண்ணிப் பயிற்சி கொடுத்து வருகின்றோம். தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியால் நடாத்தப்பட்ட பத்மநாதன் கிண்ணத்தை இரு தடவைகள் சுவீகரித்துள்ளனர். இதேபோல் பூப்பந்தாட்டத்திலும் தற்போது எமது கவனத்தைதிருப்பி சாதனைகள் படைத்து வருகின் றோம். காலத்திற்குகாலம் வரும் அதிபர்கள் விளையாட்டிற்கு பேருதவியாக உள்ளனர். அந்த வகையில் இவ்வாண்டு நடுப்பகுதியில் கடமை யைப் பொறுப்பேற்ற திருமதி தேவராஜா அவர் களும் உபஅதிபர் அவர்களும் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், பயிற்சியாளர், பெற்றோர்கள் என அனைவரது உதவியுடனும் சாதனைக்குத் தயாராகின்றனர் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள். இவர் களின் சாதனைப்பயணம் தொடர ஒளிஅரசியும் வாழ்த்துகின்றாள்.



# இருட்டில் வைத்த குறி

13

திகில் மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய

இவருக்கு மரணம் எப்படி ஏற்பட்டது?

மாரடைப்பு.

உடனே தகவல் தெரிந்திருந்தால் ஹொஸ்பிடலுக்கு கொண்டு வந்திருக்கலாமே. போமலினில் நனைத்திருக்கலாம். இப்போது பாருங்கள் உடம்பு விறைத்துப் போய்விட்டது.

வான் வேகம் பிடித்து கொண்டிருந்தது. வந்தவர்களில் ஒருவன் மீண்டும் கேட்டான். மெட்ராஸீக்கு எப்போது புறப்படுகிறீர்கள்.

இன்றைக்கே.

விமானத்துக்கு டிக்கெட் ஏற்பாடு செய்து விட்டீர்களா? ரைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிறைவற் லிமிட்டெட்டை இது விடயமாக ஏற்கனவே தொடர்புகொண்டு விட்டோம். அவர்கள் ஏற்பாடு செய்துதருவார்கள்.

வான் ஒரு பத்து நிமிடம் ஓடி பச்சைப் பசேலென்று மரங்கள் சூழ்ந்த அந்த ஹொஸ்பிடலின் பித்தளை கேட்டுக்குள் நுழைந்தது. கான்கிறீட் தரையில் நீளமாய் ஓடி முகப்பு வாசலில் போய் நின்றது.

வாசலில் பிரணவ் காத்திருந்தார். உடம்பில் கனமான கம்பளி கோட். முகத்தில் பதற்றமும் கவலையும் உட்கார்ந்திருந்தன. வானிலிருந்து இறங்கிய யோகேஷையும் புவனேஷையும் அவரே அவசரமாய் எதிர்கொண்டார். சொன்னார்.

டாக்டர் பிங்யெங் இன்னும் வரவில்லை.

வந்துவிடுவாரில்லையா?

வரவேண்டும். வராவிட்டால் விவகாரம் சிக்கலாகிவிடும்.

பிரணவ் நீங்கள் என்ன சொல்கிறீர்கள். பிங்யெங் தான் நமக்கு சாதகமாக போஸ்ட்மோட்டம் ரிப்போட்டும் டெத் சேட்டிபிக்கெட்டும் கொடுப்பார்.

மற்ற டாக்டர்கள்?

மார்த்தாண்டத்தை முறையாக போஸ்ட் மோட்டம் செய்துவிடுவார்கள்.

டாக்டர் பிங்யெங் வருகின்ற வரைக்கும் பொடியை வைத்திருக்க முடியாதா?

ஹொஸ்பிடல் நிர்வாகம் அனுமதிக்காது. பொடியை மோர்ச்சுவரி அறைக்கு கொண்டுபோவதற்குள் டாக்டர் பிங்யெங் வரவேண்டும். இல்லாவிட்டால்...

பிரணவ் பேச்சை முடிக்கவில்லை.

அந்தக் கார் ஹொஸ்பிடல் போர்டிகோவை நோக்கி வேகமாக பீறிட்டு வந்தது. மூன்று பேரும் நிமிர்ந்தார்கள்.

சிங்கப்பூர் பொலீஸ் பெட்ரோல் கார்.

பொலீஸ் பெட்ரோல் காரை பார்த்ததும் பிரணவ், யோகேஸ், புவனேஷ் மூன்று பேரும் வியர்க்க ஆரம்பித்தார்கள். பொலீஸ் காரினின்றும் நட்சத்திரப் பட்டைகள் மின்ன அந்தப் பொலீஸ் அதிகாரியும் சார்ஜெண்ட்டும் கீழே இறங்கினார்கள். இரண்டு பேருமே அபார உயரம். பார்வையில் மகாக் கூர்மை அதிகாரி பிரணவ்வையே பார்த்தபடி நெருங்கினார். கேட்டார் கூழாங்கல் குரலில்.

நீங்கள் மிஸ்டர் பிரணவ்? ஆமாம்.

கார்ப்பார்க்கிங்கில் நிறுத்தியிருக்கும் 5072 மொரீஸ் கார் உங்களுடையதுதானே?

ஆமாம்.

நேற்றைக்கு நீங்கள் சென்டோஸா போனீர்களா?

நான் போகவில்லை. என் காரை இந்த இந்திய நண்பர்களுக்கு கொடுத்திருந்தேன். அவர்கள் தான் போய்விட்டு வந்தார்கள்.

பொலீஸ் அதிகாரி யோகேஷிடம் திரும்பினார். நீங்கள்தான் செண்டோஸா போனீர்களா?

போகவில்லை. பாதி வழியில் திரும்பி விட்டோம்.

ஏன்?

எங்கள் தந்தைக்கு உடல்நலம் சரியில்லை.

இறந்தவர் அவர் தானா? ஆமாம்.

செண்டோஸாவுக்கு போனவர்கள் பாதி வழியிலேயே திரும்பிவிட்டதாகச் சொன்னீர்கள். பாதி வழி என்றால் எந்த இடத்திலிருந்து என்று சொல்ல முடியுமா?

எனக்கு சரியாக சொல்லத் தெரியவில்லை. நானும் என்னுடைய சகோதரனும் சிங்கப்பூருக்குப் புதியவர்கள்.

பொலீஸ் அதிகாரி புன்னகைத்தார். நான் இடத்தை சொல்கிறேன். சரியா என்று பாருங்கள். செண்டோஸா போகும் காட்ரோட்டின் ஓர் ஓரத்தில் காரை நிறுத்தியிருந்தீர்கள். அப்போது கல்லூரி மாணவ மணிகளோடு ஒரு வான் வந்தது. அவர்கள் வானை நிறுத்தி ஏதாவது உதவி வேண்டுமா என்று உங்களைக் கேட்டார்கள். நீங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டுக் காரைத்திருப்பிக் கொண்டு வந்தீர்கள்.

பொலீஸ் அதிகாரி சொல்ல சொல்ல...

யோகேஷின் இருதயம் வேகமான துடிப்பில் இருந்தது. அவர் தொடர்ந்து அழகான ஆங்கிலத்தில் சின்ன சின்ன வாக்கியங்களாக சொல்லிக் கொண்டே வந்தார். காரைத்திருப்பிக் கொண்டு வரும்போது எதிரே சிங்கப்பூர் பொலீஸ் கார் வந்தது. பொலீஸ் அதிகாரி உங்கள் காரை நிறுத்தினார். எதிரே வேகமாய் போன நீலக்கார் ஒன்றை பார்த்தீர்களா? என்று கேட்டார். நீங்கள் இல்லை என்று சொன்னீர்கள் சரியா?

யோகேஷ் பயமாக தலையாட்டினான். நீங்கள் சொன்ன அந்த இடத்திலிருந்து தான் காரைத்திருப்பிக்கொண்டு வந்தோம்.

நீங்கள் மிஸ்டர் யோகேஷ்?

ஆமாம்.

மிஸ்டர் யோகேஷ் உங்களிடமிருந்து எங்களுக்கு சில முக்கியான தகவல்கள் வேண்டும்.

கேளுங்கள் ஸார்.

நீங்கள் அந்தக் காரைப் பார்க்கவேயில்லையா?

இல்லை.

மிகமிக வேகமாகச் சென்ற காரை நீங்கள் பார்க்காமல் இருந்தது ஆச்சரியம்தான். சரி அடுத்த கேள்விக்கு வருகிறேன். நேற்றைய இரவு எட்டு மணிக்கு டீ.வி பார்த்தீர்களா?

பார்க்கவில்லை.

அந்த நீலக்கார் செண்டோஸா காட் ரோட்டில் விபத்துக்குள்ளாகியதை காட்டினார்கள். அது விபத்துக்குள்ளான இடம் எது என்று சொன்னால் நீங்கள் இன்னமும் ஆச்சரியப்படுவீர்கள். காட் ரோட்டீல் எங்கே உங்கள் காரை நிறுத்தியிருந்தீர்களோ அந்த இடத்தில் தான் விபத்து நடந்திருக்கிறது. விபத்து நடந்தபோது காலை 11மணி 34 நிமிடம்.

யோகேஷ் பதில் பேச முடியாமல் எச்சில் விழுங்க அதிகாரிகள் தொடர்ந்து சொன்னார். விபத்து நடந்த நேரத்தை எங்களால் அவ்வளவு துல்லியமாக சொல்லமுடிகிறது என்று யோசிக்கிறீர்களா யோகேஷ்? அது நிரம்பவும் சுலபம். விபத்துக்குள்ளான காரின் இடிபாடுகளை தேடிக்கண்டு பிடித்தபோது அந்தக்காரில் பொருத்தப்பட்டிருந்த ஒரு நொருங்கிய எலக்ரோனிக் கடிகாரம் 11.34 இல் நின்று போயிருந்தது.

பிரணவ் குறுக்கிட்டார். இவர்களிடமிருந்து நீங்கள் என்ன உண்மையை எதிர்பார்க்கிறீர்கள் ஸார்?

விபத்துக்குள்ளான அந்த நீலக்காரை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ அதனை மறைத்திருக்கிறார்கள். இவர்கள் விபத்து நடந்த ஸ்தலத்தில் இருந்தார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி? பிரணவ் கேட்க அதிகாரி புன்னகைத்தார்.

செண்டோஸாவில் நேற்றுக் கூட்டம் குறைவு. காட்ரோடு வழியாக வந்த எல்லா வாகனங்களையும் செண்டோஸாவில் விசாரித்தோம். வானில் வந்த கல்லூரி மாணவ - மாணவிகள் இந்த இந்திய நண்பர்கள் ஆக்ஸிடெண்ட் ஸ்பொட்டில் இருந்ததாக சொன்னார்கள். நீலக்காரை பின்தொடர்ந்து போன பொலீஸ் அதிகாரியும் இவர்களுடைய காரை மடக்கி விசாரித்திருக்கிறார். உங்கள் கார் நம்பரையும் கவனித்துக் குறித்து வைத்துக்கொண்டார். ஒரு மணி நேரத்துக்கு முன்னால் பொலீஸ் ஹெட்குவாட்டர்ஸில் அவரை நான் சந்தித்தபோது கார் நம்பரைக் கொடுத்தார். ட்ரபிக் செட்டில் கார் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரை வைத்து உங்கள் அட்ரஸை கண்டுபிடித்து வீட்டுக்கு போனோம். உங்கள் மனைவி இருந்தார்கள். நீங்கள் இங்கு இருக்கும் விபரத்தை சொன்னார்கள். உடனே வந்தோம்.

**(தொடரும்...)**

# மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி ?



எனவே, இறுக்கம் என்பது வாழ்க்கைக்கு மிகவும் தேவையான ஒன்று. வாழ்க்கைப் போராட்டங்களையும் சவால்களையும் சந்திப்பதற்கு இந்த இறுக்கம்தான் உதவியாக இருக்கின்றது. நமது உடலுக்கும் மனதுக்கும் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் அதன் விளைவாக நமது உடலில் விரைந்து பல வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த வேதியியல் மாற்றங்களின் விளைவாக உடல் நிலையிலும் மனநிலையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன.

நீங்கள் ஒரு நெருக்கடி அல்லது ஆபத்தை எதிர்கொள்ளும்போது அதை எதிர்த்து முரட்டுத்தனமாகப் போராடுகிறீர்கள். சாதாரண நிலையில் உங்களுக்கு இல்லாத பலம் அந்த வேளையில் உங்களுடைய தசைகளில் ஏற்பட்டிருப்பதை உணர்கிறீர்கள். இந்தப் பலம் திடீரென்று எப்படி உங்களுக்கு ஏற்படுகிறது ?

உடலில் ஏற்படுகின்ற வேதியியல் மாற்றங்களே இதற்குக் காரணம். ஒரு எடுத்துக்காட்டின் மூலம் இதை நாம் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு குழந்தை மரத்தடியில் விளையாடிக்கொண்டிருப்பதை அந்த குழந்தையின் தாய் சற்றுத் தொலைவில் நின்று பார்த்துக்கொண்டிருக்கின்றாள். அப்போது மரக்கிளை ஒன்று முறிந்து கீழே விழப்போவதை அவள் கவனிக்கின்றாள். ஒரு நொடி தாமதித்தால்கூட மரக்கிளை முறிந்து குழந்தையின் மேல் விழுந்துவிடும்.

அதைப் பார்த்த தாய் மிகுந்த வேகத்துடன் பாய்ந்து சென்று அந்த கனமான மரக்கிளையைத் தனது தோளில் தாங்கி குழந்தையின் உயிரைக் காப்பாற்றி விடுகிறாள். இனி இந்த நிகழ்ச்சி எப்படி நடைபெற்றது எனப் பார்ப்போம்.

குழந்தையின் மீது மரக்கிளை முறிந்து விழப்போவதைக் கவனித்தவுடன் குழந்தைக்கு ஆபத்து ஏற்படப்போகிறது என்னும் பய உணர்வு தாய்க்கு ஏற்படுகிறது.

நமது உடலுக்கும் மனதுக்கும் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் அதன் விளைவாக நமது உடலில் விரைந்து பல வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த வேதியியல் மாற்றங்களின் விளைவாக உடல்சிலையிலும், மனநிலையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன.

நீங்கள் ஒரு நெருக்கடி அல்லது ஆபத்தை எதிர்கொள்ளும் போது, அதை எதிர்த்து முரட்டுத்தனமாகப் போராடுகின்றீர்கள். சாதாரண நிலையில் உங்களுக்கு இல்லாத பலம் இப்போது உங்களுடைய தசைகளில் ஏற்பட்டிருப்பதை உணர்கிறீர்கள். இந்தப் பலம் திடீரென்று எப்படி ஏற்படுகின்றது ?

உடலில் ஏற்படுகின்ற வேதியியல் மாற்றங்களே இதற்குக் காரணம்.

ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதை நாம் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு குழந்நை மரத்தடியில் விளையாடிக்கொண்டிருப்பதை அந்தக் குழந்தையின் தாய் சற்றுத் தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்போது மரக்கிளை ஒன்று முறிந்து கீழே விழப்போவதை அவள் கவனிக்கிறாள். ஒரு நொடி தாமதத்தால் கூட மரக்கிளை முறிந்து குழந்தையின்மேல் விழுந்துவிடும்.

அதைப்பார்த்த தாய் மிகுந்த வேகத்துடன் பாய்ந்து சென்று அந்தக் கனமான மரக்கிளையை தனது தோளில் தாங்கி குழந்தையின் உயிரைக் காப்பாற்றி விடுகிறாள்.


இனி இந்த நிகழ்ச்சி எப்படி நடைப்பெற்றது என்பதைப் பார்ப்போம். குழந்தையின் மீது மரக்கிளை முறிந்து விழப்போவதைக் கவனித்தவுடன், குழந்தைக்கு ஆபத்து ஏற்படப்போகின்றது என்னும் பய உணர்வு தாய்க்கு ஏற்படுகின்றது.

இதனால், அவளுடைய உடலில் உடனடியாக பலவித வேதியியல் மாற்றங்கள் தூண்டி விடப்படுகின்றன. அதுவரை இல்லாத சக்தியை அவள் பெறுகிறாள், வழக்கத்தைவிட வேகமாக ஓடுகிறாள். கனமான மரக்கிளையை தனது தோளில் தாங்கி குழந்தையின் உயிரைக் காப்பாற்றி விடுகிறாள்.

இந்த மாற்றங்கள் அனைத்தும் நொடிப்பொழுதில் நிகழ்ந்து விடுகின்றன என்றாலும், பல்வேறு நிலைகளில்தான் இவை நிகழ்கின்றன.

(தொடரும்...)

01. பாடசாலை ஒன்றில் தரம் 11 மாணவர்களால் ஆக்கப்பட்ட அலங்கார பொருள் ஒன்றிக்கு பயன்படுத்தப்பட்ட உறுஞ்சிக் குழாய்களின் நீளங்கள் 0 - 5 , 5 - 10 , 10 -15 , 15 – 20 , 20 - 25 எனும் வகுப்பாயிடைகளில் பெறப்பட் குழாய்களின் எண்ணிக்கைகளைக் கொன்டு வரையப்பட்ட வட்ட வரைபு உருவில் தரப்பட்டுள்ளது. (நீளங்கள் cm ல் கானப்படுகின்றது)




**i.** 15 – 20 ஐக் குறிக்கும் கோணத்தின் ஆரைசிரையின் பருமன் யாது?

**ii.** பின்வரும் அட்டவணையை நிரப்புக

| துண்டின் நீளம் | 0 - 5 | 5 - 10 | 10 - 15 | 15 - 20 | 20 - 25 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | | | | | 18 |

**iii.** மேல் உள்ள அட்டவணையைக் கொண்டு திரள் மீடிறன் அட்டவணையைத் தயாரிப்பதன் மூலம் திரள் மீடிறன் வளையியை வரைக?

**iv.** இடையத்தைக் காண்க

**v.** காலணை இடைவீச்சைக் காண்க?

**02.** இருபடிச் சார்பு ஒன்றில் மாறி x இன் சில பெறுமானங்களை ஒத்த சார்பு y இன் பெறுமானங்களைக் கொன்ட பூரணமற்ற அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது



| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -8 | ..... | 0 | 1 | 0 | -3 | -8 |

**a. i.** சமச்சீர் அச்சைக் கருதுவதன் மூலம் x = -1 ஆகும் போது y இன் பெறுமானம் யாது?

**ii.** x அச்சின் வழியே 10 சிறிய சதுரங்களை ஒரு அலகாகவும் y அச்சின் வழியே 10 சிறிய சதுரங்களை ஒரு அலகாகவும் கொண்டு சார்பை வரைக.

**b.** உமது வரைபை பயண்படுத்தி

**i.** சார்பின் உயிர்ந்த பட்சப் பெறுமானத்தை எழுதுக?

**ii.** சார்பின் மூலகங்களுல் மிக உயர்நத பட்சப் பெறுமாணம் யாது?

**iii.** சார்பின் சமன்பாட்டை எழுதுக?

**iv.** சார்பானது மறையாக அதிகரித்துச் செல்லும் x இன் பெறுமான வீச்சை எழுதுக?

**v.** சார்பானது x அச்சின் வழியே நேர்த்திசையில் 2 அலகுகள் நகர்தப்படும் போது பெறப்படும் சார்பின் முலகங்களைக் காண்க?

**03.a.** பாடசாலை மைதானம் ஒன்றில் A ,B ,C எனும் மூன்று கொடிக்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. A இலிருந்து B வடகிழக்குத் திசையில் 40m தூரத்திலும் B இலிருந்து C $135^0$ திசைகோளில் 50m தூரத்திலும் கானப்படுகின்றது.


**i.** A இலிருந்து C இற்கான கிட்டியதூரம் $10\sqrt{34}$ m இனால் தரப்படும் எனக் காட்டுக

**ii.** 1cm இனால் 10m ஐக் குறிக்கும் அளவிடையைப் பயன்படுத்தி அளவிடைப்படத்தை வரைக?

**iii.** AC இன் உண்மை நீளத்தைக் கொன்டு $\sqrt{34}$ இன் பெறுமானத்தைக் காண்க?

**b.** நிலைக்குத்தாக நடப்பட்டுள்ள கம்பம் PQ ஆகும். கும்பத்தை நிலைக்குத்தாகப் பேனுவதற்கு A, B இலிருந்துகம்பிகள் பிணைக்கப்பட்டு கம்பத்தல் உள்ள C ,D எனும் புள்ளகளுடன் பிணைக்கப்ட்டுளளது.

AP= 10m , PB = 16m ,CQ = 5m , DQ =2m ஆகும்.




**i.** கம்பத்தின் உயரம் யாது?

**ii.** கம்பி BD ஆனது தரையுடன் அமைக்கும் கோணம் யாது?

**04.** அடிமட்டம் (cm /mm) கவராயம் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டியும்

**i.** AB = 5.5cm , $A\hat{B}C = 75^0$ ஆகவும் செங்குத்துயரம் 4cmஆகவுமுள்ள முக்கோணி ABC ஐ அமைக்குக


**ii.** AC // BD ஆகுமாறும் B ,C இலிருந்து சமதூரத்தில் உள்ளதுமான புள்ளி D ஐப் பெற்று நாற்பக்கல் ABDC ஐ பூரணப்படுத்துக?

**iii.** CD = 6.4 cm ஆகுமாறு பக்கம் CD ஐ E வரை நீட்டுக

**iv.** பக்கம் AB I B இல் தொட்டுக்கொண்டும் C இனூடு செல்வதுமான வட்டத்தை வரைக?

**v.** E இலிருந்து வட்டத்திற்கு வரையத்தக்க தொடலிகளை வரைக? நீளத்தை அளந்து எழுதுக?

**05.** 10 மீற்றர் நீளமான படலை ஒன்றைச் செய்வதற்கு உலோகக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஓவ்வொரு மீற்றர் இடைவெளியிலும் குழாய்கள் பொருத்தப்படுகின்றது. பயன்படுத்தப்பட்ட மிகப் பெரிய குழாயின் நீளம் 1.8 மீற்றராகும். அடுத்தடுத்த குழாய்களுகக்கிடையிலான நீள வித்தியாசம் 15cm ஆகும். புடலையின் பரும்படிப்படம் உருவில் காட்டப்பட்டுள்ளது.




**i.** பயன்படுத்திய குழாய்களின் எண்ணிக்கை யாது?

**ii.** முதல் நான்கு குழாய்களின் நீளங்களை ஓர் எண் தொடராகத் தருக?

**iii.** தொடரின் n ம் உறுப்பு 5(3n +5) இனால் தரப்படும் எனக் காட்டுக?

**iv.** பயன்படுத்திய குழாய்களின் மொத்த நீளங்களைக்ட காண்க?

**v.** மேலே (iv) இல் பெற்ற கூட்டுத்தொகையைக் கொண்டு கீழ் உள்ள எண் தொடரின் முதல் 11 உறுப்புக்களின் கூட்டத்தொகையைக் காண்க?

$$\frac{40}{11}, \frac{55}{11}, \frac{70}{11}, \frac{85}{11}$$


**06.** பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 06 இற்கு மாணவர்களைச் சேர்பதற்கு அவர்கள் எழுத்துப்பரீட்சை ஒன்றிக்கும் நேர்முகப்பரீட்சை ஒன்றிக்கும் தோற்றுதல் வேண்டும். இப்பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் சித்தியடைந்த தகவலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அட்வணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | நேர்முகப் பரீட்சை | |
|---|---|---|---|
| | | சித்தி | சித்தியின்மை |
| எழுதுச் பரீட்சை | சித்தி | 43 | 20 |
| | சித்தியின்மை | 12 | 08 |

**i.** இவ்விரு பரீட்சையிலலும் சித்தியடைந்தோர் எத்தனை பேர்?

**ii.** இவற்றுள் ஏதாவது ஒன்றில் மட்டும் சித்தியுடைந்தோர் எத்தனை பேர்?


**iii.** தரவுகளைக் கொண்டு கீழ் உள்ள வென்உருவை பூரணப்படுத்துக?




**iv.** நேர்முகப்பரீட்ரீட்சையில் சித்தியடையாதவர்களுல் 30% ஆன மாணவர்களும் இப்பாடசாலையில் தரம் 06 இல் சேர்கப்பட்டனர் எனின் அப்பாடசாலையில் தரம் 06 இல் அனுமதி பெற்றவர்களின் எண்ணிக்கை யாது?

**v.** இவ்விருபரீட்சையில் சித்தியடைந்தவர்களும் எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்ப சையில் சித்தியடைந்தோர் அடங்கும் பிரதேசத்தை வெண் உருவில் நிழற்றிக் காட்டுக?

**07.** ABCD ஓர் இணைரமாகும். AB = 4x-2 உம் CQ =2x உம் ஆகும். பக்கம் AB இல் புள்ளி P ஆனது AP = x + 4 ஆகுமாறு உள்ளது.




**i.** BP நீளத்தை x இன் சார்பில் எழுதுக?

**ii.** முக்கோணியின் பரப்ளவிற்கான கோவை ஒன்றை x இன் சார்பில் எழுதுக,

**iii.** BPC இன் பரப்பளவு 12 $cm^2$ எனின் $x^2$ -2x -4 = 0 எனக் காட்டுக?

**iv.** x இன் பெறுமானம் $1 \pm \sqrt{5}$ இனால் தரப்படும் எனக் காட்டுக?

**v.** x இன் பெறமானத்தை கிட்டிய முதலாம் தசமத்திற்கு காண்பதன மூலம் யுடீஊனு இன் பரப்பளவைக் காண்க? ($\sqrt{5} = 2.23$ எனக் கொள்க )


சந்தேகங்களை
தெளிவுபடுத்த
077175934


**இவற்றுக்கான விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்.**


K. Hamamudeen (Sc.Td.Tr - SLPS)






01. கீழுள்ள அமைப்பில் இலையொன்றின் குறுக்கு வெட்டுப் பரப்பு முகத்தினைக் படம் 1 காட்டுகின்றது. இது A, B, C, D, E, F எனும் நான்கு வேறுபட்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. இலையில் உள்ள மூன்று வகையான கலவகைகள் படம் - 2 ல் தரப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் படம் 1 ல் காட்டப்பட்ட எவ்வெழுத்துக்களுக்குப் பொருத்தமானது என கண்டறிந்து அதன் ஆங்கில எழுத்தை உரிய கூட்டில் அ , ஆ , இ எனும் எழுத்துக்களுக்கு நேரே எழுதுக.




படம் - 1




படம் - 2

2. a. மேற்காட்டப்பட்டுள்ள A, B, C, D, E, F ஆகிய பகுதிகளில் ஒளித்தொகுப்பு நடைபெறக்கூடிய பகுதிகளைத் தருக.
   b. காரணம் யாது?
3. இங்கு E எனக் காட்டப்பட்டுள்ள பகுதியினால் நிறைவேற்றப்படும் தொழில் யாது?
4. உருவில் A எனக் காட்டப்பட்டுள்ள பகுதி வலிஸ்னேரியாத் தாவரத்தில் மெல்லியதாகவும், அலறி மரத்தில் தடிப்புடையதாகவும் காணப்படுவதற்கான காரணம் யாது?
5. தரம் 11 மாணவர் குழு ஒன்றினால் குறித்த ஒரு நோக்கத்திற்காக மேற்படி சோதனை செய்யப்பட்டது.




   a. இங்கு A , B , C என்பன எப் பதார்த்தங்களாக இருக்கலாம்?
   b. இப்பரிசோதனை செய்யப்பட்டதன் நோக்கம் என்ன?
   c. இங்கு ஒவ்வொரு படியும் செய்யப்பட்டதற்கான காரணத்தைத் தருக.
   d. படி 2 இல் உம்மால் அவதானிக்கக்கூடிய அவதானிப்புகள் 2 தருக.
   e. படி 4 ல் செய்யப்பட்ட பரிசோதனையின் முடிவில் உம்மால் வரக்கூடிய முடிவு யாது?

02. சுண்ணாம்புக் கல்லை மூலப்பொருளாகக்கொண்டு பல்வேறு கைத்தொழில் வகைகள் நடைபெறுகின்றது. இங்கு சில நடவடிக்கைகள் வரிப்படம் மூலம் காட்டப்பாட்டுள்ளது.




1. a. A , B , C , D என்பன எவ்வுற்பத்திகளாக இருக்கலாம்?
   b. உற்பத்தி A இனைப் பெறுவதற்காக சுண்ணாம்புக்கல் வெப்பமேற்றப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது.
      அ. இதன் வெப்பநிலை வீச்சு யாது?
      ஆ. சுடமுன்னர் சுண்ணாம்புக் கல் இடப்படும் முறையினைத் தருக.
      இ. இங்கு நடைபெறும் தாக்கத்திற்கான சமன்பாட்டைத் தருக.
      ஈ. சமன்பாட்டில் இருந்து 22 g $CO_2$ வாயுவைப் பெற தாக்கமுறத் தேவையான சுண்ணாம்புக் கல்லின் திணிவு யாது?
   c. அ. உற்பத்தி B இன் சூத்திரத்தைத் தருக.
      ஆ. இங்கு நடைபெறும் தாக்கம் வெப்பமாற்ற அடிப்படையில் எவ்வகையானது?
      இ. உற்பத்தி B இன் தெளிந்த கரைசலைக் கொண்டு இனங்காணக்கூடிய வாயு எது?
   d. அ. உற்பத்தி D பெறப்படும் பொழுது மேலும் சேர்க்க வேண்டிய பொருள் எது?
      ஆ. இது சேர்க்கப்படுவதனால் ஏற்படும் நன்மை யாது?

2. மகனீசிய நாடா வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் பின்வரும் கூற்றுகள் காணப்பட்டன.

* தீப்பற்றக்கூடியது.
* நீரோடு தாக்கமடையும் போது தீப்பற்றக்கூடிய வாயுவைத் தரும்.
* கண்ணுக்குப் பாதிப்பேற்படுத்தும் பிரகாசமான சுவாலையுடன் எரியும்.
* கொள்கலனை நன்கு மூடி உலர்ந்த இடத்தில் வைக்கவும்.
* தீப்பற்றின் தீயை அணைக்க உலர் மணலைப் பயன்படுத்தவும்.

$^{24}_{12}Mg$

a. இங்கு மகனீசியத்தின் குறியீட்டில் எழுதப்பட்டுள்ள 24, 12 எனும் இலக்கங்கள் குறிக்கும் பதங்களைத் தருக.

b. இதிலிருந்து நியூத்திரன்களின் எண்ணிக்கையைத் தருக.

c. இலத்திரன் கட்டமைப்பை எழுதுக.

d. கூற்றின்படி உலர் மணலைக் கொண்டு மகனீசியம் மூலம் ஏற்படும் தீயை அணைப்பதற்கான காரணத்தை விளக்குக.

e. இங்கு ஏற்படும் தீ எவ்வகையானது?

03. 1. ஓமின் விதியை வாய்ப்புப் பார்ப்பதற்காக மாணவர் குழு ஒன்றிற்கு பின்வரும் உபகரணங்கள் தரப்பட்டுள்ளன.

| அம்பியர் மானி, வோல்ட் மானி, ஆளி, மின்கலங்கள், மாறும் தடை |
|---|

a. அ. தேவையான உபகரணங்களை மாத்திரம் பயன்படுத்தி தொடுக்கும் கம்பிகளின் உதவியுடன் ஓமின் விதியை வாய்ப்புப் பார்ப்பதற்கான சுற்றுவரிப் படத்தை வரைக.


ஆ. பின்வரும் உபகரணங்களின் பயன்பாட்டைத் தருக.
1. அம்பியர் மானி 2. வோல்ட் மானி

இ. ஓமின் விதியைக் கூறுக.

ஈ. உம்மால் வரையப்பட்ட சுற்றுவரிப்படத்திற்கேற்ப பரிசோதனையின் போது விதியை வாய்ப்புப் பார்ப்பதற்காக பெறவேண்டிய தகவல்கள் யாவை?

உ. பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஓமின் விதிக்கான வரைபை வரைக.

b. கிரிக்கட் மட்டை ஒன்றிலுள்ள மூன்று தானங்கள் A,B,C படத்தில் காட்டப்பட்டுள்ளது. இரு விக்கட்டுக்களுக்கிடையில் உள்ள தூரம் 20 m. ஒரு விக்கட்டில் இருந்து மறு விக்கட்டை அடைந்தால் ஒரு ஓட்டம் (1 Run) கிடைக்கும்.





அ. ஒரு வீரன் பந்தை குறைந்த விசையுடன் நேர்த்தியாக அடிப்பதற்கு பந்து மட்டையில் எப்புள்ளியில் படல் வேண்டும்?

ஆ. பந்தை அடித்த வீரர் இரண்டு ஓட்டங்களைப் பெற்றார் எனின்
1. அவரது இடப்பெயர்ச்சி யாது?
2. அவர் ஓடிய தூரம் யாது?
3. அத்தூரத்தை அவர் ஓடுவதற்கு 8 செக்கன்கள் எடுத்தது எனின் அவரது சராசரிக் கதி யாது?

இ. எறியப்பட்ட பந்தை 30 N விசையைப் பயன்படுத்தி அடித்தபோது 90 m தூரம் ஓடி ஓய்வடைந்தது. இதன்போது பந்தினால் செய்யப்பட்ட வேலை யாது?

2. மாணவன் ஒருவனால் கண்காட்சிக்காக அமைக்கப்பட்ட ஒரு ஒலியைப் பிறப்பிக்கும் கருவியின் படம் தரப்பட்டுள்ளது. இங்கு இழையைத் தட்டும் போது ஒலி பிறப்பிக்கப்படுகின்றது.





சந்தேகங்களை
தெளிவுபடுத்த
075902490


a. சடப்பொருட்களின் அதிர்வில் தோன்றும் அலை எவ்வாறு அழைக்கப்படும்?

b. நீர் மேலே கூறிய அலை தவிர வெற்றிடத்தில் பயணம் செய்யக்கூடிய அலை எது?

c. இங்கு உருவாகும் ஒலியின் சுருதியை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் 2 தருக.


d. ஒலியின் சிறப்பியல்புகளில் சுருதி தவிர்ந்த ஏனைய இரு இயல்புகளையும் தருக.

e. வளியில் ஒலியின் வேகம் 340 m/s எனக் கொண்டு உருவாகும் அலையின் நீளம் 0.4 m எனவும் கொண்டு அவ்வலையின் மீடிறனைக் கணிக்க.

**இவற்றுக்கான விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**







1. Don't tease others

1. மற்றவர்களைக் கேலி செய்யாதே.



2. Throw rubbish in the dustbin

2. குப்பைகளைக் குப்பைக்கூடையில் எறியுங்கள்.



3. Be friendly

3. நட்புடன் இருங்கள்.

## தமிழ் பாட்டு

மயிலே, மயிலே ஆடி வா
மக்காச் சோளம் தருகிறேன்
குயிலே, குயிலே பாடி வா
கொவ்வைப் பழங்கள் தருகிறேன்

பச்சைக் கிளியே பறந்து வா
பழுத்த கொய்யா தருகிறேன்
சிட்டுக் குருவி நடந்து வா
சட்டை போட்டு விடுகிறேன்.

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்
மாடப் புறாவே இறங்கி வா
மடியில் குந்திப் பேசலாம்.

## NURSARY RHYMES


Balloons can fly. I wonder why
They haven't any wings
I 'd like to know how far they 'd go.
If we should break their strings'
Some like them red while some instead
Prefer them green or blue
But I just find that any kind is good enough.

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செப்டெம்பர் 2015



பா.ஐஸ்வர்யன்



து.சேனுகா



கி.வைஷ்ணவி



நிருஜா



சா.நிறிஜன்



ர.தியறி



சி.அகல்யா



றொ.அபீனா

நெல்லியடி குளோபல் மெட்ரோ கம்பஸ் முன்பள்ளி



சி.கபிலன்



கோபி சகாப்தன்



வவுனியா திருச்சிலுவை கன்னியர் மடம் கனரா முன்பள்ளி



அ.அபர்நாத்



மு.ஆஸிப் முன்தஸர்



வவுனியா திருச்சிலுவை கன்னியர் மடம் கனரா முன்பள்ளி



அ.ஹர்நிஷா



ஓவியா

செப்டெம்பர் 2015

OLIARAZI

மகளிர் மாத சஞ்சிகை

# ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி

ඔලිඅරසි

நல்லதொரு குடும்பம்

ஒளி - 02 இதழ் - 10

பக்கங்கள் : 68 + viii

அரசியலோ பாலியலோ
கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பொழுதுபோக்கு

ரூபா 75

Top 4 in August



தன்னம்பிக்கை = வெற்றி



எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே

10 முறை ஹச் கடமையை நிறைவேற்றிய சாதனைப் பெண்மணி

மலரட்டும் சமாதானம்

O/L (கணிதம், விஞ்ஞானம்) எதிர்பார்க்கை வினாக்கள்


மாணவர்களுக்கான போட்டிகள் விபரம் உள்ளே பக்கம் 23

வாசகர்கள் அனைவருக்கும் ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்!



வடக்கின் வயலின் மங்கை

Free சுயதொழில் கலைகள் இணைப்பிதழ்



இளைஞர்களே எனது கனவு


நல்லூர் கந்தன் தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
கிரி எலக்ரோனிக் சூப்பர் மார்க்கெட்
Giri Electronic Super Market
இல. 286 கண்டி வீதி, வவுனியா
0776143500, 0245671354
விநியோக விருதுகளை வென்ற ஒரே நிறுவனம்
Dealer Convention 2015
INNOVEX
Giri Electronic Super Market - Vavuniya
நவீன உலகத்திற்கேற்ப நவீன முறையில் வடிமைக்கப்பட்ட இலத்திரனியல் பொருட்கள் மற்றும் தளபாட பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
விசேட சலுகைகள்
* பண்டிகைகால பரிசு மழை
* இலகு தவணைக் கொடுப்பனவு
* சம்பத் வங்கியின் Visa & Master ஆகியவற்றினை கொண்டு 6 மாதங்கள், 12 மாதங்கள், 18 மாதங்கள், 24 மாதங்கள் வட்டியில்லாத கடன்களை பயன்படுத்தி பொற்றுக் கொள்ளலாம்.